R 6,0
N15
2,20,138

ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ கருணைகர சுவாமிகள்

அருளிச்செய்த

# ...பநிடத மூலமும்

ஸ்ரீ. சாது இரத்தின சற்குருவின்

பாதசேகரார்கிய ஆசிரியர்

கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

இயற்றிய உரையும்.

இவை

ஷை செட்டியாரவர்களாலும்

ம. ஷண்முக முதலியாரவர்களாலும்

சென்னை—திருவல்லிக்கேணி

...நாபில் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1925 [0-10-0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1926
MADRAS

-வின், இந்நூல் தமிழில் வேதாந்த சாஸ்திராப்பியாசஞ் செய்து வருபவர் யாவராலும் பொன்னேபோற் போற்றப் பட்டு வருகின்றது. இந்நூற்பொருளைச் சற்குரு வாயிலாக மனவமைதியுடன் கேட்பவர் அதிசீக்கிரத்தில் வேதாந்த சாஸ்திரங்களினின்றும் மிகு முக்கியமாயறிதற்குரிய பொருளனைத்தையும் மிகு தெளிவாயறிதற்குரியவராவரென்பது இந்நூற்பொருளையூன்றி நோக்கும் உத்தம அதிகாரி புருடர்களுக்கு நன்கு விளங்குவதாம்.

இவ்வு[illegible]டதத்திற்கு இரண்டு உரைகளிருக்கின்றன: அவற்றுள், ஒன்று மொழிப்புரையாம்; மற்றொன்று ஈரூர் ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகள் அருளிச்செய்த விருத்தியுரையாம். இவ்விரண்டுரையும் மாணவர் எளிதிலுணர்தற்குரியவாய நடையி லின்மையின், இந்நூற்குப் பதவுரையொன்று சிறிது விரிவாகத் தெளிவாயெழுத வேண்டுமென்று மாணவர்க்கு இந்நூலைப் பாடஞ்சொல்லும்போ தெல்லாம் கூறிவந்தனன்; அஃது இந்த (1925) வருஷத்தி னாரம்பத்தில் சென்னை - கோமளேசுவரன் பேட்டையில் வசிக்கும் ஸ்ரீமான்கள் வி. அரங்கநாதம் பிள்ளை, கோ. ஆ. முத்துக்கந்தசாமி செட்டியார், கூ. மாணிக்கம் பிள்ளை, பொ. முருகேசம் பிள்ளை, கூ. பருவதராஜம் பிள்ளை முதலியவர்கள் இந்நூலைப் பாடங்கேட்டபோது ஸ்ரீ நடராஜப் பெருமானது திருவருளால் சில விசேடக்குறிப்புக்களுடன் ஒருவாறு முற்றுப்பெறுவதாயிற்று. அவர்கள் யான் கூறிய உபநிடதவுரையைக் கூறியவாறே சிறிதும் விடாதெழுதிக் கொண்டு, இவ்வுரையை யச்சிட்டு வெளியாக்கவேண்டு மென்று மென்னிடத்துப் பு[illegible]றுவாராயினர். அவர் தம் சுத்தசங்கற்[illegible]நிறைவேறுமாறு சென்[illegible] வேதாந்த சங்கத்

2,20138

தின் கிளைச் சங்க கௌரவ காரியதரிசிகளாய ஸ்ரீமத். ஆ. ஜெகந்நாத முதலியாரவர்களும், ஸ்ரீமத். டி. துரைசாமி நாயகரவர்களும் இவ்வுபநிடத வுரையை யச்சிட்டு, இவ்வேதாந்த சங்கத்தார்க்குப் பாடஞ்சொல்லல் வேண்டுமென்று குறிப்பிட்டு, அதனை யச்சிடுதற்கேற்ற பிரயத்தனமுஞ் செய்தனர்; அதனால், இவ்வுபநிடத வுரையை மூலத்துடனச்சிட்டு வெளியிடலானேன்; இவ்வுரைக்கு மிகுசாதனமாயிருந்த சாஸ்திரங்கள் விசாரசாகரம், தத்துவாநுசந்தானம், விருத்திப்பிரபாகரம், சித்தாந்த பிந்து, ஞானவாசிஷ்டம், ரிபுகீதை, பெருந்திரட்டு, கைவல்லிய நவநீத வேதாந்த பரிச்சேதம், வேதாந்த பதார்த்த மஞ்சூஷா முதலியனவாம். இவ்வுரையின்கண் வேண்டிய வளவாகப் பல நன்னூற் பிரமாணங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வுபநிடதச் செய்யுளின் சிலவற்றிற்கு உரை விரிவாகவெழுதப்பட்டிருக்கின்றது.

இதிற் பிழையுளதாயின், உலகம் பொறுக்க.

12—10—25.

கோ. வ.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு திருவடி வாழ்க.

---

## பிழை திருத்தம்.

| பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. |
|---|---|---|---|
| தாம் | தீர்ம் | 10 | 13 |
| யணர்தற் | புணர்தற் | 55 | 14 |

220138

உ

# விஷய அட்டவணை.

## பாயிரம்.


| | | பக்கம். |
|---|---|---|
| (1) | விநாயக வணக்கம் | 1 |
| (2) | குரு வணக்கம் | 4 |
| (3) | அவையடக்கம் | 6 |


## நூல்.


| | | |
|---|---|---|
| (1) | ஞாநசாதந நிலை | 8 |
| (2) | இதனை இஃது அறியுமெனல் | 11 |
| (3) | அறிபொருள் அறியப்படும்பொருள்களினியல்பு | 13 |
| (4) | விருத்தி ஞானத்திரய வியல்பு | 16 |
| (5) | ஞானி அஞ்ஞானிகளின் விருத்திபேத நிலைமை | 19 |
| (6) | உபாதி வைராக்கிய ஞானங்களின் பயன் | 22 |
| (7) | திரிபுடி இயல்பு | 29 |
| (8) | அஞ்ஞானதிகளினியல்பு | 36 |
| (9) | விருத்தியும் சீவனும் விபுவாதல் | 40 |
| (10) | விஷயமுதல் சாட்சிவரையில் ஒன்றற்கொன்று விசேடமாமாறு | 45 |
| (11) | அவஸ்தாத்திரய சாட்சி | 48 |
| (12) | விருத்திஞானத்திரயத்தால் அஞ்ஞானத்திரய நிவிர்த்தியின் நிலை | 51 |
| (13) | தத்துவோற்பத்தி லயக் கிரமம் | 55 |

| | | |
|---|---|---|
| (14) | பிரகிருதி முதலியவற்றி னிவிர்த்தி | 68 |
| (15) | பிரஹ்ம சப்தாவஸ்தை | 73 |
| (16) | அஷ்டப் பிரமாணம் | 78 |
| (17) | சீவ சப்தாவஸ்தை | 84 |
| (18) | தூலசரீரமுதல் பிரஹ்மம்வரைக்கும் திருஷ்டாந்தம் | 91 |
| (19) | துவம்பத தத்பதா நுபவம் | 99 |
| (20) | பஞ்சைக்யம் | 104 |
| (21) | அத்துவிதநிலை | 108 |
| (22) | ஜீவன் எதைத்தியானித்தாலும் அந்தமயமாவனெனல் | 113 |
| (23) | இதற்கு இது விஷயமாமெனல் | 118 |
| (24) | தாதாத்மியத்திரயம் | 123 |
| (25) | பஞ்சகோசதாதாத்மியம் | 131 |
| (26) | சாட்சி சரீரத்திரய விலட்சணமெனல் | 138 |
| (27) | வஸ்துவை அணுவுக்கணுவெனல் | 143 |
| (28) | வஸ்துவை மகத்துக்கு மகத்தெனல் | 151 |
| (29) | ஸ்தூலதேகாதி நீக்கத்தில் சுவரூபம் பிரகாசமாமெனல் | 157 |
| (30) | அஞ்ஞானம் நீங்குமுறை. | 161 |
| (31) | முத்தர் பெத்தரிலக்கணம். | 166 |
| (32) | அஞ்ஞான ஞானங்களி னிலக்கணம். | 170 |
| | தங் குருவைப் புகழ்தல் | 173 |


ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நமஃ.

# உபநிடதம்

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

சொல்லவேண்டிய ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு அதன்பொருட்டு வேறு ஒன்றைச் சொல்லுவது பாயிரமாம்.

### விநாயக வணக்கம்.

1. மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான் கருப்பூர விளக்குப் போலென், பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா னருளுடையான் பொறியைந் தானு, மையுடைய மனத்தானு மயக்குடையார் மதங்களைத்தா மதங்க ளாக்குங், கையுடைய முகமுடையா னகமுடையான் றனைக்கருத்தி லிருத்தல் செய்வாம்.

(இதன் பொருள்.) மெய்யுடைய - மெய்யுணர்ச்சியுடைய, அடியார்மேல் - அடியாரிடத்து, விருப்புடையான் - விருப்பமுடையவன், கருப்பூர விளக்குப் போல் - கருப்பூர தீபம் (கெடுவது) போல, என்பொய்யுடைய - என் பொய்யுணர்ச்சியானது கெட, அருள் - (எனக்கு) உபதேசித்த, போதப் பொருளுடையான் - தத்துவ ஞானமாகிய பொருளையுடையவன், அருளுடையான் - (யாவரிடத்தும்) கருணையுடையவன், பொறி ஐந்தாலும் - சுரோத்திர முதலிய இந்திரியமைந்தாலும், மையுடைய மனத்தாலும் - காமாதிக் குற்றங்களுடைய மனத்தாலும், மயக்குடையார் - (திரமறுசகம் மெய்யென்றும் தேகம் நானென்றும் கொண்டுள்ள) விபரீத புத்தியுடையார், மதங்களை - (கற்பித்துக் கூறும்) மதபேதங்களை, அதங்களாக்கும் - பொய்யென்று நாசமாக்கும், கையுடைய முகமுடையான் - துதிக்கையுடைய திருமுகமுடையான் (பிரணவப்பொருளாயிருப்பவன்), அகமுடையான் - (யாவரது) உள்ளத்திலும் (யான்யானென்று) வியவகரித்திருப்பவன் யாவனோ, தன்னை - அவன் தன்னை (எடுத்துக்கொண்ட உபநிடதமென்னும் இந்நூல் தடையின்றி இனிது முடிதற்பொருட்டு), கருத்தில் - (யாம் எமது) சித்தத்தில், இருத்தல் செய்வாம் - நிலைபெறச் செய்து தியானிப்பாம், (என்றவாறு).

இது பிரணவப் பொருளினது தடத்த விலக்கணமும் நமஸ்கார ரூப மங்கலமும் கூறியதென்க. தாம் என்பது அசை நிலையாம். தாமென்பதை யசைநிலையாக்காது, 'தாமதங்களாக்கும்' என்றுகொண்டு, அதற்குத் 'தாமதகுணங்களுடையனவாகக்கூறும்' என்று பொருள் கூறினும் அது பொருந்தும்; அஃதாவது 'பொறியைந்தாலு மையுடைய மனத்தாலு மயக்குடையா' ராகிய சார்வாகர், பௌத்தர், சமணர் முதலாயினோர் கூறும் மத பேதங்கள் மயக்க மகற்றுவனவல்லவென்று இறைவன் தமது அடியார்களுக்குச் சற்குரு மூர்த்தியாகவெழுந்தருளி வந்து, உபதேசஞ் செய்து, அவற்றை யிகழ்ந்து கூறுதலாம்.



இந்திரியம் - ஞானேந்திரியங்கள்; அவை சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, கிராணம் என்பனவாம்.

அடியார் இலக்கணத்தை அஞ்ஞவதைப்பரணி

"தமர்பிற ரற்றார் சமயமு மற்றார்
சகவியல் பற்றார் தமையொழி பற்றார்
அமர்விட மற்றா ரறமற மற்றா
ரறிவயர் வற்றா ரவரடி யாரே" என்று கூறுகின்றது.

பிரணவப் பொருளாயுள்ள இறைவன் ஈசுவரனாகவும், குருமூர்த்தியாகவுமிருந்து அன்பர்க்கு அநுக்கிரகம் செய்கின்றானென்பது இதன் திரண்ட பொருளாம்

பிரணவப்பொருள் - விநாயகர்; இதனைப் "பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன், சரணவற் புதமலர் தலைக் கணிவோமே" என்று வெற்றிவேற்கை கூறுவதாலறிக.

இந்நூலாசிரியர் தாம் எடுத்துக்கொண்ட நூல் தடையின்றி யினிது முடிதற்பொருட்டுச் சிஷ்டாசாரத்தாற்பெற்ற இஷ்ட தெய்வ நமஸ்காரரூப மங்கலத்தைக் கூறினரென்பது இங்குணர் தற்பாலதாம். 1

### குருவணக்கம்.

2. நானிவன்று னவனென்றே நவின்றறியா தேயு
ழன்ற நாயி னேற்குத், தானமரு நிலையிதுவே தாந்தவுப
சாந்தமிது தானே தானு, மோனமொழி யிதுவெனநான்
மறையினுப நிடதமொழி முடிவு காட்டு, ஞானகுரு
தேசிகனை நாவகத்தும் பாவகத்து நவிற்று வாமே.

(இ-ள்.) நானிவன் - நானென்பதன் பொருள் இவனாகும், தானவன்-தானென்பதன் பொருள் அவனாகும், என்று நவின்று - என்று (சீவேச பேதத்தை விபரீத புத்தியால் கற்பித்துக்) கூறி, அறியாது - (உண்மைப் பொருளை) உணராது, உழன்ற நாயினேற்கு - (உண்மைப் பொருளை உணர ஆசிரியர் பலரிடத்தும் சென்று) அலைந்து திரிந்த நாயையொத்த இழிகுண முடையேனாகிய எனக்கு, தானமருநிலையிது - தானே தானாகப் பொருந்தும்நிலை இத்தன்மையது, வேதாந்த உபசாந்தமிது - வேதாந்த சாஸ்திர விசாரத்தாலுண்டாகும் உபசாந்தநிலை இத்தன்மையது, தானே தானும் - ஆத்மாவே சிவமாகும் (என்பதை விளக்கும்), மோனமொழியிது - மௌனவாக்கியமித்தன்மையது, என - என்று, (அவற்றை யான் ஐயந்திரிபின்றி யுணர), நான் மறையின் - நான்கு வேதங்களின் (முடிவாகிய), உபநிடத மொழி - உபநிடத வாக்கியங்களின், முடிவு - முடிவை, காட்டும் - உபதேசித்தருளிய, ஞான குருதேசிகனை - ஞான குரு மூர்த்தியை, நாவகத்தும் பாவகத்தும் - நாவினாலும் பாவினாலும், நவிற்றுவாம் - (இந்நூல் எவ்வகைத் தடையுமின்றி இனிது முடிதற்பொருட்டு நாம்) துதிப்பாம், (எ-று).



மோனமொழி - தத்துவமசி மகாவாக்கியம். நான் என்பது ஆத்மாவாம்; அவன் என்பது சிவமாம். நான் (ஆத்மா) வேறு, அவன் (சிவம்) வேறு என்னும் பேதபுத்தி யுடையவனா யிருந்து, சீவேசபேதத்தைக் கூறி வந்தேனென்பார் 'நானிவன்றானவ னென்றே நவின்று' என்று கூறினார். நாவகத்தும் பாவகத்தும் என்பன உருபுமயக்கமாம். பா - பாடல்.

வேதாந்தமாவது வேட்கை யொழிந்த இடமாம்.

“வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.”

என்று திருமந்திரங் கூறுகின்றது.

வேட்கை - ஆசை. உபசாந்தம் - வேட்கையின்மையா லுண்டாகும் சித்தசாந்தியாம். இது சிவசொரூபமாம் தேசிக மூர்த்தியின் உபதேச மகிமையை உணர்த்தியதென்க.

‘நாயினேற்கு’ என்று ஒருமைப்பாலாகக் கூறினவர் அதற்கேற்ப நவிற்றுவேனென்று ஒருமைப்பாலாகக் கூறாது ‘நவிற்றுவாம்’ என்று பன்மைப்பாலாகக் கூறினமை ஒருமைப்பாலில் பன்மைப்பால் வந்த (பால்) வழுவமைதியாம். இந்நூலாசிரியர் தமது ஞானகுரு தேசிகராகிய சௌபாக்கிய குருமூர்த்தியின் சீடராயுள்ளவரையும் தம்முடன் கூட்டிக்கொண்டு ‘நவிற்றுவாம்’ என்று கூறினாரென்க. தனித்தன்மைப் பன்மை வினை முற்று, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று என்னுமிரண்டனுள், ‘நவிற்றுவாம்’ என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றாம். ஏகார மூன்றும் அசைநிலையாம். 2

**அவையடக்கம்.**

3. ஓதுசுரு திகணான்கி னுபநிடத மெண்ணான்கி
னுரைக டோய்ந்து, போதுமொரு வேதாந்த சொரூபா
நந் தப்பெயரைப் புனைந்த நூலி, னீதிபெரி யோரு
ரைப்ப வதனையன்பொன் றில்லாத நெஞ்சி னால்யா,
னாதரவு கொடுபிதற்றி யெனதறியா மையையும்வெளி
யாக்கி னேனே.

(இ-ள்) ஓது - (அந்தணர்கள்) அத்தியயநம் செய்கின்ற, சுருதிகள் நான்கின் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களின் (முடிவாகிய), உபநிடதமெண்ணான்கின் - முப்பத்திரண்டு உபநிடதங்களின், உரைகள் - அர்த்தங்கள், தோய்ந்து - அமையப்பெற்று, போதும்-(அதிகாரிகள்) படித்து வருகின்ற, ஒரு-ஒப்பற்ற, வேதாந்த சொரூபாநந்தப் பெயரை - வேதாந்த சொரூபாநந்தமென்னும் பெயரினை, புனைந்த - தரித்துள்ள, நூலினீதி - ஞான சாஸ்திரத்தின் கிரமத்தை, பெரியோருரைப்ப - பெரியோர்கள் (எனக்கு அன்போடு) கூற, அதனை - அந்தக் கிரமத்தினை, அன்பொன்றில்லாத - அன்பென்பது சிறிதுமில்லாத, நெஞ்சினால் - மனத்தினாலே (ஆராய்ந்து), யானாதரவு கொடு - யான் அன்புகொண்டு, பிதற்றி - (உபநிடதமென்னும் பெயரோடு செய்யுளாகப்) பாடி, எனதறியாமையையும்-(அன்பில்லாமையேயன்றி)எனதுஅறிவின்மையையும்வெளியாக்கினேன்-(அறிஞர்முன்) வெளிப்படையாகச் செய்தேன். ()

அவையடக்கம் - அவையகத்தாரெல்லார்க்கும் வழிபடுகிளவி கூறுதலாம். அவையகத்தார் - சபைக்கணிருப்பவர். தொல்காப்பியம் “அவையடக் கியலேயரிறபத் தெரியின், வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென், றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே” என்று கூறுகின்றது.

வேதாந்தம் - வேதத்தின் அந்தம்; அது வேத - அந்தம் எனப் பிரிபடும். சொரூபாநந்த மென்பதன் பொருள் அறிவாநந்தம் என்பதாம்.

இதனால் வேதாந்த சொரூபாநந்தமென்னும் வடமொழி நூல் உபநிடதமென்னும் பெயரினாலே தமிழில் செய்யுள் வடிமாக மொழி பெயர்க்கப்பட்டதென்பது பெறப்படுவதாம். 3

## நூல்.

### ஞாந சாதந நிலை.

1. பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற்
குரங்காம் புத்திவிசா ரித்தறியும் பொலிவதனா லரவாந்,
தன்போல விலையெனலா லகங்கார மதமா தனைநிகராஞ்
சித்தமொரு தன்மையினா னாயா, மின்போலுஞ் சலன
மன மசையாம னிறுத்தி விசாரிக்கும் புத்தியினை
மெய்ப்பொருட்பால் விடுத்து, வன்போடு வருமகங்கா
ரத்தினையுங் கடிந்தால் வைத்தவிடத் திருந்துசித்த
மகத்துவமுந் தருமே.

(இ-ள்.) பொன்போல இலங்குமனம் - (அந்தக்கரணத்தினது சத்துவ குணத்தின் எழுச்சியினாலே) பொன்னைப் போல (மாசற்று) விளங்குகின்ற மனம், சஞ்சலத்தால் - (இராசத குணத்தின் எழுச்சியினால்) சஞ்சலமடைவதால், குரங்காம் - வானரம் போலப் பல பல வியாபாரங்களைச் செய்வதாம், புத்தி - புத்தியானது, விசாரித்தறியும் - (இஃது இத்தன்மையது அஃது அத்தன்மையது என்று விஷயங்களை) விசாரித்தறிகின்ற, பொலிவதனால் - (விஷய விசாரணையின்) மிகுதியினாலே, அரவாம் - (கண்ணால் நாமத்தையும் ரூபத்தையும் அறிகின்ற) பாம்புபோல நாமத்தையும் ரூபத்தையும் அறிவதாம், அகங்காரம் - அகங்கா



ரமானது, தன்போல இலையெனலால் - (தாமதகுணத்தின் எழுச்சியினாலே) தன்னைப்போல எவருமில்லையென்று தருக்கடைந்து இருத்தலாலே (தன்னை மறந்திருக்கின்ற), மதமாதனை நிகராம் - மதயானையைப் போல்வதாம், சித்தமொரு தன்மையினால் - சித்தமானது (இராசத குணத்தின் மிகுதிப்பாட்டினாலே தான் விரும்பிய விஷயங்களைப் பற்றி) ஒரு தன்மையாக நிற்றலினாலே, நாயாம் - (தான் விரும்பியவன் பின்னே சென்று நிற்கின்ற) நாய் போல்வதாம், (அதனால், அதிகாரிபுருஷன் சற்குருவின் அநுக்கிரகத்தால்), மின்போலும் - தோன்றிமறையும் மின்னலைப்போல விஷயங்களை நினைத்து நினைத்து மறக்கின்ற, சலனமனம் - சலனத்தையுடையமனத்தை, அசையாமல் நிறுத்தி - (தியானத்தினாலே) சலனமுறாவாறு நிறுத்தி, விசாரிக்கும் புத்தியினை - (விஷய) விசாரம் செய்கின்ற புத்தியை, மெய்ப்பொருள்பால் - மெய்ப்பொருளாகிய ஆத்மாவினிடத்திலே, விடுத்து - செல்லுமாறு செய்து, வன்போடுவரும் - (யானெனதென்னும்) அபிமானத்தோடு எழுகின்ற, அகங்காரத்தினையும் - அகங்காரத்தையும், கடிந்தால் - (புத்திபூர்வகமாக யான் அசங்கன் யான்நிர்க்குணன் யானேகன் என்றற்றொடக்கத்துப் பாவனையால்) ஒழித்து விடுவானாயின், சித்தம் - (அவனது) சித்தமானது (வாசனாத்திரயம் சிறிதுமின்றி), வைத்தவிடத்திருந்து - (அவன்) நிறுத்திய ஆத்மாவின்கண் பிறழாதிருந்து, மகத்துவமும் - (அவனுக்கு) சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியென்னும் மோட்ச வடிவப் பெருநிலையையும், தரும் - (தவறாது) தருவதாம், (எ-று).

அதிகாரி புருஷன் மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னு மிவற்றின் இயல்புகளைச் சாஸ்திர விசார வாயிலாகவும், தன் அநுபவ வாயிலாகவும் உள்ளவாறு அறிந்து, சற்குருவின் அநுக்கிரகத்தால் மனதைத் தியானத்தால் நிறுத்தி, புத்தியை ஆத்ம சொரூபத்திற் போக விடுத்து, அகங்காரமின்றி யிருப்பானாயின், அவனுக்குச் சித்தமானது மோட்சத்தைத் தவறாது தருவதற்குச் சிறந்த சாதனமாவதாமென்பது இதன் திரண்டபொருளாம்.

அந்தக்கரணத்தின் சத்துவகுண எழுச்சியினாலே வைராக்கியமயமான சாந்த விருத்தியும், இராசதகுண எழுச்சியினாலே இராகமயமான கோர விருத்தியும், தாமதகுண எழுச்சியினாலே அஞ்ஞானமயமான மூடவிருத்தியு முண்டாகின்றன வென்பது சாஸ்திரார்த்தாம்.

(1) வைராக்கியம், பொறுமை, உதார முதலியன சாந்த விருத்தியாம்;

(2) காமம், குரோதம், உலோப முதலியன கோரவிருத்தியாம்;

(3) மயக்கம், கலக்கம், பய முதலியன மூட விருத்தியாம்.

"கருதுமைந்தா குணமூன்று மூன்றிலொன்று கதித்தெழுந் தான் மற்றிரண்டுங் காந்து நிற்கும், தருமமிகுஞ் சத்துவமே லானபோது சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம், மருவு ரசோ குணமாகி லுலகதேக வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும், அருமகனே தமோகுணமே லானபோதி லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே."

"மனதுசத் துவசொரூப மற்றிரண்டும் வந்துகலந் தனவவற்றை மாற்றினாற்போம், தனதுசன்மார்க் கத்தைவிடா திருந்தபோது தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணா மஞ்சலனம் போம்போ னக்காற் களங்கமற்று நின்றவாகாசம் போலும், நினதுளமப் படியாமப் பிரமத் தோன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே."

என்று கைவல்ய நவநீதங் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.



## இதனை இஃது அறியுமெனல்.

2. சத்தமுத லைந்தனையும் பொறிகளறி யும்பொறிக டம்மைத் தானு, மொத்தகர ணமதறியுங் கரணத்தை யறியுமுயி ருயிரைத் தானு, நித்தியமா யிருந்தறியுஞ் சாட்சியகண் டாகார நீங்கி மேலா, மித்தனையும் பகுத்தறியு மறிவுவடி வாயிருப்ப தியல்ப தாமே. 1

(இ-ள்.) சத்தமுத லைந்தினையும் - சத்த முதலிய விஷயமைந்தினையும், பொறிகளறியும்-(முறையே) சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்கள் அறியும், பொறிகள் தம்மை-அந்த ஞானேந்திரியமைந்தினையும், தானாய் - (மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமென்னும் நான்கும்) தனது வடிவமாய், ஒத்த - ஒத்துள்ள, கரண

மது அறியும் - அந்தக்கரணம் அறியாநிற்கும், உயிர் - ஜீவன், கரணத்தை - அந்த அந்தக்கரணத்தை, அறியும் - அறியாநிற்கும், சாட்சி - ஜீவசாட்சியானது, உயிரைத்தானும் - அந்த ஜீவனையும், நித்தியமாய் - அழிவில்லாததாய், இருந்து - (ஒரு தன்மையதாக) இருந்து, அறியும் - அறியாநிற்கும், (என்பதை யுள்ளவாறுணர்ந்து), அகண்டாகாரமும் - (விஷயங்களை இந்திரியங்கள் அறிதல், இந்திரியங்களை அந்தக்கரணம் அறிதல், அந்தக்கரணத்தை ஜீவனறிதல், ஜீவனை ஜீவ சாட்சியறிதல் என்னும் வியவகாரமும் நான் பிரஹ்மமா யிருக்கின்றேன் என்னும்) அகண்டாகார விருத்தியும், நீங்கி - நீங்கி (நிற்க), மேலாய் - (இவற்றிற்கு) மேலாய், இத்தனையும்- (மேற்கூறிய) இவ்வளவையும், பகுத்தறியும் - பிரித்தறியும், அறிவு வடிவாய் - அறிவு வடிவமாய், இருப்பதே - இருப்பதே, இயல்பதாம்- (ஜீவன்முத்தர்களது) இயல்பாம், (எ-று).

சத்த முதலிய விஷயம்:—சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தமென்பனவாம். ஜீவசாட்சியானது ஜீவனை விளக்குதல் வாயிலாக அந்தக்கரணத்தையும், அந்தக்கரணத்தை விளக்குதல் வாயிலாக இந்திரியங்களையும், இந்திரியங்களை விளக்குதல் வாயிலாக விஷயங்களையும் விளங்கச் செய்கின்றது; அவை சாட்சியால் விளங்குவதன்றிப் பிறிதொன்றால் யதார்த்தமாக விளங்குவதில்லை; அந்தச் சாட்சி பிரஹ்ம சொரூபமாம்; அந்தப் பிரஹ்மமே நானென்னும் பாவனை அகண்டாகார விருத்தியாம்;



அவ்வகண்டாகார விருத்தியும் பந்த சாதனமாம்; இவ் வியவகாரமெல்லாம் நீங்கி நிற்க "பிரஞ்ஞானம் பிரஹ்மம்" என்னும் திரிபுடி நாட்டமின்றிப் பிரஞ்ஞான பிரஹ்மசொரூபமாக இருத்தலே ஜீவன் முத்தர்களது இயல்பாம் என்பது இதன் திரண்டபொருளாம்.

அகண்டாகாரமும் என்னும் இறந்தது தழீஇய வெச்சவும்மை தொக்குநின்றது. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

ஜீவனை ஜீவசாட்சி விளக்குதலாவது ஒருவிளக்கு, கண்ணாடியிலுள்ள தன் பிரதிபிம்ப விளக்கை விளக்குதல் போல்வதாம். விளக்குப் போல்வது - ஜீவசாட்சியாம்; கண்ணாடி போல்வது-அவித்தை அல்லது அந்தக்கரணமாம்; பிரதிபிம்பம் போல் 2
வது - ஜீவனும்.

### அறிபொருள் அறியப்படும் பொருள்களினியல்பு.
### (நம்மால் அறியப்படும் பொருள்கள் நாமாகா எனல்).

3. விடையமறிந் திடும்பொறிகள் விடய மாமோ
மிக்கபொறி யறிகரணம் பொறிக ளாமோ, வடையவறி
சீவனந்தக் கரண மாமோ வதனையறிந் திடுஞ்சாட்சி சீவ
னாமோ, தடையறவொன் றனையறியு மொன்று மேலாஞ்
சாட்சியையொன் றாலறியத் தகுமோ தானு, மிடையற
வொன் றிலகுமெனி லதனைக் காண்டற் கேதுண்டா
மதுவாகி யிருந்து காணே.

(இ-ள்.) விடயமறிந்திடும்-(சத்தமுதலிய) விஷயங்களை யறிகின்ற, பொறிகள்-சுரோத்திர முதலிய இந்திரியங்கள், விடயமாமோ - (சத்தமுதலிய) அவ்விஷயங்களாமோ (ஆகா), மிக்க - மேலாய, பொறி-சுரோத்திர முதலிய இந்திரியங்களை, அறி-அறிகின்ற, கரணம் - அந்தக்கரணங்கள், பொறிகளாமோ - அவ்விந்திரியங்களாமோ (ஆகா), அடைய - பொருந்த, அறி - (அந்தக்கரணங்களை) அறிகின்ற, சீவன் - ஜீவன், அந்தக்கரணமாமோ - அவ் வந்தக்கரணங்களாமோ (ஆகாது), அதனை - அந்த ஜீவனை, அறிந்திடும் - அறிகின்ற, சாட்சி - ஜீவசாட்சி, சீவனுமோ- ஜீவனுகுமா (ஆகாது), தடையற - தடையில்லாமல், ஒன்று - (இந்திரியம், அந்தக்கரணம், ஜீவன், சாட்சி என்னும் இவற்றுள்) ஒன்று, ஒன்றனை - பிறிதொன்றனை, அறியும்- அறியா நிற்கும், மேலாம் - (விஷயம், இந்திரியம், அந்தக்கரணம், சீவனென்னும் இவற்றிற் கெல்லாம்) மேலாயுள்ள, சாட்சி - ஜீவசாட்சியானது, ஒன்றால் - (இந்திரிய முதலியவற்றுள்) ஒன்றால், அறியத்தகுமோ - அறியத்தக்கதாமோ, (ஆகாது), (அதனால் ஞானபுத்திரா!உனக்கு), தானாய் - தானேதானாக,இடையற-தடையில்லாமல், ஒன்று-ஒப்பற்ற சாட்சி, இலகுமெனில் - விளங்குமாயின், அதனை - அந்தச் சாட்சியை, காண்டற்கு - (உன் நிஜ வடிவமாக) அறிதற்கு, எதுண்டாம் - எச்சாதன முண்டோ, அதுவாகி - அச்சாதன முடையவனாகி, இருந்து-நிலைத்திருந்து, காண்-(அதனை நீ) அறிவாயாக,(எ-று).



அச்சாதனம், "சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தம் ததாகார மாவ"தாகிய சமாதி யோகாப்பியாசத்தோடு கூடிச் செய்யும் தத்துவமசி மகாவாக்கியார்த்த விசாரமாம்.

விஷயம், இந்திரியம், அந்தக்கரணம், சீவன், சாட்சியென்பன தம்முள் வேறுபட்டிருப்பனவாம்; விஷயம் இந்திரியத்தாலும், இந்திரியம் அந்தக்கரணத்தாலும், அந்தக்கரணம் சீவனாலும், சீவன் சாட்சியாலும் விளங்குமிடத்துச் சாட்சியானது சீவனை விளக்குதல் வாயிலாக அந்தக்கரணத்தையும், அந்தக்கரணத்தை விளக்குதல் வாயிலாக இந்திரியத்தையும், இந்திரியத்தை விளக்குதல் வாயிலாக விஷயத்தையும் விளக்குவதாம்; அது சொப்பிரகாச வடிவமாயிருத்தலின் அதனை விளக்குவது ஒன்றுமில்லையாம்; அதனைத் தன் நிஜவடிவமாக அறிந்து அதுவாக நிலைத்தலே அதிகாரி புருஷனுக்குப் பரமப்பிரயோஜனமாம்என்பது இதன் திரண்டபொருளாம். இதனால் ஜீவசாட்சி ஒழிந்த மற்றைய வனைத்தும் ஜடமாமென்பது விளங்கியவாறறிக. சாட்சியால் சீவன் விளங்குகின்றதென்னுமிடத்துச் சீவனது விசேஷிய பாகத்தைவிட்டு விசேஷண பாகத்தைக் கொள்ளல் வேண்டும். விசேஷியபாகம் சேதன மாத்திரமாம்; விசேஷண பாகம் அவித்தையும் அதன் காரியமாய அந்தக்கரணமுமாம்.

விஷயம், இந்திரியம், அந்தக்கரணம் சீவனென்பனவற்றிற் [illegible] வேறுபாடு கடபடங்கட்குள்ள வேறுபாடுபோல்வதாம்;

சாட்சிக்கும் விஷய முதலியவற்றிற்கு முள்ள வேறுபாடு கயிற்றிற்கும் அதிற் கற்பிதமாயுள்ள பாம்பிற்குமுள்ள வேறுபாடு போல்வதாம்.

இச்செய்யுளின் பொருள் மேற்கூறிய செய்யுளின்பொருளை வற்புறுத்திவிரித்துக் கூறினமையின், இவ்விரண்டு (2-3) செய்யுட்களும் ஒரு முடிபுடையனவாம். சாட்சியை யென்னும் ஐகாரம் இரண்டனுருபன்று; அசை நிலையாம். விடயமென்பது எதுகைநோக்கி விடையமெனத் திரிந்துநின்றது. 3

### விருத்திஞானத்திரய வியல்பு.

4. மேயமனோ விருத்தியகண் டாகார விருத்தி விவேகவிருத் தியொடிவையே விருத்திகண்மூன் றுகு, மாயமனோ விருத்திவிட யாஞ்ஞானம் போக்கி யவ்விடயந் தோற்றுவிக்கு மகண்டமெனும் விருத்தி, தூயசிதஞ் ஞானத்தைப் போக்கியச்சாட் சியையே தோற்றுவிக் கும் விவேகவிருத் தியுமகண்டாஞ் ஞானம், போயிடச்சீ வன்சாட்சி பூரணமே தானும் போதநிலை பொருத்து மெனப் புகன்றிடுநான் மறையே.

(இ - ள்.) விருத்திகள்-(அந்தக்கரண) விருத்திகள், மூன்றுகும் - மூன்றும்,(அவை), மேய - பொருந்திய, மனோவிருத்தி- மனோவிருத்தி, அகண்டாகார விருத்தி - அகண்டாகார விருத்தி, விவேக விருத்தி - விவேக விருத்தி (யென்னும்), இவையே - இவையேயாம், (இவற்றுள்), ஆய-முதலாவதாய, மனோ விருத்தி- மனோ விருத்தியானது, விடயாஞ்ஞானம் - கடாதி விஷயங்களை மறைத்துள்ள அஞ்ஞானத்தை, போக்கி - ஒழித்து, அவ்விடயம் - அக்கடாதி விஷயங்களை, தோற்றுவிக்கும் - (ஜீவனுக்கு) விளங்கச் செய்யும், அகண்டமெனும் விருத்தி - அகண்டாகார விருத்தியானது, தூய - பரிசுத்தமான, சிதஞ்ஞானத்தை - சித்தாகிய ஆத்மாவை மறைத்திருந்த அஞ்ஞானத்தை, போக்கி - நீக்கி, அச்சாட்சியையே - (கூடஸ்தனென்னும்) அச் சிதாத்மாவாகிய சாட்சியையே, தோற்றுவிக்கும்-(அச்சீவனுக்கு) விளங்கச் செய்யும், விவேக விருத்தி - விவேக விருத்தியானது, அகண்டாஞ்ஞானம் - பரிபூரண வடிவமாயுள்ள பிரஹ்மத்தை மறைத்திருந்த அஞ்ஞானத்தை, போயிட - நீங்க (செய்து), சீவன் சாட்சியே-சீவசாட்சியாகிய ஆத்மாவே, பூரணம் - பரிபூரணமாயுள்ள பிரஹ்மமாம், (அந்தப் பரிபூரணப் பிரஹ்மம்), தானும் - தானேதானுக விளங்குவதாம் (என்னும்), போதநிலை - சின்மாத்திரமாகவேவிளங்கும்நிலையை,பொருத்தும்(அவனுக்கு)பொருந்தச் செய்யும், என - என்று, நான்மறை -நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள், புகன்றிடும் -சொல்லாநிற்கும், ().

சீவனுக்கு மனோவிருத்தி விஷயத்தை மறைத்திருந்த அஞ்ஞானத்தைப்போக்கி அதனை விளங்கச் செய்யுமென்றும், அகண்டாகார விருத்தி கூடஸ்தாத்மாவை மறைத்திருந்த அஞ்ஞானத்

தைப்போக்கி அதனை விளங்கச் செய்யுமென்றும்,விவேகவிருத்தி பூரணப் பிரஹ்மத்தை மறைத்திருந்த அஞ்ஞானத்தைப் போக்கிச் சீவசாட்சியே பூரணப்பிரஹ்மமாம், அதுவே தானுமென்னும் சின்மாத்திர நிலையை விளங்கச் செய்யுமென்றும் இங்கு அறிதல்வேண்டும். இருக்கின்றதென்னும் வியவகாரத்திற்கு ஏதுவான அவித்தை அல்லது அந்தக்கரணத்தின் பரிணாமம் விருத்தியென்று சொல்லப்படும். இங்கு அந்தக்கரணத்தின் ஞானவடிவப் பரிணாமத்தையே விருத்தியென்று கொள்ளல் வேண்டும்.

இந்திரியத்திற்கும் விஷயத்திற்கும் சையோகமுண்டாம்போது இந்திரியவாயிலாக அந்தக்கரணத்தின்விருத்தி வெளியிற் சென்று அதன் சமானாகாரத்தையடைகின்றது. இரும்பினாலாவது மண்ணினாலாவது செய்த கருவியில் உருக்கிவிட்ட தாம்பிரம் அக்கருவியின் சமானாகாரத்தை யடைவதுபோல, அந்தக்கரண விருத்தியும் விஷயத்தின் சமானாகாரமாகின்றது. அந்த விருத்தி ஆபாசமின்றி யுண்டாகின்றதில்லை; ஆபாசசகிதமாகவே யுண்டாகின்றது; விருத்திபாகமோ அதன் ஆவரணத்தை (மறைப்பை)ப் போக்குகின்றது; ஆபாசபாகம் அதனைப் பிரகாசிக்கச்செய்கின்றதென்பதிங் குணர்தற் பாலதாம். இதன் விரிவை விசாரசாகரம்நான்காந் தரங்கத்திற் காண்க.

விடயாஞ்ஞானம் என்பது விடய - அஞ்ஞான மென்றும், சிதஞ்ஞானத்தை என்பது சித் - அஞ்ஞானத்தை யென்றும்,



அகண்டாஞ்ஞானம் என்பது அகண்ட - அஞ்ஞான மென்றும் பிரிபடும். உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது. 4

ஞானி அஞ்ஞானிகளின் விருத்தி பேத நிலைமை

5. மிக்கபரா தீனர்களே யுலகமெலா மதில்விருப்பு
வெறுப்பற் றோர்க, டொக்கமனோ விருத்தியணு மாத்
திரமா வறிவகண்ட சொரூப மாக, மக்கதிக டோரா தா
ரறிவணுவா மனோவிருத்தி யகண்ட மாகத், தக்கபிரா
ரத்தவசத் தவராகிப் பிறந்திறந்து தளர்கின்றாரே.

(இ - ள்.) மிக்க - மிகவும், பராதீனர்களே - (ஆத்மாவிற்கு அந்நியமாயுள்ள) மாயாப் பிரபஞ்சத்திற்கு வசமாயிருப்பவரே, உலகமெலாம் (உளர்) - உலகமெங்கும் இருக்கின்றனர், அதில் - அந்த மாயாப் பிரபஞ்சத்தில், விருப்பு வெறுப்பற்றோர்கள் - விருப்பு வெறுப்பற்றுள்ள ஜீவன் முத்தாது, தொக்க - சுருங்கிய, மனோவிருத்தி - (இந்திரியங்கள் வாயிலாகக் கடாதி விஷயங்களை யறியும்) மனோவிருத்தியானது, அணுமாத்திரமாக - அணுவளவாக (இருக்க), அறிவு - (பிரஹ்ம சொரூபத்தைப் பிறர்க்கு உரைப்பதற்கும் அதனையே சிந்திப்பதற்கும் ஏதுவாயுள்ள) புத்தி விருத்தியானது, அகண்ட சொரூபமாகும் - பிரஹ்மாகாரமாகவே யிருக்கும், அக்கதிகள் - (உலகாகாரமாகும்) அம்மனோவிருத்தியி னிலைமையையும்,(பிரஹ்மாகாரமாகும்) அப் புத்தி விருத்தியினிலைமையையும்,தோரா தார்-(தக்கோர் வாயிலாக)

விசாரித்தறியாதுள்ள அஞ்ஞானிகளது, அறிவு - புத்தி விருத்தியானது, அணுவாக-அணுமாத்திரமாக (இருக்க), மனோவிருத்தி-மனோவிருத்தியானது, அகண்டமாக (இருக்கும்) - மாயாப்பிரபஞ்ச வடிவமாக விருக்கும், (அதனால் அவர்), தக்க - (சரீரம் வருவதற்குத்) தகுதியாயுள்ள, பிராரத்தவசத்தவராகி - பிராரப்த கர்மத்தின் வசத்தவராய், பிறந்து இறந்து - பிறந்தும் இறந்தும், தளர்கின்றார்-தளர்வடைவதற்குரியவரா யிருக்கின்றனர், (எ-று).

உளர் என்பதும் இருக்க என்பதும் இருக்கும் என்பதும் சொல்லெச்சமாம். மிக்க என்பது மிக என்பதன் விகாரமாம்.

உலகப் பொருள்களில் விருப்பு வெறுப்புடையவரா யிருப்பவர் பலராவார்; அவையற்றிருப்பவர் சிலராவர். உலகப் பொருள்களில் விருப்பு வெறுப்பற்றிருப்பவரது மனோ விருத்தியானது அணுப்போல மிகச் சிறியதா யிருக்கும்; புத்தி விருத்தியோ மேருமலைப்போலப் பிரஹ்மாகாரமாக மிகப் பெரியதா யிருக்கும். சித்தம் உலகாகாரமா யிருப்பதனால் வரும் பயனையும் பிரஹ்மாகாரமா யிருப்பதனால் வ்ரும் பயனையும் அறியாதவரது புத்தி விருத்தி பிரஹ்ம விசாரணையில் மிகச் சிறியதா யிருக்கும்; மனோ விருத்தியோ உலக நோக்கத்தில் மிகப் பெரியதா யிருக்கும்; அதனால், அவர் என்றும் பிராரப்த கர்மத்தின் வசத்தவராய்ப் பிறந்து இறந்து வருந்துவதற்குரியவ ராகின்றனரென்பது இதன் திரண்ட பொருளாம்.



உலகவிசாரம் செய்யும் புத்திவிருத்தியை மனோவிருத்தி என்றும், பிரஹ்மவிசாரம் செய்யும் புத்தி விருத்தியை அறிவு என்றும் இங்குக் கூறியவாறறிக.

இதனால் அஞ்ஞானிகள் உலக நோக்குடையவராயும் ஞானிகள் பிரத்தியகாத்ம அபின்ன பிரஹ்ம நோக்குடையவராயும் இருப்பாரென்று அவரவர்க்குரிய குறி கூறப்பட்டமை காண்க.

அஞ்ஞானிகளுக்குரிய குறி - அவர் உலகப் பொருள்களில் விருப்பு வெறுப்புடையவரா யிருத்தலாம்; ஞானிகளுக்குரிய குறி-அவர் அப்பொருள்களில் விருப்பு வெறுப்பற் றிருத்தலாம்

பராதீனர் - பிறர்வசமாக விருப்பவர். இதிலுள்ள அகண்ட பத மிரண்டனுள் முன்னது பிரஹ்மத்தையும் பின்னது மாயாப் பிரபஞ்சத்தையு முணர்த்தி நின்றன.

சீவன்முத்தர் பாராதீனராகாது சுதந்தரராயே யிருப்பரென்பது "சாதி யந்தகர் தாமெனக் காணினுஞ் சகத்தினைக் காணாராய், வாது சொல்லுமி டத்திலுஞ் செவிடராய் மற்றவர் தமை யுண்மை, யோது மென்றுரை செய்பொழு தூமரா யுண்மையா யொழிவில்லாப், போத ரூபராய்ச் சுதந்தர ராகியே யிருப்பர்கள் புரையற்றோர்" என்று குறுந்திரட்டுக் கூறுவதாலு மறியப்படுவதாம்.

ஞானிக்கும் அஞ்ஞானிக்குமுள்ள பேதம் முறையே இதய பந்த முறாமையும் இதயபந்த முறுதலுமேயாமென்பது சாஸ்தி

ரார்த்தமாம். இதனை "அஞ்ஞானியோ பந்தத்திற் கிருப்பிடமாம்; ஞானி மோட்சத்திற் கிருப்பிடமாம்; ராகமும் விராகமும் அவர்களது கொடிகளாம் எங்ஙனம் கொடி இராஜாவின் பட்டணத்திற்கு அடையாளமா யிருக்கின்றதோ அங்ஙனமே அஞ்ஞானிக்கு ராகமும், ஞானிக்கு விராகமும் அடையாளங்களா யிருக்கின்றன." என்றும், "அஞ்ஞானியின் அந்தக்கரணத்தில் சாட்சியரூபமூர்த்தி இருக்கின்றது; ஞானியின் அந்தக்கரணத்தில் சாட்சிரூபமூர்த்தி இருக்கின்றது. சாட்சிக்கு விஷயமான பிரபஞ்சத்தினைச் சாட்சியமென்பர். சாட்சியரூபமூர்த்தி மலினமாயிருக்கின்றது; சாட்சிரூபமூர்த்தி சுத்தமா யிருக்கின்றது. இவற்றுள், சாட்சியத்தில் அழுந்தியவர் ராகிகள்; சாட்சியில் அழுந்தியவர் தியாகி விராகிகள். சஞ்சலப் பிர.ம (பிரபஞ்ச)த்தை நிஜமென்றறிந்தவன் துக்கமாகிய கிணற்றில் முழுகுகின்றான்; அசலப் பிரஹ்மத்தின் நிஜசுவரூபத்தை யறிகின்றவன் ஆநந்த சுவரூபத்தை யடைகின்றான்" என்றும் விசாரசாகரம் 6-வது தரங்கம் கூறுகின்றது. 5

## உபாதி வைராக்கிய ஞானங்களின் பயன்.

6. தோற்றுமுப ரதிவைராக் கியஞான மூன்றி
வைக டொழிற்பட் டாரு, ளேற்றுமுப ரதியுடையார்
பிரமாதி பதமடைவ ரிகலோ கத்திற், போற்றும்வை
ராக்கியர்க்கு மப்பதமுண் டாஞானம் பொருந்தி னோர்க்



குச், சாற்றரிய தனிமுத்தி சரீராந்தத் தெனவுரைப்பர்
தகைமை யோரே.

(இ - ள்.) இகலோகத்தில் - இவ்வுலகத்தில், உபரதி வைராக்கியம் ஞானம் மூன்றும் - உபரதி வைராக்கியம் ஞான மென்னும் மூன்றும், தோற்றும் - (அதிகாரி புருஷர்க்கு) உண்டாவனவாம், இவைகள் - இவற்றை, தொழிற்பட்டாருள் - (மோட்சமடைய வேண்டுமென்னும் முயற்சியோடு) சாதனஞ் செய்பவருள்ளே, ஏற்றும் - (அறிஞரால்) உயர்வாகச் சொலப்படுகிற, உபரதி யுடையார் - உபரதி யுடையவர் (தமது சரீர முடிவில்), பிரமாதிபத மடைவர் - பிரஹ்மலோக முதலிய புண்ணியலோக பதவிகளை யடைவர், போற்றும் - (யாவரும்) துதிக்கத் தக்க, வைராக்கியர்க்கும் - வைராக்கிய முடையார்க்கும், (அவரது சரீர முடிவில்), அப்பதமுண்டாம் - அப்புண்ணியலோக பதவிகளை யடைதல் உண்டாம், ஞானம் பொருந்தினோர்க்கு - (ஐயந்திரிபின்றி) தத்துவஞான மடைந்திருப்பவர்க்கு, சாற்றரிய - (முன்னிலைச் சுட்டாக இத்தன்மையதென்று அறிந்து நினைத்து) சொல்லுதற்கரிய, தனிமுத்தி - ஒப்பற்ற மோட்சமானது, சரீராந்தத்து (உண்டாம்) - (அவரது) சரீர முடிவிலே யுண்டாகும், என - என்று, தகைமையோர் - தத்துவ சாஸ்திர விசாரமுடைய பெரியோர், உரைப்பர் - சொல்லுவர், (எ - று)

வைராக்கியத்தாலே உபரதியும், உபரதியாலே ஞானமும் உண்டாமென்றும், வைராக்கிய முடையவரும் உபரதி யுடையவரும் சரீராந்தத்தில் பிரஹ்மலோக முதலிய புண்ணியலோக பதவிகளை யடைவாரென்றும், தத்துவஞான முடையவர் சரீராந்தத்தில் விதேகமுத்தி யடைவாரென்றும் இங்கு உணர்தல் வேண்டும்.

வைராக்கியம், உபரதி, ஞானம் என்பனவற்றின் ஏது சொரூபம் முதலியன வருமாறு:—

### I. வைராக்கியம்.

#### (1) வைராக்கியத்திற்கு ஏது

வனிதாதி விஷயங்களில் அநித்தியத்துவ முதலிய தோஷங்களைக் காண்டலாம்;

#### (2) சொரூபம்

வனிதாதி விஷயங்களில் தோஷபுத்தி யுண்டாக, அவற்றைக் கக்கின சோறுபோல அல்லது காக்கை மலம் போலக் காண்பதாம்;

#### (3) காரியம்

வனிதாதி விஷயங்களை என் அநுபவியாது நீக்கிவிட்டோமென்னும் சங்கற்பமு முண்டாகாதிருத்தலாம்;



#### (4) அவதி

இவ்வுலகத்தையே யன்றிப் பிரஹ்மலோகத்தையும் துரும்பு போலக் கருதுவதாம்;

#### (5) பலம்

பிரஹ்மலோக முதலிய புண்ணியலோக பதவிகளை யடைதலாம். வைராக்கியத்திற்குப் பலம் சுவர்க்கலோகத்தை யடைதலாமென்று கூறுவாரு முளர்.

### II உபரதி.

#### (1) உபரதிக்கு ஏது

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அஷ்டாங்க யோகமாம்;

#### (2) சொரூபம்

சித்தம் தனது ஸ்தானத்தில் விஷயசிந்தனையின்றி நிச்சலமா யிருத்தலாம்;

#### (3) காரியம்

லௌகிக - வைதிக மென்னும் இருவகை வியவகாரங்களுள் எவ் வியவகாரமு மில்லாதிருத்தலாம்;

#### (4) அவதி.

சுழுத்தியவஸ்தையுடையவனைப்போலச் சகல காரியங்களையும் நினையாதிருத்தலாம்;

### (5) பலம்

பிரஹ்மலோக முதலிய புண்ணியலோக பதவிகளை யடைதலாம். உபரதிக்குப் பலம் பிரஹ்மலோகத்தை யடைதலாமென்று கூறுவாருமுளர்.

## III ஞானம்.

### (1) ஞானத்திற்கு ஏது

சிரவண மனன நிதித்தியாசனங்களாம்;

### (2) சொரூபம்

ஆத்மாவிற்கும் அநாத்மாவிற்குமுள்ள அத்தியாச ஐக்கியத்தைச் சற்குரு வாயிலாகச் செய்யும் வேதாந்த சாஸ்திர விசாரத்தினால் நீக்கி, ஆத்மாவே யான், அநாத்மா யானன்று என்பதை உள்ளவா றுணர்தலாம்;

### (3) காரியம்

சந்தேக விபரீதமின்றி அநாத்மாவிற்குத் தான் சாட்சி மாத்திரமாக விளங்குவதாம்;

### (4) அவதி

(அஞ்ஞான காலத்தில்) தேகமே யான்என்பதன் பொருளென்று திட நிச்சயங்கொண்டிருந்தாற்போல, (ஞான காலத்தில்) பிரஹ்மமே யான் என்பதன் பொருளென்று திடநிச்சயங் கொண்டிருத்தலாம்.



### (5) பலம்

சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தி வடிவ மோட்சமாம்.

வைராக்கியம் - வர்த்தமானப் பிரதிபந்தத்தையும், உபரதி - பூதப் பிரதிபந்தத்தையும், ஞானம் - ஆகாமியப் பிரதி பந்தத்தையும் கெடுப்பனவாம்.

**பூதப்பிரதிபந்தமாவது:**—முத்தி விருப்பத்தினால் சர்வ சங்கபரித்தியாகஞ் செய்து ஸந்காராய்ந்து சற்குருவை யடைந்து சிரவணாதிகளைச் செய்தாலும், முன்னர்க் கிருகஸ்தா சிரமத்திலிருந்து வனிதாதி (மனைவி முதலிய) வஸ்துக்களின் ரூப யௌவன சிங்காராதிகளை யனுபவித்தமை சம்ஸ்கார பலத்தால் தினந்தோறும் தோன்றித் தோன்றிச் சுகதுக்கங்களை யடிக்கடி கொடுத்துச் சிந்திக்கச் செய்து, ஆத்மசாட்சாத்காரமாக வொட்டாது தடுப்பதே பூதப்பிரதிபந்தமாம். பூதம்-இறந்தகாலம். பிரதிபந்தம்-தடை.

**வர்த்தமானப்பிரதிபந்தமாவது:**— சோம்பல், விஷய விச்சை, தானல்லாத உடம்பை யானெனலும் தன்னுடையதல்லாத பொருளை யெனதெனலுமாகிய அபிமானம், சிற்றினஞ் சேர்தல், தருக்க நெறி கடந்து பேசுதல், ஸ்திரபுத்தியின்மை முதலியன உண்டாய்த் தத்துவ விசாரஞ் செய்தாலும், ஆத்ம சாட்சாத்காரமாக வொட்டாது தடுப்பதே வர்த்தமானப் பிரதிபந்தமாம். வர்த்தமானம் - நிகழ்காலம்.

**ஆகாமியப்பிரதிபந்தமாவது:—** இன்னுஞ் சில பிறப்பினையடைந்தாலன்றிப் பிரஹ்மாதி யுலகில் வைத்துள்ள ஆசை தீராதென்னும் தோஷத்துடன் பொருந்தி, வேதார்த்தத்தினை யறிந்தாலும் ஆத்ம சாட்சாத்காரமாக வொட்டாது தடுப்பதே ஆகாமியப்பிரதிபந்தமாம். ஆகாமியம் - எதிர்காலம்.

ஒருவனுக்கு வைராக்கியம் உபரதி ஞானமென்னும் மூன்றுஞ் சித்திக்குமாயின், அவனுக்கு அவை மகா தபசின் பலமாம்; அவற்றுள், ஞானமின்றி, வைராக்கியம் உபரதி யிரண்டும் சம்பூரணமானாலும் அவனுக்கு முத்தி வாய்க்காது; மகா சுகஸ்தானமான புண்ணியலோகப்பிராப்தி யாம்; ஞானமொன்றிருக்க, வைராக்கிய உபரதிகள் இல்லாதவனுக்கோ மரத்தின் நுனி முறிந்தால் அதன்மீது இருந்தவனுக்கு விழும். இச்சையில்லையாயினும் விழுதல் சுபாவமாதல்போல, தேகாந்தத்தில் முத்தி சித்திக்கும்; அது சித்திக்குமளவும் பிராரத்துவத்தாலாகிய சுகதுக்கானுபவ முண்டென்பது நிச்சயமாம்; ஆதலால், ஞானமே முத்திக்குக் காரணமாம் என்பது சாஸ்திரார்த்தமாம்.

மூன்றமென்னும் இனைத்தென் றறிபொருளில் வந்த முற்றும்மை தொக்கு நின்றது.

"குறையகலும் வைராக்கிய முபரதியா மிரண்டுங்
கூடிஞானங்கூடா தாயின்முத்தி யரிதாம்,
உறமினிய மிசையுலக பதங்கிடைக்கு ஞான
மொன்று மடைந் தவையிரண்டு மிலையேனு நிற்க,



முறியுமர நெடும்பனையோன் விழுநினைவின் றேனு
முறியவிழல் போலவே தேகாந்த மதனில்,
பெறுவனுயர் முத்தியினை யுடற்கமைந்த வினையாற்
பிறந்திடுந்துக் கானுபவ முளதாதல் திண்ணம்"

என்று வேதாந்த சூளாமணி கூறுவதிங் குணர்தற்பாலதாம். 6

## திரிபுடி இயல்பு.

7. மெய்வாய்கண் ணொடுமூக்குச் செவியாலுண்
பதுவிடயம் விடயம் யாவு, மைவாயி லரவெனவுற் றுணர்
தன்மனோ விருத்தியவை யறிவ் தாகிப், பொய்வாயின்
செயல்களெல்லாந் தனதாய்நின் றிடல்சீவ போதம்
வேறாய்த், தைவாய்வெண் பிறைபோலத் திரிபுடிக்குச்
சமசாட்சி தானே தானும்.

(இ - ள்.) செவி மெய் கண் வாய் மூக்கு - சுரோத்திரம் - துவக்கு-சட்சு - சிங்குவை - கிராணம் என்னும் ஞானேந்திரிய மைந்தினாலும் (முறையே), உண்பது - அறியப்படுவது, விஷயமாம், விடயம் - (சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னும்) விஷயமாம், விடயம் யாவும்-அவ்விஷயமனைத்தையும், உற்று - (அவ்விந்திரியங்களோடு கூடி) பொருந்தி, ஐவாயிலரவென-ஐந்துதலை நாகம்போல, உணர்தல்-அறிவது, மனோவிருத்தி-மனோவிருத்தியாம், அவ்வைஅவ்விஷயங்களை (மனத்தோடு கூடுதல் வாயிலாக இந்திரியங்க

ளோடு கூடி), அறிவதாகி - அறிந்து, பொய் - மாறுவதாகிய, வாயின் செயல்களெல்லாம் - இந்திரிய வியாபார மனைத்தையும், தனதாய் நின்றிடல் - தன்னுடைய வியாபாரமாகப் பாவித்திருப்பது, சீவபோதம் - சிதாபாசனும், வேறாய் - (விஷயம், இந்திரியம், மனம், சீவன் என்னும் இந்நான்கிற்கும்) வேறாக, தைவாய் வெண்பிறை போல - தைமாதத்தில் தோன்றும் வெண்ணிறமுள்ள மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல, சமம் - (ஒருபக்கமுஞ் சாயாது) நடுவுநிலையாக (இருந்து), திரிபுடிக்கு-(ஞாதுரு, ஞானம், ஞேயமென்னும்) திரிபுடிக்கு, சாட்சி - சாட்சியாக விளங்குவது, தானே தானும்-தானே தானாக விளங்கும் ஆத்மாவாம், (எ-று).

சீவன்-ஞாதுருவாம்; மனோவிருத்தி-ஞானமாம்; விஷயம்-ஞேயமாம். இவை முறையே காண்பான், காட்சி, காணப்படும் பொருளென்றும் கூறப்படும். ஞாதுரு, ஞானம், ஞேயமென்னுந் திரிபுடியுள்,

(i) மூலவகங்காரத்தில் பிரதிபிம்பித்துள்ள சீவ சைதந்நியமே ஞாதுருவாம்;

(ii) மனத்தில் பிரதிபிம்பித்துள்ள சைதந்நியமே ஞானமாம்;

(iii) பூதாதி விஷயாவச்சின்ன (விஷயத்தோடு கூடிய) சைதந்நியமே ஞேயமாம்.



மூலவகங்காரம், மனம், பூதாதி விஷயமென்னும் இம்மூன்றையும் உபாதியாக வுடையதாய், இவற்றிற் கதிஷ்டானமாயுள்ள சேதனமே பிரத்தியகாத்ம வடிவப் பிரஹ்மமாம்; தானே தானாக விளங்குவது இதுவேயாமென்பது சாஸ்திரார்த்தமாம். பிரத்தியக்—உள்.

தைவாய்வெண்பிறை (தை மாதத்து மூன்றாம் பிறைச் சந்திரன்) வட கோடாவது தென் கோடாவது சாயாது சமமாக விருத்தல் போல, சாட்சி நினைப்போடு கூடியாவது மறப்போடு கூடியாவது நில்லாது சமமாக (நடுவு நிலையாக) இருப்பதாம்; அங்ஙனமிருப்பதே அது திரிபுடிக்குச் சாட்சியாக விளங்குவதாம். கோடு-முனை.

சோதிடகிரக சிந்தாமணி "மூன்றாம்பிறை பங்குனியிலும் சித்திரையிலும் தென்கோடு உயரவால்வேண்டும்; வைகாசி முதல் மார்கழி வரையிலும் வடகோடு உயரவால்வேண்டும்; தையிலும் மாசியிலும் (இருகோடும்) சமமாக இருத்தல்வேண்டும்; (சமமாக) இல்லாவிடின், கலகமும் பஞ்சமுமுண்டாம்" என்று கூறுவதிங் குணர்தற் பாலதாம்.

அதிகாரி புருஷன் திரிபுடிக்குச் சாட்சியாக விளங்கும் நிலையைப் பெறுவானாயின், பிறப்பினை யடையான்; பெறானாயின், பிறப்பினை யடைவானென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம்.

திரிபுடி - பாகியத்திரிபுடி, ஆந்தரத்திரிபுடி, சொரூபத்திரிபுடி யென மூவகைத்தாம்; அவற்றுள், ஒவ்வொன்றும் சுத்தம் அசுத்தமென இருவகைத்தாம்.

**அசுத்தத் திரிபுடி:**—(1) சீவன் மனோவிருத்தி வாயிலாகக் கடாதி விஷயங்களை யறிதல் பாகிய அசுத்தத் திரிபுடியாம்; இதில் ஜீவன் ஞாதுருவாம், மனோவிருத்தி ஞானமாம், கடாதி விஷயங்கள் ஞேயமாம். (2) சீவன் சுகதுக்காதிகளை மனோவிருத்தி வாயிலாக அறிதல் ஆந்தர அசுத்தத் திரிபுடியாம்; இதில் சீவன் ஞாதுருவாம்; மனோவிருத்தி ஞானமாம்; சுகதுக்காதிகள் ஞேயமாம். (3) சீவன் தன்னைத் தேகாதிகளுக்கு வேறாக மனோவிருத்தி வாயிலாக அறிதல் அசுத்த சொரூபத் திரிபுடியாம்; இதில் ஜீவன் ஞாதுருவாம்; மனோவிருத்தி ஞானமாம்; அவனே ஞேயமாம்.

**சுத்தத்திரிபுடி:**—(1) ஜீவன் சர்வப் பிரபஞ்சத்தையும் மனோவிருத்தி வாயிலாகச் சிவசொரூபமாயறிதல் பாகியசுத்தத் திரிபுடியாம்; இதில் ஜீவன் ஞாதுருவாம்; மனோவிருத்தி ஞானமாம்; சர்வப் பிரபஞ்சமும் ஞேயமாம்.

(2) ஜீவன் தன்னைப் பிரத்யக் ஆத்ம சொரூபமாக மனோவிருத்தி வாயிலாகவறிதல் ஆந்தர சுத்தத் திரிபுடியாம்; இதில் ஜீவன் ஞாதுருவாம்; மனோவிருத்தி ஞானமாம்; பிரத்யக் ஆத்மா ஞேயமாம். இம்மனோவிருத்தி சாட்சி விருத்தியென்று சொல்லப்படும்.



(3) சாட்சிசொரூபமாக விளங்கும் ஜீவன் தன்னைப் பிரஹ்ம சொரூபமாக மனோவிருத்தி வாயிலாக அறிதல் சுத்த சொரூபத் திரிபுடியாம்; இதில் சாட்சிசொரூபமாக விளங்கும் ஜீவன் ஞாதுருவாம்; மனோவிருத்தி ஞானமாம்; பிரஹ்மம் ஞேயமாம். இம்மனோவிருத்தி அகண்டாகார விருத்தியென்றும், பிரஹ்மாகார விருத்தி யென்றும், தாய் என்றும், சிவகரணமென்றும் சொல்லப்படும்.

இன்னும் இத்திரிபுடி அனுபவத்திரிபுடி, ஸ்மிருதித்திரிபுடி யென இருவகைத்தாம்.

I. ஜீவன் கடாதி விஷயங்களை மனோவிருத்திவாயிலாக அறிதல் அனுபவத்திரிபுடியாம்; அவற்றை நினைத்தல் ஸ்மிருதித்திரிபுடியாம்.

ஸ்மிருதித்திரிபுடியில் நினைக்கின்றவன் தியாதாவாம்; நினைக்கப்படும் விஷயம் தியேயமாம்; நினைத்தல் தியானமாம்; இவ்விரண்டும் அசுத்தமாம்.

II. சீவன் தன்னைப் பிரத்யக்காத்மாவென்று பாவனை செய்வது ஸ்மிருதித்திரிபுடியாம்; தன்னைப் பிரத்யக்காத்மாவென்றறிதல் அனுபவத்திரிபுடியாம்.

III. சீவன் யான் பிரஹ்மமென்று பாவனை செய்வது ஸ்மிருதித் திரிபுடியாம்; தன்னைப் பிரஹ்மமென்றறிதல் அனுபவத் திரிபுடியாம்.

IV. சீவன் சர்வத்தையும் பிரஹ்ம சொரூபமென்று பாவனை செய்வது ஸ்மிருதித்திரிபுடியாம்; சர்வத்தையும் பிரஹ்மசொரூபமென்றறிதல் அனுபவத்திரிபுடியாம். அனுபவம் - அறிதல்; ஸ்மிருதி - நினைத்தல்.

இவையனைத்தும் சுத்தத்திரிபுடியாம். இன்னும் இத்திரிபுடி திடம் அதிடமென இருவகைத்தாம்.

(1). சீவன் பிரத்யக்ஆத்ம பிரஹ்ம சொரூபத்தைத் தனது யதார்த்த வடிவமாகச் சந்தேக விபரீதத்தோடு அறிதல் அதிடத் திரிபுடியாம்; (2) சந்தேகவிபரீதமின்றி யறிதல் திடத்திரிபுடியாம். இவற்றுள், முன்னது அசுத்தமாம்; பின்னது சுத்தமாம். இத்திடத்திரிபுடியே (சமயலுக்கு நெருப்புப்போல) சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்சத்திற்குச் சாட்சாத் (நேர்) காரணமாயிருப்பதாம்; ஏனையவற்றுள், அசுத்தத்திரிபுடியுள் பாகியம் ஆந்தரம் ஒழிய மற்றையவெல்லாம் பரம்பராசாதனமாக விருப்பனவாம். ஸ்மிருதித்திரிபுடியுள் பிரஹ்ம சொரூபமாயிருக்கின்றேன் என்னும் பாவனை பிரஹ்மாகார விருத்தியுண்டாவதற்கு நேர் சாதனமாயிருப்பதாம். இன்னும் இவற்றின் விரிவையெல்லாம் பெருநூல்களில் காண்க.

'விடயம்யாவு, மைவாயி லரவெனவுற் றுணர்தன்மனோ விருத்தி' என்பதை விரித்துப் பிரபுலிங்கலீலை சித்தாமையர் கதியில்



“இந்திய மோரொன் றுய்விட் டிடின்மற்றை யொன்றுசாரும்
முந்திய மனமழிப்ப முற்றும்போ மணிய பாம்பின்
ஐந்தலை களினு ளொன்றை யரிந்திடின் மற்றொன் றுலம்
சிந்திடு மிடற ரிந்தாற் றீர்ந்திடு மொருங்கு மாதோ”

என்று கூறுவதிங் குணர்தற் பாலதாம்.

திரிபுடி என்பதன் பொருள் (தென்னங்காய்போல) மூன்று பக்கமுடையதென்பதாம்; அஃதாவது பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) சம்பந்தமுள்ள மூன்று பொருள்களாம். அம்மூன்று பொருள்கள் ஞாதிரு, ஞானம், ஞேயம் என்பனவாம்.

'மெய்வாய்கண் ணுடுமூக்குச் செவி' என்பதனுள் மெய்-துவக்கிந்திரியமாம், வாய்-சிங்ஙுவையிந்திரியமாம்; கண் - சட்சு விந்திரியமாம்; மூக்கு - கிராண விந்திரியமாம்; செவி-சுரோத்திர விந்திரியமாம்.

'ஐவாயில்' என்பதனுள் 'வாயில்' என்பதன் பொருள் தலையாம்; 'பொய்வாயின்' என்பதனுள் 'வாய்' என்பதன் பொருள் இந்திரியமாம்.

'சீவபோதம்' என்பதற்குப் போத (ஞான) சொரூபனாகிய சீவன் என்பது பொருளாம். சீவனது விசேஷிய பாகம் சேதன மாத்திரமாமென்பதிங் குணர்தற் பாலதாம்.

## அஞ்ஞானத்திகளி னியல்பு.

8. ஓதரிய வஞ்ஞானந் தனையறியா வுணர்விதற்கோ ருறுதி மூல, மாதன்மனோ விருத்தியவை யகற்றியொளி தனையறித லகண்டா காரங், காதலினா லருளியசற் குருவருளாற் பெறுமகண்டா கார மாகுஞ், சாதகமே தானாகி யிருப்பதே தனுசொருப சாட்சி யாமே;

(இ - ள்.) ஓதரிய - (சத்து அசத்து என்னும் இரண்டனுள் இத்தன்மையதென்று) சொல்லுதற்கரிய, அஞ்ஞானம் - அஞ்ஞானமானது, தனை-(ஜீவன்) தன்னுடைய நிஜசொரூபத்தை, அறியா உணர்வு - (உள்ளவாறு) அறியாமையாகிய விபரீதஞான மாம், இதற்கு - இவ்வஞ்ஞானமானது நிலைத்திருப்பதற்கு, ஓர்- ஒப்பற்ற, உறுதி - ஸ்திரமான, மூலமாதல் - காரணமாயிருப்பது, மனோவிருத்தி - மனோவிருத்தியாம், அவை - (அதிகாரி புருஷன்) அவ்விபரீத ஞானத்தையும் மனோ விருத்தியையும், அகற்றி - (பிரயத்தன பூர்வகமாக) நீக்கி, ஒளிதனை - பிரத்ய காத்ம சொரூபத்தை, அறிதல் - (பிரஹ்ம சொரூபமாக) அறிவது, அகண்டாகாரமாம்-அகண்டாகார விருத்தியாம், காதலினால்- அன்போடு, அருளிய - (நினைவரிய ஒரு பிரஹ்மம் நீயே என்று) தத்துவ உபதேசம் செய்த, சற்குருவருளால் - சற்குருவினது கருணையினாலே, பெறும்-பெற்ற, அகண்டாகாரம் - அவ்வகண் டாகார விருத்தி (நிலை பெறுவதற்கு), சாதகம்-காரணம், தானாகி-



(அவன்) தனது நிஜவடிவமாகி (மாறாது), இருப்பது - இருப்ப தாகிய, சொருப சாட்சி - சிற்சொரூப சாட்சி, எது - எதுவோ, அதுவே ஆகும் - அதனது விளக்கமேயாம், (எ - று).

தன்னை அறியா உணர்வென்னும் அஞ்ஞானத்தால் மனோ விருத்தி யுண்டாவதாம்; அதனா லவ்வஞ்ஞானம் நிலைபெற்றிருப் பதாம்; அவ்விரண்டையும் பிரயத்தன பூர்வகமாக நீக்கினவனுக் குப் பிரஹ்மமே யான் என்னும் அகண்டாகார விருத்தியுண்டாவ தாம்; அவ்வகண்டாகார விருத்தி நிலைபெறுவதற்கு எதனது விளக்கம்காரணமாயிருக்கின்றதோ அதுவே ஜீவசாட்சியென்னும் கூடஸ்தனும்; சுத்தப்பிரஹ்மமாமென்பது இதன் திரண்டபொரு ளாம். மரத்தால் உண்டாகும் இலையால் மரம் நிலைஇருப்பது போல அஞ்ஞானத்தா லுண்டாகும் மனோவிருத்தியால் அஞ் ஞானம் நிலைத்திருப்பதாம்; அகண்டாகாரவிருத்தி, தன்னை அறியா உணர்வும் மனோ விருத்தியும் உள்ளவளவும் உண்டாகாது; அவற்றை அகற்றினவனுக்கு உண்டாவதாம்; அவ்கண்டாகார விருத்தி நிலைத்திருப்பதற்குக் காரணம் நிஜவடிவிளக்கமாம் என்பது இங்குணர்தற்பாலதாம்.

'விடயம் யாவும், ஐவாயில் அரவெனவுற்றார்தல் மனோ விருத்தி' என மேலே கூறப்பட்டிருக்கின்றமையால், அஃது இத் தன்மையதென விளங்குவதாம்.

ஒளி என்பது இங்குச் சட ஒளியன்றாம், சித்தொளியாம்; அது சின்மாத்திரமாயுள்ள சிவசொரூப ஆத்மாவாம். விருத்தி

யென்பது அகண்டாகாரம் என்பதனோடும் சென்றியைந்து நின்றது. 'காதலினால்' என்பது உருபுமயக்கமாம்.

பொருட் பொருத்த நோக்கி 'ஆம்' என்பதை 'அகண்டாகாரம்' என்பதனோடும், 'ஏ' என்பதையும் 'ஆகும்' என்பதையும் 'அது' ன்பதனோடும் பிரித்துக் கூட்டினாம்.

"சிந்துருவ மாகிச் செகசாட்சி தாமான
முத்திரைக்கா மாதி முனியாவே—சித்தத்தில்
இங்கற்ப வாசனைக ளெல்லா மெடுத்தருந்திச்
சங்கற்ப மில்லாத தால்"

என்று சொரூபசாரங் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

முக்காலத்திலும் பாதிக்கப்படாதது (பொய்யென்று நிச்சயிக்கப்படாதது) சத்தாம்; அத்தன்மையது சேதனமாம். அஞ்ஞானம் (தத்துவ) ஞானத்தால் பாதிக்கப்படுவதால் சத்தின் விலட்சணமாம் (சத்தினும் வேறாம்); முக்காலத்திலும் விளங்காதது அசத்தாம்; அத்தன்மையது முயற்கொம்பு, மலடிமகன், ஆகாயத்தாமரை முதலியனவாம். ஞானத்திற்குமுன் அஞ்ஞானமும் அதன்காரியமும் பிரதீதியாகின்றன (தோன்றுகின்றன); ஜாக்கிர காலத்தில் நான் அஞ்ஞானி, பிரஹ்மத்தை நானறியவில்லை என்னும் வியவகாரத்தால் அஞ்ஞானம் விளங்குகின்றது; சொப்பனத்தில் தோன்றும் பலவிதமாயுள்ள பதார்த்தங்களின் உபாதான (முதற்) காரணம் அஞ்ஞானமாம்; சுழுத்



திக்குப்பின் நான் சுகமாய்த் தூங்கினேன், ஒன்றும் அறியவில்லை என்று நினைவு வருகின்றது; அந்நினைவு அறியப்படாத வஸ்துவினதாகாது; அதனால், சுழுத்தியில் அஞ்ஞானத்தின் விளக்கமுண்டு; இவ்வாறாக மூன்றவஸ்தையிலும் அஞ்ஞானம் விளங்குதலால், அஃது அசத்தின் விலட்சணமாம் (அசத்தின் வேறாம்); இக்காரணத்தால் சதசத் விலட்சணமாம் என்னும் சாஸ்திரார்த்தத்தை விளக்க 'ஓதரிய வஞ்ஞானம்' என்று கூறினார்.

அஞ்ஞானம் காரணாஞ்ஞானம் காரியாஞ்ஞான மென விருவகைத்தாம்; அவற்றுள்(1)ஆவரண விட்சேபசத்திகளுடன் கூடி அநாதிபாவ ரூபமாயிருப்பது காரணாஞ்ஞானமாம்; (2) ஒன்றில் மற்றொன்றன் புத்தி வடிவத்தோற்றம் காரியாஞ்ஞானமாம்; அது பலவகைத்தாம்; அவற்றுள், 'தனையறியா வுணர்வு' பிரதானமானதாம். 'ஓதரிய வஞ்ஞானந் தனையறியா வுணர்வு' என்பதன் பொருள் "பிரமமாந் தனைமறந்த பேதைமை யேயஞ்ஞானம்" "பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம்" என்று கைவல்லிய நவநீதங் கூறுவதாலும் நன்கு விளங்குவதாம். பிரத்தியக்காத்மா தனது பிரகாசத்தில் பிறிதொன்றன் பிரகாசத்தை யபேட்சியாது, தான் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் சொப்பிரகாச வடிவமாயிருத்தலின் 'ஒளி' என்றும், அது தனது சொரூப வடிவ ஞானத்தாலே மறைவின்றி நேரே சர்வப் பிரபஞ்சத்தையும் தொடக்கின்றியறிவதால் 'சொரூபசாட்சி' என்றும் கூறப்பட்டனவென்க.

இச்செய்யுளால் அஞ்ஞானம், மனோவிருத்தி, அகண்டா
கார விருத்தி என்பனவற்றின் இயல்பு கூறப்பட்டமை காண்க.

### விருத்தியும் சீவனும் விபுவாதல்.

9. விருத்தியுஞ்சீ வனும்விடயத் தினைப்பார்க்கிற்
பெரிதாம் விருத்தியின்ஞா னம்விடயாஞ் ஞானத்தை
யகற்றின், விருத்தியுஞ்சீ வனும்விடயா காரமதா மது
போல் விருத்தியுஞ்சீ வனுஞ் சத்தா காரமதா யமைந்
தால், விருத்தியச்சீ வனைவிடயத் தினையறியுஞ் சாட்சி
வேந்தனசை யாதிருந்து மேன்மைபெறுந் திறம்போல்,
விருத்திவிட யஞ்சீவன் சாட்சியிவை தோன்றா விபுவா
வன் ஞானியென விளம்புமுப நிடதம்.

(இ - ள்.) விருத்தியும் - மனோவிருத்தியும், சீவனும் -
சீவனும், விடயத்தினைப் பார்க்கின் - (சத்தாதி) விஷயங்
களைப்பார்க்கிலும், பெரிதாம் - வியாபகமாம், விருத்தியின்
ஞானம் - மனோவிருத்தியின் ஞானமானது, விடயாஞ்ஞானத்
தை - (கடாதி) விஷயத்தை மறைத்துள்ள அஞ்ஞானத்தை,
அகற்றின் - நீக்குமாயின், விருத்தியும் சீவனும் - மனோ
விருத்தியும் சீவனும், விடயாகாரமதாம் - விஷயாகாரமாவன
வாம், (அக்காரணத்தால் மனோவிருத்தியும் சீவனும் சத்தாதி
விஷயங்களைப் பார்க்கிலும் வியாபகமாம்), அதுபோல் - அது



போல, விருத்தியும் - மனோவிருத்தியும், சீவனும் - சீவனும்,
சத்தாகாரமதாய் - (முற்கூறியவாறு) ஆத்மாகாரமாய், அமைந்
தால் - பொருந்துமாயின், சாட்சி - ஆத்மாவானது, விருத்தி -
மனோ விருத்தியையும், அச்சீவனை - அச்சீவனையும், விடயத்
தினை - (சத்தாதி) விஷயத்தினையும், வேந்தன் - அரசனானவன்,
அசையாதிருந்து (தன்னிலையில்) மாறாதிருந்து, (அமைச்சர் வாயி
லாகத் தன் ராஜ்ஜிய வியவகாரங்களை அறிந்து), மேன்மைபெறும்-
மேன்மை பெற்றிருக்கும், திறம்போல் - வகைபோல, அறியும்-
(மனோவிருத்தி வாயிலாக) அறியாநிற்கும், விருத்தி - மனோ
விருத்தியும், விடயம் - விஷயமும், சீவன் - சீவனும், சாட்சி -
சாட்சியும், இவை - (என்னும்) இவை, தோன்றா - தோன்றா
மல், விபுவாவன் - வியாபக சேதனமாகிய பிரஹ்மசொரூபமாக
விளங்குகின்றவனே, ஞானியென - தத்துவஞானியாவானென்று,
உபநிடதம்-உபநிஷத்துக்கள், விளம்பும்-கூறுகின்றன, (எ-று).

சீவன், விருத்தி, விஷயமென்னும் திரிபுடியை அறியும்
சாட்சிமாத்திரமா யிருக்கின்றோமென்னும் சங்கற்பமுமின்றிச்
பிரஹ்ம சொரூபமாக விளங்குகின்றவனே தத்துவஞானியாவன்
என்பது இங்கு உணர்தற்பாலதாம். விருத்தியும் சீவனும், விஷ
யத்தினும் வியாபகமாயிருப்பதுபோல, சாட்சியானது சீவன்
விருத்திவிஷயமென்னும் திரிபுடியினும் வியாபகமாயிருப்பதாம்;
அச்சாட்சியானது அரசன் தன்னிலையில் மாறாதிருந்து அமைச்சர்
வாயிலாகிராஜ்ஜிய வியவகாரங்களை யறிவதுபோல, மனோவிருத்தி

வாயிலாகத் திரிபுடியை அறிவதாம்; இச்சாட்சி வியாபகசேதனமான பிரஹ்ம சொரூபமேயாம். இச் சாட்சிசேதனத்திற்கும் பிரஹ்ம சேதனத்திற்கும் உள்ள பேதம் கடாகாயத்திற்கும் மகாகாயத்திற்கும் உள்ள பேதம் போல்வதாம். கண்ணாடியால் ஒரு பொருளை யறிகின்றவன் அக்கண்ணாடியையும் அறிவதுபோல மனோவிருத்தியால் திரிபுடியை யறியும் சாட்சி அம்மனோவிருத்தியையும் அறிகின்றதென் றிங்குணர்தல்வேண்டும். விருத்தியும் சீவனும் சத்தாகாரமதாய் அமைதலாவது விருத்தியானது சத்தாயுள்ள ஆத்மாவினது அஞ்ஞானத்தை யகற்றியவிடத்து அது சீவனோடு சத்தாயுள்ள ஆத்மசொரூபமாக விளங்குதலாம்.

(1) தேகத்தின் மத்தியிலுள்ள (இருதயத்திலுள்ள) அந்தக்கரணத்தால் வளைவுபட்டசேதனம் பிரமாதாவாம்; (2) அவ்வந்தக்கரணமே நேத்திராதி யிந்திரியங்களின் வாயிலாக வெளிப்பட்டு எதுவரையிலும் கடாதிவிஷயங்க ளிருக்கின்றனவோ அதுவரையிலும் நீண்ட பரிணாமத்தை யடைகின்றது; பின்னர் விஷயங்களாகிய கடாதிகளோடுகூடிக் கடாதிகளி னாகார மெப்படியோ அப்படியே அந்தக்கரணத்தினாகார முண்டாகின்றது. தடாகத்திலுள்ளநீர் மடைவழியாய் வெளிப்பட்டு நீண்ட வாய்க்காலினாகார(வடிவ) மடைந்து வயலிற் செல்லுகின்றது; வயலிற் பாய்ந்து வயலாகாரத்தை யடைகின்றது. அதுபோல, அந்தக்கரணமும் இந்திரியமாகிய துவாரத்தின் வாயிலாக வெளிப்பட்டுச் சென்று விஷயரூபமான வயலை யடைகின்றது; ஆண்



டுச் சரீரமுதல் கடாதிவிஷய பரியந்தமுள்ள அந்தக்கரணத்தின் வாய்க்கால்போன்ற நீண்டபரிணாம மெதுவோ அது விருத்திஞான மெனப்படும். அவ்விருத்தியால் வளைவுபட்ட சேதனம் பிரமாண சேதன மெனப்படும்; (3) விருத்திஞான வடிவ அந்தக்கரணத்தின் பரிணாமம் பிரமாணமெனப்படும்; வயலிற் பாய்ந்தநீர் வயலாகாரமாவதுபோலக் கடாதிவிஷயங்களிற் சென்ற விருத்தி கடாதிகளின் சமானாகாரத்தை யடைகின்றது. இச்சமானாகாரத்தால் வளைவுபட்டசேதனம் பிரமாசேதனமெனப்படும்; (4) ஞானத்திற்கு விஷயமான கடாதிகளால் வளைவுபட்ட சேதனம் விஷயசேதனம் அல்லது பிரமேய சேதனமெனப்படும்.

இருட்டிலுள்ள கடத்தை யறிவதற்கு விளக்கும் கண்ணும் வேண்டும்; சூரியனை யறிவதற்குக் கண்ணொன்றே போதும்; அதுபோலக் கடாதி அப்பிரகாச விஷயங்களை யறிவதற்கு அவற்றி னஞ்ஞானத்தைப் போக்க விருத்தியும் அவற்றையறியச் சிதாபாசனும் (சீவனும்) வேண்டும்; சொப்பிரகாசமான பிரஹ்மத்தை யறிவதற்கு அதன் அஞ்ஞானத்தை (மறைப்பை)ப் போக்க (அகம்பிரஹ்மாஸ்மி யென்னும் அகண்டாகார) விருத்தியொன்றே போதும்; (சிதாபாசன் வேண்டியதில்லை). சிதாபாசன் கடாதி வடிவ விருத்திகளி லிருப்பதுபோலப் பிரஹ்மாகார விருத்தியிலு மிருந்தாலும், மத்தியான வெயிலிலுள்ள தீபப் பிரபை தனது விளக்கமின்றி யிருப்பதுபோலத் தனது விளக்கமின்றிப் பிரஹ்மத்தோ டேகமா யிருப்பதுபோல விருக்

இன்றென்னும் சாஸ்திரார்த்தம் இங்குக்கவனித்துணர்தற்பாலதாம்.

உலகத்தோற்றத்திற்கேது சீவனது மனோபாவனையாகலின், அதனிலும் மனோபாவனையென்னும் விருத்தியும் சீவனும் வியாபகமா மென்பதிங்குணர்தற்பாலதாம். இது "மனத்தினா லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்" என்று கைவல்லிய நவநீதம் கூறுவதாலும் விளங்குவதாம்.

விஷயம் விருத்தி வசமாயும் சீவன் வசமாயு மிருத்தல்பற்றி 'விருத்தியுஞ்சீ வனும்விடயத் தினைப்பார்க்கிற் பெரிதாம்' என்றும், விருத்தியும் சீவனும் சத்தாகாரமாயபோது சத்தாயுள்ள சாட்சியால் விருத்தியும் சீவனும் விஷயமும் விளங்குதல் அதிகாரி புருஷனுக்கு நன்கு விளங்குமென்பது தோன்ற 'விருத்தியும் ......திறம்போல்' என்றும் கூறப்பட்டனவென்க. விருத்தியை என்னுமிரண்டனுருபும் விருத்தியையும் சீவனையும் விடயத்தினையும் என்னும் எண்ணும்மைகளும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன.

மனோவிருத்தியின் ஞானம் - மனோவிருத்தியி லாரூடமா(எறி)யுள்ள சேதனமாம்.





**விஷய முதல் சாட்சிவரையில் ஒன்றற்கொன்று விசேடமாமாறு.**

10. போற்றியவிந் திரியமின்றி விடயமெலாந்
தோன்றா பொறிகளைந்துங் கரணமின்றிப் பொலிவொடு
தோன் றாவால், சாற்றுகர ணமுஞ்சீவ னின்றியக்காற்
றோன்று சாட்சியின்றிச் சீவனிலை தானுணர்வு தோன்
றா, தாற்றலினா லிந்தியங்கள் விடயமட்டு மறியு மவ்வி
ரண்டுங் கரணமறிந் திடுமவைமூன் றினையுந், தேற்ற
மொடு சீவனறி வுறுமவைநான் கினையுந் தெளிந்தறியுஞ்
சாட்சியதீ தப்பொருளா மிதுவே.

(இ - ள்.) போற்றிய - (சீவர் யாவராலும்) பாதுகாக்கப்படுகின்ற, இந்திரியமின்றி-சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்களில்லாமல், (அவர்க்கு), விடயமெலாம் - (சத்த முதலிய) விஷயமனைத்தும், தோன்றா - விளங்காவாம், பொறிகளைந்தும் - சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்களைந்தும், கரணமின்றி - அந்தக்கரணமில்லாது, பொலிவொடு-செவ்வையாக, தோன்றா- விளங்காவாம், சாற்று - (மனம் - புத்தி - சித்தம் - அகங்காரமென்னும் நான்கு பாகுபாடுடைய்தா மென்று) சொல்லப்படுகின்ற, கரணமும் - அந்தக்கரணமும், சீவனின்றியக்கால் - ஜீவனில்லாமல், தோன்றாது - விளங்காது, சாட்சியின்றி - சீவ

சாட்சியாகிய ஆத்மா இல்லாமல், சீவன்நிலை- சீவன் நிலைத்திருத்தலின், உணர்வு - ஞானமானது, தோன்றாது - விளங்காது, ஆற்றலினால் - (இவ்வாறிருக்கும்) வகையினால், இந்திரியங்கள்- சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்கள், விடயமட்டும்-(சத்தாதி) விஷயங்களை மாத்திரம், அறியும் - அறியாநிற்கும், அவ்விரண்டும் - (சத்தாதி விஷயங்கள் சுரோத்திராதி ஞானேந்திரியங்கள் என்னும்) அவ்விரண்டு பொருள்களையும், கரணமறிந்திடும் - அந்தக்கரணம் அறியாநிற்கும், அவை மூன்றினையும்- (விஷயம், இந்திரியம், அந்தக்கரணம் என்னும்) அம்மூன்று பொருளையும், தேற்றமொடு - தெளிவாக, சீவனறிவுறும் - சீவனறியாநிற்பன், அவை நான்கினையும் - (விஷயம், இந்திரியம், அந்தக்கரணம், ஜீவனென்னும்) அந்நான்கு பொருள்களையும், சாட்சி-ஜீவசாட்சியானது, தெளிந்தறியும் - தெளிவாக அறியா நிற்கும், இதுவே - (இந்திரியம், அந்தக்கரணம், ஜீவனென்னும் மூன்றற்கும் விஷயமாகாது அவற்றோடு விஷயத்தையும் விளக்கும்)இந்தச்சாட்சியே, அதீதப்பொருளாம்-(விஷய முதலியவனைத்திற்கும்) மேற்பட்ட பொருளாம், (எ - று).

ஆலும், தானும் - அசைநிலைகளாம். அதீதம்-அடங்காதது; இதற்கு எதிர்மறை அந்தர்க்கதமாம்; அதன் பொருள் அடங்கியதென்பதாம்.

விஷயங்கள் இந்திரியங்களாலும், இந்திரியங்கள் கரணத்தாலும், கரணம் சீவனாலும், சீவன் சிவசாட்சியாலும் விளங்கு



வனவாயிருத்தலின், இந்திரியங்கள்-விஷயங்களைமாத்திரம் அறிவனவாயும், கரணம் - விஷயம் இந்திரியமென்னு மிரண்டையும் அறிவதாயும், சீவன் - விஷயம், இந்திரியம், அந்தக்கரணம் என்னுமூன்றையும் அறிவதாயும், சாட்சி-விஷயம், இந்திரியம், அந்தக்கரணம், சீவனென்னும் நான்கினையும் அறிவதாயு மிருக்கின்றன; சாட்சியை யறிவது ஒன்றின்மையின்,அதுவே அதீதப் பொருளாயிருக்கின்றதென்பது இதன் திரண்டபொருளாம்.

ஜீவசாட்சியாகிய ஆத்மா எதற்கும் விஷயமாகாது சொப்பிரகாசமாயிருத்தலின் 'அதீதப் பொருளாம்' என்றும், சிதாபாச சகித அவித்தை அல்லது அந்தக்கரணத்தோடு கூடஸ்த சைதன்னியம் சீவனது சொரூபமாயிருத்தலின் "சாட்சியின்றிச் சீவனிலை தானுணர்வு தோன்றாது" என்றும் கூறப்பட்டன.

அந்தக்கரணத்தை வுபாதியாகவுடைய சேதனம், அல்லது அதனை உதாசீனமாய்ச் சமீபத்திருந்தறிவதாகிய சேதனம், அல்லது அந்தக்கரணத்திலும் அதன் விருத்தியிலுமுள்ள சேதனமாத்திரம் சாட்சியாமென்பதும் சாட்சியி னிலக்கணத்துள் ஒன்றாம்.

இந்திரியமில்லாவிடத்து விஷயமும், கரணமில்லாவிடத்து இந்திரியமும், சீவனில்லாவிடத்துக் கரணமும், சாட்சியில்லாவிடத்துச் சீவனும் விளங்குவதில்லை யென்பதுணர்ந்தவர் சாட்சி சீவனை விளக்குவதுவாயிலாகக் கரணத்தையும், அதனை விளக்கு

வது வாயிலாக இந்திரியத்தையும், அதனை விளக்குவது வாயிலாக விஷயத்தையும் விளங்கச் செய்கின்றது; சாட்சியை யன்றி எதுவும் சொப்பிரகாச வடிவமாக விருப்பதில்லை; அதனால், அவை திருசியமாம்; அதனால் சடமாம்; அதனால், அநித்தியமாமென்னும் விவேகமுடையவராய், திருசியகாட்ட மின்றித் திருக்கு காட்டமுடையவராயே யிருத்தற்குரியவராவர்; அதனால், சீவன் முத்தராதற் குரியவராவரென்பது இச்செய்யுளைக் கவனித் துணர்வார்க்கு நன்கு விளங்குவதாமென்க. 10

### அவஸ்தாத்திரய சாட்சி.

11. கற்பனைசெய் யவத்தைகண்மூன் றினுக்குஞ்
சாட்சி கலந்தொருதன் மையினிலகுங் காட்சி கூறிற்,
சிற்பரவுஞ் சாக்கிரத்திற் சாட்சி தானே செகசாட்சி
யாயிருக்குந் தியக்க மான, சொப்பனத்தின் மனோவிரு
த்தி தனக்கே சாட்சி சூனியமாஞ் சுழுத்தியிலஞ் ஞான
மான, வற்பநெறி யானந்த மதற்கே சாட்சி யனைத்தி
னுமிவ் வாறிருந்தோர்ந் தறியுங் காணே.

(இ - ள்.) கற்பனைசெய் - (ஸ்தூலம் - சூக்குமம் - காரணமென்னும் சரீரத்திரயத்துள் முறையே) கற்பனையாயுள்ள, அவத்தைகள் மூன்றினுக்கும்- (சாக்கிரம்-சொப்பனம்-சுழுத்தி யென்னும்) அவஸ்தை மூன்றினும், சாட்சி - (உள்ளுணர் வென்னும் பிரத்தியகாத்மாவாகியசீவ) சாட்சியானது, கலந்து-கூடி, ஒருதன்மையின்-ஒரு தன்மையாக, இலங்கும் - விளங்குகின்ற, காட்சி-அநுபவத்தை, கூறின் - சொல்லுமிடத்து, சிற்பரவும் - சித்தின் விளக்கம் மிகுதியாயுள்ள, சாக்கிரத்தில் !- சாக்ராவஸ்தையில், சாட்சி-சீவசாட்சியானது, தானே-(மனோவிருத்தியை முன்னிட்டுள்ள இந்திரிய விருத்தி வாயிலாகத்)தானே, செக சாட்சியாயிருக்கும் - ஸ்தூலப் பிரபஞ்ச மனைத்திற்கும் சாட்சியாக விளங்கும், தியக்கமான - தெளிவின்மையதான, சொப்பனத்தில் - சொப்பனாவஸ்தையில், மனோவிருத்தி தனக்கு - மனோவிருத்திக்கு, சாட்சி(யாயிருக்கும்)-சாட்சியாக விளங்கும், சூனியமாம் சுழுத்தியில்-(சாக்கிரப் பிரபஞ்சமும் சொப்பனப் பிரபஞ்சமும்) சூனியமாயுள்ள சுழுத்தி யவஸ்தையில், அஞ்ஞானமான - அஞ்ஞானத்தின் காரியமான, அற்பநெறி - மிகச்சிறிய அவித்தியா விருத்தியினால், (விளங்குவதான), ஆனந்தமதற்கு - ஆநந்தத்திற்கு, சாட்சி (யாயிருக்கும்) - சாட்சியாக விளங்கும், அனைத்தினும் - (அஃது அவஸ்தை) அனைத்திலும், இவ்வாறிருந்து - இங்ஙனமிருந்து, ஓர்ந்தறியும் - (அவ்வவஸ்தைகளைப்) பகுத்தறியும், காண் - (மாணவனே! நீ சாட்சி விளக்கம் இவ்வாறிருத்தலை) ஆராய்ந்தறிவாயாக, (எ - று).



ஸ்தூல சரீரத்தில் சாக்கிராவஸ்தையும், சூக்கும சரீரத்தில் சொப்பனாவஸ்தையும், காரண சரீரத்தில் சுழுத்தியவஸ்தையும் தோன்றி விளங்குவனவாம். சீவசாட்சி சாக்கிராவஸ்தையில் சாக்

ரப் பிரபஞ்சத்திற்கு மனோவிருத்தியை முன்னிட்டுள்ள இந்திரிய விருத்தி வாயிலாகச் சாட்சியாயும், சொப்பனாவஸ்தையில் சொப்பனப் பிரபஞ்சத்திற்கு மனோ விருத்தி வாயிலாகச் சாட்சியாயும், சுழுத்தியவஸ்தையில் அங்கு விளங்கும் ஆனந்தத்திற்கு அவித்தியா விருத்தி வாயிலாகச் சாட்சியாயும் இருக்கின்றதென்பது இங்கு உணர்தற்பாலதாம்.

சாக்கிரப்பிரபஞ்சம் ஈஸ்வர சிருஷ்டியாம்; சொப்பனப் பிரபஞ்சம் சீவ சிருஷ்டியாம். சாக்கிராவஸ்தையில் இந்திரிய விருத்தியின் விளக்கமும், சொப்பனாவஸ்தையில் மனோவிருத்தியின் விளக்கமும் மிகுதியாக இருப்பனவாம்; சுழுத்தி யவஸ்தையிலோ அவித்தியாவிருத்தி மாத்திரம் இருப்பதாம். இந்த மூன்று விருத்திக்கும் அவற்றிற்கு விஷயமாயிருப்பனவற்றிற்கும் ஆத்மா சாட்சியாக விருக்கின்றதென்பதைச் சந்தேகவிபரீதமில்லாதுணர்ந்தவர் அவஸ்தாத்திரய சாட்சியாக விளங்குவர் என்பதாம். 'மனோவிருத்தி தனக்கே சாட்சி' என்றமையின், அதற்கு விஷயமான சொப்பனப் பிரபஞ்சத்திற்கும் ஆத்மா சாட்சியாக விருக்கின்றதென்பதை இங்கு உணர்தல் வேண்டும்.

சுழுத்தி யவஸ்தையில் அவித்தியா விருத்தி மிகச் சுருக்கமாக விளங்குதலின் "அஞ்ஞானமான, அற்பநெறி" என்று கூறப்பட்டது.



சாக்கிராவஸ்தையில் விஷய விளக்கம் சொப்பனாவஸ்தையிலுள்ள விஷயவிளக்கம்போலாகாது தெளிவாக விருத்தலின் "சிற்பரவுஞ் சாக்கிரத்தில்" என்று கூறப்பட்டது.

"சாக்கிராவஸ்தை இந்திரிய ஜன்னிய விருத்தியோடு (ஞானத்தோடு) கூடியது". "சொப்பனாவஸ்தை இந்திரிய அஜன்னியமாகிய விஷயத்தைக் கோசரிக்கும் பிரத்தியட்சமான அந்தக்கரணவிருத்தியோடு கூடியது". "சுழுத்தியவஸ்தை அவித்தையைக் கோசரிக்கும் அவித்தியா விருத்தியோடு கூடியது" என்று வேதாந்தபரிபாஷை கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

"நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்
கனவின் மனக்கூத்துங் காண்போம்—நினைவில்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பொருளாய் நாமிருப்போ மே"

என்று சொரூபசாரம் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

அவஸ்தாத்திரய சாட்சியின் நிருபணத்தை விரிவாக வாசுதேவமனனத்திலும் விசாரசந்திரோதயத்திலும் காண்க. 11

## விருத்திஞானத்திரயத்தால் அஞ்ஞானத்திரய நிவிர்த்தியின் நிலை.

12. அரியவிருத் திகண்மூன்று லகுமஞ்ஞா னங்
களினு மாய்ந்து கூறிற், றெரியுமனோ விருத்தியினால்
விடயாஞ்ஞா னங்களெல்லாஞ் சிதையு மேலாய்ப், பிரிவில

கண் டாகார விருத்தியிற்சாட் சியையறியாப் பெத்த நீங்கு, முரியவிவே கவிருத்தி யகண்டாகா ரமுங்கடந்தங் கொன்றா மன்றே.

(இ - ள்.) அரிய - (வேதாந்தசாஸ்திராப்பியாசமின்றியவர்) அறிதற்கரியவாகிய, விருத்திகள் மூன்றால் - மனோவிருத்தி அகண்டாகாரவிருத்தி விவேகவிருத்தி யென்னும் விருத்தித்திரயங்களால், அஞ்ஞானங்கள் அகலும்-அஞ்ஞானங்கள் நிவிர்த்தியாவனவாம் (என்று நான்காவது செய்யுளில் கூறப்பட்டன; அவற்றை), இன்னுமாய்ந்துகூறின் - இன்னமும் ஆராய்ந்து கூறுமிடத்து, (அவற்றுள்), தெரியும் - (சத்தாதி விஷயங்களை) அறிதற்குரிய, மனோவிருத்தியினால்—மனோவிருத்தியினாலே, விடயாஞ்ஞானங்களெல்லாம் - விஷயத்தை மறைத்துள்ள அஞ்ஞானமனைத்தும், சிதையும் - நிவிர்த்தியாவனவாம், மேலாய் - (இவ்விருத்திக்கு) மேலாய், பிரிவில் - பேதமானதில்லாத, அகண்டாகார விருத்தியின் - அகண்டாகாரவிருத்தியினாலே, சாட்சியை - சீவசாட்சியாகிய ஆத்மாவை, அறியாத-அறியாதவாறு அதனை மறைத்துள்ள, பெத்தம் நீங்கும்-அஞ்ஞானம் நிவிர்த்தியாவதாம், உரிய- (சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப்பிராப்திவடிவ மோட்சத்தைத் தருவதற்கு) உரியதாகிய, விவேக விருத்தியின் - விவேக விருத்தியினாலே (சீவப்பிரஹ்ம ஐக்கியத்தை அறியாதவாறு அதனை மறைத்துள்ள அஞ்ஞானம் நீங்குவதாம் ; அதனால்), அகண்டாகாரமும் கடந்து - (மனோவிருத்தியே யன்றி) அகண்டாகார



விருத்தியும் நீங்கிப்போக, ஒன்றாம் - (சீவசாட்சியாகிய ஆத்மாவும் ஈசுவரசாட்சியாகிய பிரஹ்மமும்) ஏகமாகவிருத்தல் விளங்குவதாம், (எ - று).

அங்கு, அன்று, ஏ அசைநிலைகள். 'அகண்டாகாரவிருத்தியின்' என்பதன்கணுள்ள ஏதுப்பொருட்கண் வந்த இன்உருபு விவேகவிருத்தியென்பதனோடுஞ்சென் றியைந்து நின்றது.

இது கடம் இது படம் என்றற்றொடக்கத்தனவாக விஷயங்களை யறிதற்குரிய மனோவிருத்தியினால் விஷய அஞ்ஞானமும், தேகத்திரய விலட்சணமாயும் அவஸ்தாத்திரய சாட்சியாயும் சச்சிதானந்தவடிவமாயும் விளங்கும் ஆத்மாவே நானென்று அதனை யறிதற்குரிய அகண்டாகார விருத்தியினால் சாட்சி அஞ்ஞானமும், அகம்பிரஹ்மாஸ்மி என்னும் விவேக விருத்தியினால் சீவப்பிரஹ்ம ஐக்கிய அஞ்ஞானமும் நிவிர்த்தியாவனவாம்; விவேகவிருத்தியுண்டாயபோது மனோவிருத்தியும் அகண்டாகார விருத்தியும் நிவிர்த்தியாவனவாம்; அதனால், சீவப்பிரஹ்ம ஐக்கியம் செவ்வையாக விளங்குவதாம் என்பது இதன் திரண்ட பொருளாம்.

விஷய அஞ்ஞானம் - விஷயத்தை மறைத்துள்ள அஞ்ஞானமாம்; சாட்சி அஞ்ஞானம் - சாட்சியை மறைத்துள்ள அஞ்ஞானமாம்; சீவப்பிரஹ்ம ஐக்கிய அஞ்ஞானம் - சீவப்பிரஹ்ம ஐக்கியத்தை மறைத்துள்ள அஞ்ஞானமாம்.

(1) 'விடயம் யாவும், ஐவாயி லரவெனவுற் றுணர்தல்' மனோவிருத்தியாம்; (2) ('அவஸ்தாத்திரய) சாட்சி நானென்னல்' அகண்டாகார விருத்தியாம்; (3) 'ஏகபர னானென்னல்' விவேக விருத்தியாம்.

இந்நூல் கூறும் அகண்டாகார விருத்தியையும் விவேக விருத்தியையும் முறையே சாட்சி விருத்தியென்றும் அகண்ட விருத்தியென்றும் ரிபுகீதை கூறுகின்றது; தேகேந்திரிய முதலியவற்றுள் ஒன்றனை நானென்று கொள்ளுதலே இம்மூன்று விருத்தியினும் வேறாகத் அவிதவிருத்தியென்றுங் கூறுகின்றது. இவ்வகையை அது "தேகமுத னானென்ன றவித விர்த்தி திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி, ஏகபர நானென்ன லகண்ட விர்த்தி" யென்று கூறுவதாலறிக.

(1) மனோ விருத்தி கடாதி விஷயங்களை மறைத்துள்ள அஞ்ஞானத்தைக் கெடுக்கின்றது; அதன்கணுள்ள ஆபாச (பிரதிபிம்ப) சேதனமோ அவற்றை விளங்கச் செய்கின்றது என்றும்,

(2) அகண்டாகார விருத்தி சாட்சியை மறைத்துள்ள அஞ்ஞானத்தைக் கெடுக்கிறது; அதன்கணுள்ள ஆபாச சேதனமோ சாட்சி சொப்பிரகாச வடிவமாக விருத்தலின் அதனை விளங்கச்செய்வதின்று என்றும்,

(3) விவேக விருத்தி சீவப்பிரஹ்ம ஐக்கியத்தை மறைத்துள்ள அஞ்ஞானத்தைக் கெடுக்கின்றது; அதன்கணுள்ள



ஆபாச சேதனமோ அவ்வைக்கியம்சொப்பிரகாசவடிவமாக விருத்தலின் அதனை விளங்கச் செய்வதின்று என்றும், இங்கு 'மேய மனோவிருத்தி' என்னும் செய்யுளின் பொருளோடு இச்செய்யுளின் பொருளையும் ஒருங்கமைத் துணர்தல்வேண்டும்.

இவ்வாறுணர்வார்க்கு 'மேயமனோ விருத்தி' என்னும் செய்யுளின் பொருள் இச்செய்யுளின் பொருளோடு பொருத்தமாக விளங்குவதாம்.

"எரிகின்ற விளக்காற் கண்ணு லிருட்பொருள் காணல் வேண்டும், தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும், விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும், புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே" என்று கைவல்ய நவநீதங்கூறுவதிங் கூன்றி யுணர்தற்பாலதாம். பலம் - சீவன்.

அஞ்ஞானம் மூலாஞ்ஞானமென்றும், தூலாஞ்ஞானமென்
றும் இருவகைத்தாம்; அவற்றுள், (மாயை - அவித்தையென்னு
மூபாதிபற்றிப் பிரஹ்மம், ஈசுவரன், கூடஸ்தன், சீவனென
விளங்கும்)சுத்த சேதனத்தை மறைத்துள்ள அஞ்ஞானம் மூலாஞ்
ஞானமாம்; கடாதிவிஷயங்களை யுபாதியாகவுடைய சேதனத்தை
மறைத்துள்ள அஞ்ஞானம் தூலாஞ்ஞானமாமென்னும் சாஸ்தி 12
ரார்த்தமும் இங்குணர்தற்பாலதாம்.

### தத்துவோற்பத்தி லயக் கிரமம்.

13. பேசரிய பரத்தினிலா ரோபமதா மூலப் பிர
கிருதி தோன்றுமிதிற் சாத்திகமா மாயை, யீசனிதிற்
றோன்றுமிரா சதமவித்தை சீவ னிதிற்றோன்றுந் தாம

தத்தா வரணம்விட்சே பமதாஞ், சூசகவிட் சேபமதிற்
சூக்குமபூ தமதாஞ் சூக்கவுட லிருகுணத்தாற் றோன்றிடு
ந்தா மதத்தின், மாசில்பஞ்சீ கரணமதா யைம்பூத வடிவா
மதிற்றூல சடந்தோன்று மனைத்துமிவ்வா றடங்கும்.

(இ - ள்.) பேசரிய - (முன்னிலைச் சுட்டாக இத்தன்மையதென்று அறிந்து நினைத்துச்) சொல்லுதற்கரிய, பரத்தினில் - (அகண்டபரிபூரண சச்சிதாநந்த வடிவப்)பிரஹ்மத்தில், (கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றினாற்போல), ஆரோபமதாக - கற்பனையாக, மூலப்பிரகிருதிதோன்றும் - மூலப்பிரகிருதியென்னும் ஒரு சத்தி தோன்றும், (இது விகிர்தமான சத்துவம் ரஜசு தமசு என்னும் முக்குணத்தோடு கூடியிருக்கும்), இதில் - (இங்ஙனமுள்ள) இம்மூலப் பிரகிருதியில், சாத்திகம்-சத்துவகுணம் (சத்துவகுணத்தோடுகூடிய பிரகிருதி),மாயையாம் - மாயையென்று சொல்லப்படுவதாம், (இது ஈசுவரகாரண சரீரமாம்), இதில்-இம்மாயையில்,ஈசன்தோன்றும்-ஈசுவரன் தோன்றுவன்,(இம்மாயையில் பிரதிபிம்பித்துள்ள பிரஹ்மசேதனம் ஈசுவரனென்று சொல்லப்படுவதாம்), இராசதம் - இராசதகுணம்(இராசதகுணத்தோடுகூடிய பிரகிருதி), அவித்தையாம் - அவித்தையென்று சொல்லப்படுவதாம், (இது ஜீவ காரண சரீரமாம்), இதில்-இந்த அவித்தையில், ஜீவன்தோன்றும்—ஜீவன் தோன்றுவன், (இந்த அவித்தையில் பிரதிபிம்பித்துள்ள பிரஹ்மசேதனம் ஜீவனென்று



சொல்லப்படுவதாம்), தாமதம்- தாமதகுணம்(தாமதகுணத்தோடு கூடியபிரகிருதி),ஆவரணம்விட்சேபமதாம்-ஆவரணம்விட்சேபமென்னும் இரண்டு சத்திகளையுடையதாம், சூசகமாம் - குறிப்பா யறிதற்குரியதாகிய, விட்சேபமதில் - விட்சேபத்தினின்றும் (விட்சேபசத்தியோடுகூடிய மூலப்பிரகிருதியினின்றும்),சூக்குமபூதமதாம்-சூக்குமபூதமுண்டாவதாம், இரு குணத்தால்-(இந்தச் சூக்குமபூதத்தின் சத்துவகுணம் இராசதகுணம் என்னும்) இரண்டு குணத்தினின்றும், (சத்துவகுணத்தோடும் இராசதகுணத்தோடுமுள்ள சூக்குமபூதத்தினின்றும்), சூக்கவுடல்தோன்றிடும்-சூட்சுமசரீரம்உண்டாவதாம், தாமதம்-தாமதகுணம்(தாமதகுணத்தோடுகூடிய சூட்சுமபூதம்), மாசில் - குற்றமற்ற, பஞ்சீகரணமதாய் - பஞ்சீகரணமாய், ஐம்பூதவடிவமாம்-ஸ்தூல ஐம்பூதவடிவமாம், அதில்-அத்தூல பூதத்தினின்றும், தூலசடம் தோன்றும்-ஸ்தூலசரீரம் உண்டாவதாம், அனைத்தும் - (பேசரிய பரத்தினில் கற்பனையாகத் தோன்றிய மூலப்பிரகிருதி முதலிய) அனைத்தும், இவ்வாறு - (தோன்றிய) இவ்வாறே, அடங்கும்-(அதில்) ஒடுங்கும், (எ-று).

இச்செய்யுளின் பொருள் நாநாஜீவவாதக்கட்டளையைப் படிப்போர்க்கு நன்கு விளங்குவதாம்; அதிற் சில வருமாறு:—

1. 'பேசரிய பரத்தினிலா ரோபமதா மூலப் பிரகிருதி தோன்றும்' என்பதன் விரிவு:—" அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிரஹ்மத்தினிடத்திலே சுத்தியி லிரசிதம் (கிளிஞ்சிலில்

வெள்ளி) தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்றொரு சத்தி யுண்டாயிற்று. அந்த மூலப் பிரகிருதியும் விகிர்தகுணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவ குணம் மாயையென்றும், சர்வஞ்ஞ வுபாதியென்றும், ஈசுவர காரணசரீரமென்றும் சொல்லப்படும்” என்பதாம்.

2. ‘இதிற் சாத்திகமாமாயை யீசனிதிற் றோன்றும்’ என்பதன் விரிவு:—“இந்த மாயையினிடத்திலே நிர்மலசலப் பிரதிபிம்பம் போலப் பிரஹ்மம் சலட்சணமாகப் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யம் சர்வஞ்ஞனாகிய ஈசுவரனென்று சொல்லப்படும். இந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் இராசதம், சத்துவத்தில் தாமதமென்று மூன்றுகுண முண்டாயின. இவற்றுள், சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகு(மேற்பட்டுநிற்கு)ம்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தை இரட்சித்தலால் விஷ்ணுவென்று சொல்லப்படும்; சத்துவத்தில் இராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தைச் சிருஷ்டித்தலால் பிரஹ்மாவென்று சொல்லப்படும்; சத்துவத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தைச் சங்காரம் பண்ணுதலால் உருத்திரனென்று சொல்லப்படும்” என்பதாம்.

3. ‘இராசத மவித்தை சீவனிதிற் றோன்றும்’ என்பதன் விரிவு:—“இனி மூலப்பிரகிருதியி னிராசதகுணம் அநேக



ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும் ஜீவ காரண சரீரங்களென்றும் ஒன்றற்கொன்று தாரதம்மியமாக (ஏற்றக் குறைச்சலாக)ச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலினசலப் பிரதிபிம்பம்போலப் பிரஹ்ம சைதன்யம் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யங்கள் கிஞ்சிஞ்ஞரென்றும், சிதாபாசரென்றும், பிராஞ்ஞரென்றும் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராசதத்திற் சத்துவம், இராசதத்தி லிராசதம், இராசதத்திற் றாமதமென்று மூன்று குணமுண்டு. இராசதத்திற் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் தத்துவஞான நிஷ்டனாவன்; இராசதத்தில் இராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபரனாய்க் கன்ம நிஷ்டனாவன்; இராசதத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்களை யுடையவனாவன்” என்பதாம்.

4. ‘தாமதத் தாவரணம் விட்சேபமதாம்’ என்பதன் விரிவு:—“இனி மூலப்பிரகிருதியின் தாமதகுணத்திற்கு ஆவரணம் விட்சேபமென்றிரண்டு சத்திகளுண்டு. இவற்றுள், ஆவரண சத்தியென்பது தத்துவ ஞானியையும், ஈசுவரனையும் தவிர மற்ற ஜீவர்க்கெல்லாஞ் சரீரத்திரயம், சிதாபாசன், சாட்சி சைதன்யமென்பவைகளை யொன்றற் கொன்று பேதம் (வேற்றுமை) தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட ஜீவன்

இருபத்தொன்பது தத்துவங்களையு மொருமைப்பாடாக (ஒற்றுமையாக) நானென் றபிமானிப்பன். இந்த அபிமானம் அகங்காரக்கிரந்தி யென்றும் சம்சார பந்தமென்றும் சொல்லப்படும்" என்பதாம்.

5. 'சூசகவிட் சேபமதிற் சூக்குமபூ தமதாம்' என்பதன் விரிவு:—"இனிவிட்சேபசத்தியினிடத்திலுஞ்சத்ததன்மாத்திரையான ஆகாசம் பிறந்தது; ஆகாசத்திலும் பரிச தன்மாத்திரையான வாயுபிறந்தது; வாயுவிலும் ரூப தன்மாத்திரையானஅக்கினி பிறந்தது; அக்கினியிலும் ரச தன்மாத்திரையான அப்புப் பிறந்தது; அப்புவிலும் கந்த தன்மாத்திரையான பிருதிவி பிறந்தது. இந்தச் சூட்சும பஞ்ச பூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விட்சேப சத்தியி னிடத்திலே தாமதத்திற் சத்துவம், தாமதத்தி லிராசதம், தாமதத்திற் றாமதமென்று அற்பங்கருவிருந்த படியினாலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்ச பூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன; இந்தப் பஞ்ச பூதங்கள் தன்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், சூட்சும பூதங்களென்றும், முக்குண பூதங்களென்றும் சாஸ்திரங்களிலே சொல்லப்படும்" என்பதாம்.

6. 'சூக்கவுட லிருகுணத்தாற் றோன்றிடும்' என்பதன் விரிவு:—"இந்தச்சூட்சும பூதங்களினின்று சூட்சும சரீரங்களுந் தூலபூதங்களும்பிறந்தன. அஃதெங்ஙனென்னில், ஆகாசமுதலான



பஞ்ச பூதங்களினுடைய சாத்வீகாம்சத்திலே பூதத்திற்கொவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணமாம். இந்த அந்தக்கரணத்தி லாகாசத்தி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கு மிடங்கொடுத்துத்தரிக்கின்றது; இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு (1) உள்ளமென்று பெயராம். இந்த அந்தக்கரணத்தில் வாயுவினம்சங் கூடினதற்கடையாளம், இந்த அந்தக் கரணமும் வாயுவைப்போல அலைகின்றது; இப்படி யலைகின்ற விருத்திக்கு (2) மனமென்று பெயராம். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கினியைப்போல இஃது இன்னதென்று விளக்குவிக்கின்றது; இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் (3) புத்தியென்று பெயராம். இந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் அப்புவைப் போல விடயங்களிற்பற்றி யிழுக்கின்றது; இப்படி யிழுக்கின்ற விருத்திக்குச் (4) சித்தமென்று பெயராம். இந்த அந்தக்கரணத்திற் பிருதிவியி னம்சங் கூடியதற்கடையாளம், இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப் போலக் கடினமாக நின்று நானென்று அபிமானிக்கின்றது; இப்படி அபிமானிக்கின்ற விருத்திக்கு (5) அகங்காரமென்று பெயராம்.

இன்னும் ஆகாச முதலிய பஞ்ச பூதங்களினுடைய சாத்வீகாம்சத்திலே பூதத்திற்கொவ்வொரு மாத்திரையெடுத்துத்

தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரிய மென்று சொல்லப்படும். இவற்றன், (1) சுரோத்திரம் ஆகாசத்தி னம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்தமாத்திரத்தை யறியும்; (2) துவக்கு வாயுவினம்சமானபடியினாலே வாயுவின் குணமான பரிசமாத்திரத்தை யறியும்; (3) சட்சு அக்கினியினம்சமானபடியினாலே அக்கினியின் குணமான ரூப மாத்திரத்தை யறியும்; (4) சிங்ஙுவை அப்புவினம்சமானபடியினாலே அப்புவின் குணமான ரச மாத்திரத்தை யறியும்; (5) ஆக்கிராணம் பிருதிவியினம்சமானபடியினாலே பிருதிவியின் குணமான கந்த மாத்திரத்தை யறியும். இப்படி ஐந்து மொன்றோடொன்று கூடாதபடியினாலே ஒன்று மற்றொன்றன் குணத்தைக் கிரகிக்க அறியாது. அந்தக்கரணத்தி லைந்து மாத்திரையு மொன்றாய்க் கூடினதுகொண்டு அஃது ஐந்திந்திரியத்தினாலும் ஐந்து விடயத்தையும் அறியும். இந்தச் சத்துவகுணத்தி லுண்டான அந்தக்கரண மைந்தும், ஞானேந்திரிய மைந்தும் ஆகப் பத்தும் சாத்விகாம்சமானபடியினாலே ஞானசாதனமாயின.

இன்னும், ஐந்துபூதத்தினுடைய இராஜதாம்சத்திலே பூதத்திற் கொவ்வொருமாத்திரை யெடுத்தொன்றாகக்கூட்டிவைத்தது வியானாதி பஞ்ச வாயுக்களாம். இவற்றன், (1) வியானவாயு ஆகாசத்தினம்சமானபடியினாலே ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும்; (2) பிராணவாயு வாயுவினம்சமான



படியினாலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும்; (3) அபானவாயு அக்கினியி னம்சமானபடியினாலே அக்கினியைப்போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக் கொண்டு குதத்தைப்பற்றி நின்று உண்ட அன்ன பானாதிகளை ஜீரணிப்பிக்கும்; (4) சமானவாயு அப்புவினம்சமானபடியினாலே சரீர நடுவான நாபித்தானத்தினின்று உண்ட அன்னபானாதி ரசங்களைச் சகல நாடிகளிலும் அப்புவைப்போல இழுக்கும்; (5) உதானவாயு பிருதிவியினம்சமானபடியினாலே கண்டத்தைப் பற்றிப் பிருதிவியைப்போலக் கடினமாக நின்று உண்ட அன்ன பானாதிகளைக் கடையும். இந்தப் பஞ்சவாயுக்களையுமன்றி வாந்தி பண்ணி வைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் தும்மச்செய்கின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிகொள்ளச் செய்கின்றவன் தேவதத்தனென்றும், வீங்குவிக்கின்றவன் தனஞ்செயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த ஐந்தும் பிராணனுடைய தொழிலானபடியினாலே வேறல்ல.

இன்னும் ஆகாசமுதற் பஞ்சபூதங்களினுடைய இராஜதாம்சத்திலே பூதத்திற் கொவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கன்மேந்திரியமென்று சொல்லப்படும். இவற்றன், ஆகாசத்தினிடமாக (1) வாக்கு வசனிக்கும்; வாயுவினிடமாகப் (2) பாணி இடுத லேற்றல் செய்யும்; அக்கினியினிடமாகப் (3) பாதம் நடக்கும்; அப்புவினிடமாகப்

(4) பாயுரு மல சலாதிகளை வெளியிலே தள்ளும்; பிருதிவியினிடமாக (5) உபத்தம் சுகத்தைப் பண்ணும். இவ் வைந்தும் தனித்தனியே யிருத்தலால் வேறு தொழில் செய்யமாட்டா. வியானாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையு மொன்றாய்க் கூடினது கொண்டு கன்மேந்திரிய மைந்தின் வழியினாலும் ஐந்து தொழில்களையுஞ் செய்து முடிக்கும். இந்த வாயுக்களைந்தும் கன்மேந்திரியங்களைந்தும் ஆகப்பத்தும் இராசதாம்சமானபடியினாற் கிரியா சாதனமாயின.

அந்தக்கரணம் 5-ம், ஞானேந்திரியம் 5-ம், வாயுக்கள் 5-ம், கன்மேந்திரியம் 5-ம், ஆக 20 தத்துவமும் சூட்சுமசரீரமென்று சொல்லப்படும். இந்தச் சூட்சுமசரீரம் மாயாப் பிரதிபிம்பனை ஈசுவரனால் அவித்தியாப் பிரதிபிம்பரா யிருக்கின்ற சீவர்கள் அநேகராகையா லவர்களுள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்றாகச் சிருட்டித்துக் கொடுக்கப்பட்டது'' என்பதாம்.

7. 'தாமதத்தின், மாசில்பஞ்சீ கரணமதா யைம்பூதவடிவாம்' என்பதன் விரிவு:—"தமோம்சமாயிருக்கின்ற ஐந்து பூதங்களுள் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாகப் பகுத்து முதற்பாதியைத்தனுள் ஒவ்வொன்றையும் ஒந்நான்காகப் பகுத்து இரண்டாம் பாதியைத்தனுள் தன்னம்சத்(பாகத்) துடனே கூட்டாமல் மற்ற நான்கு பூதத்துடனும் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாக (ஒன்றிலெட்டி லொருபாகமாக)க் கொடுக்கின்றது பஞ்சீகரணமென்று சொல்லப்படும். இப்படி பஞ்சீகரணம் பண்



ணின தூலபூதங்களிலே ஆகாசத்திலே பரிச ரூப ரச கந்தமாகிய நான்கு குணமும் வியாப்பியமான (வெளிப்படா தடங்கியிருக்கின்ற) படியினால் அதிருசியமாய்ப் (இந்திரியத்திற்கு விஷயமாகாது) போக நிஜகுணமாகிய சப்தமும், வாயுவிலே ரூப ரச கந்தமாகிய மூன்று குணமும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப்போகக் காரண குணமாகிய சப்தமும் நிஜகுணமாகிய பரிசமும், அக்கினியிலே ரச கந்தமாகிய விரண்டு குணமும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப்போகக் காரண குணமாகிய சப்த பரிசமும் நிஜகுணமாகிய ரூபமும், அப்புவிலே கந்தகுணம் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணமாகிய சப்த பரிச ரூபமும் நிஜகுணமாகிய ரசமும், பிருதிவியிலே காரணகுணமாகிய சப்த பரிச ரூப ரசமும் நிஜ குணமாகிய கந்தமும் தோன்றின'' என்பதாம்.

8. 'அதில் தூலசடம் தோன்றும்' என்பதன் விரிவு:—"முன் சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் பிறந்தாற் போலப் பஞ்சீகரணம் பண்ணின தூலபூதங்களினின்றும் ஆறு தத்துவமாய் நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதியாயிருக்கின்ற தூலசரீரங்கள் பிறந்தன'' என்பதாம்.

9. 'அனைத்தும் இவ்வாறடங்கும்' என்பதன் விரிவு:—"சகல ஜீவர்களிடத்திலுமிருக்கின்ற ஸ்தூலசரீரமனைத்தும் தமக்காதாரமான ஸ்தூல பூதங்களிலே மடிந்து (முன்னிலைமைவிட்டுப்) பூதமாத்திரமாக ஒடுங்கும்; இந்த ஸ்தூல பூதங்களும் பஞ்சீ

காரணம் (கலப்பு) விட்டுத் தன்மாத்திரையான (சூட்சுமமான) தமோகுண பூதங்களாக மிஞ்சும்; அப்போது கேவலம் இரணிய கர்ப்பாவஸ்தை (சூட்சும பூதங்களாயிருக்கும் நிலை) யென்று சொல்லப்படும். சூட்சும சரீர தத்துவ மிருபதுங் கட்டு(நிலை) விட்டுப் பூதங்களினுடைய சத்துவகுணமும் இரஜோ குணமுமாக வொடுங்கும். அஃதெங்ஙனமெனின்:—சகலப் பிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங்காரமும், ஆக்கிராணமும், உதானனும், உபத்தமும் பிருதிவியி லொடுங்கும்; சித்தமும், சிங்நுவையும், சமானனும், பாயுருவும் அப்புவி லொடுங்கும்; புத்தியும், சட்சுவும், அபானனும், பாதமும் அக்கினியிலொடுங்கும்; மனமும், துவக்கும், பிராணனும், பாணியும் வாயுவிலொடுங்கும்; உள்ளமும், சுரோத்திரமும், வியானனும், வாக்கும் ஆகாசத்தி லொடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாம். இந்தச் சூட்சும பூதங்களுள், பிருதிவி அப்புவிற் கரைந்தொடுங்கும்; அப்புவும் அக்கினியிற் சுவறி (வற்றி) யொடுங்கும்; விளக்குப் போல அக்கினியும் வாயுவிலணைந் தொடுங்கும்; வாயுவும் ஆகாசத்திலோய்ந் தொடுங்கும்; ஆகாசமும் விட்சேபசத்தியி லொடுங்கும்; ஆவரண சத்தியும் விட்சேப சத்தியும் மூலப்பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய் ஆலமரம் ஆலவித்தி லொடுங்கினாற் போல இன்னுமொரு சிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும்; அந்த மாயையும் அவித்தையும் அதிநுண்மையான (மிகவும் சூட்சுமமான) மூலப்பிரகிருதி யென்று சொல்



லப்படும் விந்து தத்துவத்திலொடுங்கும்; அந்த விந்துவும் பாம்பென்கிற பெயர்போய்ப் பழுதையாய் (கயிறாய்)க் கண்டாற் போலத் தனக்கதிஷ்டானமான பிரஹ்ம சைதன்ய மாத்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் (தேகாதிப் பிரபஞ்சமெல்லாம்) மெய்ப்பொருளொன்றாகக் கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன் வடிவென (தனது நிசவடிவென)க் கண்டு தெளிந்து கவலை (தேகாதிப் பிரபஞ்சத்தாலுண்டாகின்ற வருத்தம்) கெட்டிருக்கின்றவனே ஜீவன் முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது" என்பதாம்.

'சாத்திகமா மாயை' என்பதன்கணுள்ள ஆம் என்பது மாயை யென்பதனோடன்றி அவித்தையென்பதனோடுஞ் சென்றியைந்து நின்றது. 'தாமதத்து' என்பதில் அத்தும், தாமதத்தின் என்பதில் அத்தும் இன்னும் சாரியையாம். இருகுணத்தாலென்பது உருபுமயக்கமாம்.

சத்துவகுணப் பிரகிருதி மாயையென்றும், இராசதகுணப் பிரகிருதி அவித்தையென்றும், தாமதகுணப்பிரகிருதி பிரகிருதியென்றும் சொல்லப்படுகின்றன. "விசுத்த சத்துவரூபமாயை, மலின சத்துவரூப அவித்தை, தமப்பிரதான ரூப பிரகிருதியென மாயா விருத்தித்திரயமுண்டு" என்று வேதாந்த பரிச்சேதம் கூறுவதாலும் மாயை முதலியன இத்தன்மையனவென்பது நன்கு விளங்குவதாம். தத்துவம் - மூலப்பிரகிருதி முதலியன; உற்பத்தி-தோற்றம்; லயம் - ஒடுக்கம்; கிரமம்-முறை. 13

பிரகிருதி முதலியவற்றி னிவிர்த்தி.

14. பகர்வரிய முதற்பொருளின் விவர்த்தமதா
மூலப் பகுதியிந்த வுலகமெய்யாப் பார்த்திடுதன் மாயை,
யகமுடலென் றிருப்பதுவே யவித்தைதத்து வங்க
ளனைத்தையுந்தா னெனமறைப்ப தாவரணம் விடய,
சுகவிருத்தி விட்சேப மிவைகளைந்து மடைவே தொலை
யும்பரி பூரணத்தாற் சோதனைத்தற் பதத்தான், மிகவு
ணருந் தொம்பதத்தாற் றத்துவஞா னத்தால் விதேக
முத்தி யதனாலும் விடப்படுதல் வீடாம்.

(இ - ள்.) பகர்வரிய - (முன்னிலைச் சுட்டாக இத்தன்மையதென்று அறிந்து நினைத்துச்) சொல்லுதற்கரிய, முதற்பொருளின் - (சர்வாதிஷ்டானமாகிய பிரஹ்மசேதனமென்னும்) முதற்பொருளின்கண், மூலப்பகுதி - மூலப்பிரகிருதி, விவர்த்தமதாம் - (வானமைபோலக்) கற்பனையாக இருப்பதாம், (இந்த மூலப்பிரகிருதியோடுகூடிய முதற்பொருளே சர்வ சகத்திற்கும் அபின்ன நிமித்தோபாதான காரணமாம்), இந்த உலகம் - (மூலப்பிரகிருதியோடு கூடியுள்ள பிரஹ்மசேதனத்தினிடம் கயிற்றில் பாம்புபோலக் கற்பிதமாகத் தோன்றி நாமரூப வடிவமாயுள்ள) இந்த உலகத்தை, மெய்யாகப் பார்த்திடுதல் - சத்தியமாக அறிவதற்குக் காரணமாயிருப்பதே, மாயை - மாயையாம், அகம் - நானென்பதன் பொருள், உடல்-சரீரமே,



என்றிருப்பதுவே - என்று கூறுவதற்குக் காரணமாயிருப்பதே, அவித்தை - அவித்தையாம், தத்துவங்களனைத்தையும் - தத்துவபேத மனைத்தினையும், தானென - ஆத்மா வென்று (சீவன் கருதுமாறு ஆத்மாவிற்கும் சரீராதி தத்துவங்கட்கும் உள்ள பேதம் விளங்காவாறு), மறைப்பது - (ஆத்ம சொரூபத்தை) மறைப்பதற்குக் காரணமாயிருப்பதே, ஆவரணம் ஆவரணமாம், விஷயம் - விஷயத்திலே, சுகவிருத்தி - சுகபுத்தி (உண்டாவதற்குக் காரணமாயிருப்பதே), விட்சேபம் - விட்சேபமாம், இவைகளைந்தும் - (மூலப்பிரகிருதி, மாயை, அவித்தை, ஆவரணம், விட்சேபம் என்னும்) இவ்வைந்து தத்துவங்களும், அடைவே - முறையே, பரிபூரணத்தால் - (சர்வம் பிரஹ்மம், சர்வம் மித்தை, சர்வம் நான் என்னும்) பரிபூரண ஞானத்தாலும், சோதனை தத்பதத்தால் - தத்பதார்த்த விசாரத்தாலும், மிக உணரும் - மிகுதியாக அறியத்தக்க, துவம்பதத்தால் - துவம்பதார்த்த விசாரத்தாலும், தத்துவ ஞானத்தால்-(அகம் பிரஹ்மாஸ்மி என்னும்) தத்துவ ஞானத்தாலும், விதேகமுத்தி யதனாலும் - விதேக முத்தியினாலும், தொலையும் - தொலைவனவாம், விடப்படுதல் - (இவ்வாறு மூலப் பிரகிருதி முதலிய ஐந்தும்) நீங்குதலே, வீடாம் - (சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்திவடிவ) மோட்சமாம், (எ - று).

மூலப்பிரகிருதி பிரஹ்மசேதனத்தின்கண் அநாதியாக வானமைபோலக் கற்பிதமாக விருப்பதாம்; மூலப்பிரகிருதி

யோடுகூடிய சேதனத்தின்கண் கற்பனையாகத் தோன்றியுள்ள இந்த உலகை சத்தியமாகப் பார்ப்பதற்கு ஏதுவாயுள்ளது மாயையாம்; தேகாத்மபுத்தி யுண்டாவதற்கு ஏதுவாயுள்ளது அவித்தையாம்; தத்துவபேதம் தெரியாவாறு ஆத்மசொரூபத்தை மறைப்பதற்கு ஏதுவாயுள்ளது ஆவரணமாம்; விஷயத்தில் சுகபுத்தி யுண்டாவதற்குக் காரணமாயுள்ளது விட்சேபமாம்; இவ் வைந்தனுள் மூலப்பிரகிருதி பரிபூரண ஞானத்தால் தொலைவதாம்; மாயை தத்பதார்த்த விசார ஞானத்தால் தொலைவதாம். அவித்தை துவம்பதார்த்த விசார ஞானத்தால் தொலைவதாம்; ஆவரணம் தத்துவஞானத்தால் தொலைவதாம்; விட்சேபம் விதேகமுத்தியால் தொலைவதாம்; இவை இவ்வாறு தொலைதலே மோட்சமாம் என்பது இதன் திரண்டபொருளாம்.

ஈசுவர காரணசரீரம் - மாயையாம்; ஜீவ காரணசரீரம் - அவித்தையாம்; விட்சேபம் - தோற்றமாம்; அது தேகாதிப் பிரபஞ்சங்களாம். இவை தோன்றுவதற் கேதுவாயுள்ள மாயா சக்தி - விட்சேபசத்தியாம். ஆவரணம் - மறைப்பாம்; அது தோன்றுவதற்கேதுவாயுள்ள மாயாசத்தி - ஆவரணசத்தியாம்.

தத்பத லட்சியார்த்தத்தை யறிவதால் மாயையும், துவம்பத லட்சியார்த்தத்தை யறிவதால் அவித்தையும், ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தை யறிவதால் ஆவரணமும் தொலைந்தவிடத்து, சர்வம் மித்தை, சர்வம் பிரஹ்மம், சர்வம் நானென்னும் பரிபூரண ஞானம் உண்டாவதாம்; அதனால், மூலப்பிரகிருதி



தொலைவதாம்; விட்சேபமோ பிராரப்த கரும நாசத்தால் விதேக முத்தி யுண்டானபோது தொலைவதாமென்பது இங்குணர்தற்பாலதாம்.

மூலப்பிரகிருதி, மாயை, அவித்தை என்பன ஒருபொருட்கிளவிகளாம். அது சத்துவம், இராசதம், தாமதமென்னும் முக்குணமும் ஒத்துள்ளபோது மூலப்பிரகிருதி யென்றும், சத்துவகுண மிக்குள்ளபோது மாயை யென்றும், இராசதகுண மிக்குள்ள போது அவித்தை யென்றும், தாமதகுணமிக்குள்ளபோது தமோகுணப் பிரகிருதி யென்றும் சொல்லப்படுகின்றதென்க. இந்தத் தமோகுணப்பிரகிருதி ஆவரண விட்சேபசத்திகளையுடையதாம். "சுத்தப் பிரஹ்மத்தை யாசிரயித்துக் கொண்டிருக்கும் மாயையினை அவித்தை யென்றும் அஞ்ஞானமென்றும் கூறுவர். அது சிந்திக்கக் கூடாத சக்தியுள்ளதாயும் யுக்திக்கு நிற்காததாயு மிருத்தலால் மாயை யென்றும், வித்தையால் (ஞானத்தால்) நாசமடைவதால் அவித்தையென்றும், ஸ்வரூபத்தை மறைப்பதால் அஞ்ஞானமென்றும் கூறப்படுகின்றது. மாயை யாசிரயிக்கும் சேதனம் சாமானிய சேதனமாம்; அது மாயைக்கு விரோதமானதன்றும்; ஆனால், சாதகமாயிருக்கின்றது; சத்தாஸ்புரண (விளக்க)த்தைத் தருகின்றது. விருத்தியில் இருக்கும் சேதனம் அல்லது சேதனசகித விருத்தி மாயைக்கு விரோதியா மென்றறிதல் வேண்டும்" என்று விசாரசாகரம் கூறுவதும்,

"தமசு, மாயை, மோகம், அவித்தை, அநிருதம் என மாயாநாம பஞ்சகமுண்டு; அதற்கு (1) சீவ சைதந்நியத்தை

மறைத்தலால் 'தமசு' என்றும், (2) சகத்ரூபமான தன்னின் வேறாகிய தோற்றத்திற்குக் காரணமாதலால் 'மாயை' என்றும், (3) அவ்வாறு தோற்றிய சகத்தில் சுத்திவெள்ளி முதலிய விபரீத முண்டாக்குவதால் 'மோகம்' என்றும், (4) வித்தையினாற் கெடுதலால் 'அவித்தை' என்றும், (5) சத்ரூபத்திற்கு அந்நியமாதலால் 'அநிருதம் பொய்' என்றும் பெயராம்" என்று வேதாந்த பரிச்சேதம் கூறுவதும்,

"மாயைக்கு விக்ஷேபம் ஆவரணமென்னும் இரண்டு சக்திகளுண்டு; அவற்றுள், விக்ஷேப சக்தி இலிங்காதிப் பிரஹ்மாண்டாந்தமான ஜகத்தைச் சிருஷ்டிக்கின்றது; மற்றைச் சக்தி உள்ளில் திருக்குத்திருசியங்களின் பேதத்தையும், வெளியிற் பிரஹ்ம சர்க்கங்(சிருஷ்டி)களின் பேதத்தையும் மறைக்கின்றது. அது சம்சாரத்திற்குக் காரணம்; சாக்ஷிக்குமுன் விளங்குகின்றது; இலிங்கதேகத்தோடு கூடியதாயிருக்கின்றது. அதில் சிற்சாயையின் பிரவேசத்தால் வியாவகாரிகஜீவ னாகின்றான். இதன் ஜீவத்துவம் ஆரோபத்தினால் சாக்ஷியினிடத்துத் தோற்றுகின்றது" என்று ருக்குவேதத்தின் சரஸ்வதிரஹஸ்யோபநிஷத்துக் கூறுவதும் இங்குணர்தற் பாலனவாம்.

சோதனைத் தற்பதத்தால் என்பதனைத் தற்பதசோதனையால் என்றும், தொம்பதத்தால் என்பதனைத் தொம் (துவம்) பத சோதனையால் என்றும் கொள்க.



(1) தற்பத சோதனையாவது தத்துவமசி மகா வாக்கியத்தின் தத்பதத்தின் வாச்சியார்த்தத்தையும் இலட்சியார்த்தத்தையும் ஆராய்ந்தறிதலாம். தத்பத வாச்சியார்த்தம் - ஈசுவரனும்; இலட்சியார்த்தம்-ஈசுவர சாட்சியாகிய சுத்தப்பிரஹ்மமாம்.

(2) துவம்பத சோதனையாவது துவம்பதத்தின் வாச்சியார்த்தத்தையும் இலட்சியார்த்தத்தையும் ஆராய்ந்தறிதலாம். துவம்பத வாச்சியார்த்தம் - சீவனும்; இலட்சியார்த்தம் சீவ சாட்சியாகிய கூடஸ்தனும் (ஆத்மாவாம்).

இருப்பதுவே என்னும் ஏகாரம் ஏனையவிடத்துஞ் சென்றியைந்து நின்றது. எண்ணும்மைகள் தொக்குநின்றன. விடுதலென்னும் செய்வினைத் தொழிற் பெயர் இங்கு விடப்படுதலென்னும் செயப்பாட்டுவினைத் தொழிற்பெயராய்த் திரிந்து நின்றது. இச்செய்யுள் நிரனிறையணியாம்; அஃதாவது வரிசையாகச் சொல்லப்பட்ட சொற்பொருள்களுக்குச் சம்பந்தமுள்ள 14
சொற்களை அம்முறையே யமைத்தலாம்.

## பிரஹ்ம சப்தாவஸ்தை.

15. சோதிதா னுயிருந்தாற் பிரமமதா மாயையிலே
தோய்ந்தா லீசன், காதலவித் தையிற்கூடிற் சீவனும்
பிரமாதா கரணந் தோய்ந்தான், மேதகுமிந் தியஞ்சேர்ந்
தாற் பிரமாண மறியாத விடயத் தெய்தல், யாததுவே
பிரமேய மறிவதிற்போந் தாற்பலமே மூவத்தை கூடும்.

(இ - ள்.) சோதி - (சுயம்பிரகாசமாயுள்ள) சேதனம், தானாயிருந்தால்-(உபாதியின்றித்தானே)தானாக விளங்குமிடத்து, பிரமமதாம்-பிரஹ்மசேதனமென்று சொல்லப்படுவதாம், மாயையிலே தோய்ந்தால் - (அது மூலப்பிரகிருதியாகிய உபாதியோடு கூடி அவ்வுபாதியின் ஒரு பகுதியாகிய) மாயையிலே பிரதிபிம்பித்துக் கூடியவிடத்து, ஈசனாம் - ஈசுர சேதனமென்று சொல்லப்படுவதாம், காதல் - (அகம் அஞ்ஞானியென்று) விருப்பத்தோடு (சொல்லுதற்குரிய), அவித்தையில் - (அவ்வுபாதியின் மற்றொரு பகுதியாகிய) அவித்தையிலே, கூடின்-பிரதிபிம்பித்துக் கூடியவிடத்து, சீவனாம் - சீவ சேதனமென்று சொல்லப்படுவதாம், கரணம் தோய்ந்தால் - அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்துக் கூடியவிடத்து, பிரமாதாவாம்-பிரமாதா சேதனமென்று சொல்லப்படுவதாம், மேதகும்-(வெளிவிஷயங்களை யறிவதற்கு)மேம்பாடுடையனவாயுள்ள, இந்திரியம் சேர்ந்தால் - இந்திரியங்களோடு கூடியவிடத்து, பிரமாணமாம் - பிரமாண சேதன மென்று சொல்லப்படுவதாம், அறியாத விடயத்து - அப்பிரத்தியட்ச விஷயத்தோடு, எய்தல் - கூடிய சேதனம், யாது - எதுவோ, அதுவே - அச்சேதனமே, பிரமேயமாம் - பிரமேய சேதனமென்று சொல்லப்படுவதாம், அறிவதில் - (அது) பிரத்தியட்ச விஷயத்தோடு, போந்தால் - கூடியவிடத்து, பலமாம் - பலசேதனமென்று சொல்லப்படுவதாம், எழுவத்தை கூடும்-(இங்ஙனம் சொப்பிரகாசமாயுள்ள சேதனம்) சப்தாவஸ்தைகளைப் பெறுவதாம், (எ - று).



ஒன்றாகவேயுள்ள ஆகாசம் கடமட முதலிய உபாதிகளை முன்னிட்டுக் கடாகாசம் மடாகாச முதலிய பல பெயர்களை யடைவது போல, ஒன்றாகவேயுள்ள சொப்பிரகாச சேதனமும் மாயை அவித்தை முதலிய உபாதிகளை முன்னிட்டுப் பிரஹ்ம சேதனம் ஈசுரசேதன முதலிய பல பெயர்களை யடைகின்றதென்பது இதன் திரண்டபொருளாம்; இதனால் சேதனபேதம் உண்மையில் இல்லையென்பது பெறப்படுவதாம். தண்டமுடையவனைத் தண்டியென்று சொல்லுமிடத்து, அத்தண்ட மில்லாதவன் நிர்த்தண்டி யென்று சொல்லப்படுவதுபோல, மாயை அவித்தை முதலியவற்றை யுடைய சேதனத்தை ஈசுர சேதனம் சீவசேதனமென்றற் றொடக்கத்தனவாகச் சொல்லுமிடத்து அவ்வுபாதியில்லாத சேதனம் பிரஹ்மசேதனமென்று சொல்லப்படுகின்றதென்க.

ஒரு வஸ்துவைப் பல வஸ்துவைப்போலத் தோன்றச் செய்வதற்குக் காரணமாயிருப்பது உபாதியாம்.

"சேதனத்திற்கு நான்கு பேதமுண்டு:—(1) பிரமாதா
சேதனம், (2) பிரமாண சேதனம், (3) பிரமிதி சேதனம்; அத
னையே பிரமாசேதனம் என்றுஞ் சொல்லுவர்; (4) பிரமேய
சேதனம்; அதனையே விஷய சேதனமென்றுஞ் சொல்லுவர்.
இந்த ரீதியினால் பிரமையென்பது சேதனத்திற்காம்; அது
நித்தியமாம்; இந்திரிய ஜந்நியமன்று. ஆதலால், இந்திரிய
மதற்குக் காரணமன்று. அங்ஙனமாயினும், சேதனத்தின்கண்

பிரமா வியவகாரத்தைச் சம்பாதிக்கும் விர்த்தியும் பிரமாவென்று சொல்லப்படுகின்றது. அதற்கு இந்திரியம் காரணமாம்.

(1) தேகத்தின் மத்தியிலுள்ள அந்தக்கரணத்தால் அவச்சின்னமான (வளைவுபட்ட) சேதனம் பிரமாதா வெனப்படும்.

(2) அவ்வந்தக்கரணமே நேத்திரமுதலிய இந்திரியவாயிலாய்ப் புறம்போந்து எவ்வளவு தூரங் கடாதி விஷயங்களிருக்குமோ, அவ்வளவு நீண்ட பரிணாமம் அந்தக்கரணத்திற்கு உளதாகா நிற்கும். எதிரிலுள்ள விஷயமாகிய கடாதிகளோடு சேர்ந்து எப்படி கடாதிகளினாகாரமிருக்குமோ, அப்படியே அந்தக்கரணத்தின் ஆகாரமுளதாகா நிற்கும். தொட்டியின்கணிரம்பிய ஜலம் சித்திர (துவார) வாயிலாய்ப் புறப்பட்டு நீண்டகால் (வாய்க்கால்) ஆகாரமாய்த் தோட்டத்தின் வயலிற் சென்று எப்படி வயலினது ஆகாரமாயிருக்குமோ, அவ்வாகாரத்தை யெப்படி ஜலமானது அடையாநிற்குமோ, அப்படியே அந்தக்கரணமும் இந்திரிய ரூபமாகிய சித்திர வாயிலாகப் புறப்பட்டு விஷய ரூபமாகிய வயலுக்குப் போகா நிற்கும். ஆண்டுச் சரீரந்தொட்டுக் கடாதி விஷய பரியந்தம் அந்தக்கரணத்தின் வாய்க்கால் போன்ற பரிணாமமெதுவோ, அதனை விர்த்திஞாநமென்பர்; அதனால், அவச்சின்னமான சேதனத்தினைப் பிரமாண சேதனமென்பர்.

(3) விர்த்திஞான ரூபமாகிய அந்தக்கரணத்தினது பரிணாமத்தினைப் பிரமாணமாமென்று சொல்லுவர். ஜலமானது வயலிற் சென்று வயலின் சமானாகாரத்தை யெப்படியடையா நிற்கின்றதோ, அப்படியே விர்த்தியானது கடாதியாகிய விஷயங்களிற் சென்று கடாதிகளின் சமானாகாரத்தை யடையா நிற்கின்றது. அதனாலவச்சின்னமாகிய சேதனம், பிரமா சேதன மெனப்படும்.



(4) ஞானத்திற்கு விஷயமான கடாதிகளால் அவச்சின்னமான சேதனம் விஷய சேதனமென்று சொல்லப்படும். இதனைப் பிரமேய சேதனமென்றுங் கூறுவர். இவை வேதார்த்தங்களை யறிந்துள்ள ஆசாரியர்களின் பரிபாஷைகளாம்.'' என்று விசாரசாகரம் நான்காம்தரங்கம் கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

(1) மாயா ரகிதசேதனம் சுத்த சேதனமாம்; (2) மாயாசகித சேதனம் ஈசுவர சேதனமாம்; (3) அவித்தியா சகித சேதனம் ஜீவ சேதனமாம்; (4) அந்தக்கரண சகித சேதனம் பிரமாதா சேதனமாம்; (5) இந்திரிய சகித சேதனம் பிரமாண சேதனமாம்; (6) அப்பிரத்தியட்ச விஷய சகித சேதனம் பிரமேய சேதனமாம்; (7) பிரத்தியட்ச விஷய சகித சேதனம் பல சேதனமாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

சேதனம் - அறிவு; அப்பிரத்தியட்சம் - பரோட்சம்; பிரத்தியட்சம் - அபரோட்சம்; ரகிதம் - கூடாதது, சகிதம் - கூடியது.

எனது நிஜவடிவ சேதனம் உபாதியால் பலவாக விருத்தல் போல விளங்குகின்றது; அதற்கு உண்மையில் பேதமென்பது சிறிதுமின்றென்பதைத் தனது சற்குரு மூர்த்தியினநுக்கிரஹத்

தாலுணர்ந்து, உணர்ந்தவாறு அறிவாக விளங்குகின்றவனே
சீவன்முத்தனாவனென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம். 15

### அஷ்டப் பிரமாணம்.

16. உற்றெதிரே காண்டல்பிரத் தியட்சமனு மான
மோங்குபுகை கண்டுநெருப் புண்டெனவே யுணர்தல்,
மற்றுவமை மரைபசுப்போ லெனல்சத்தம் பெரியோர்
வாய்ச்சொலருத் தாபத்தி மதத்தவுட லதனா, லற்றவுப
வாசியொளித் துண்பானென் றுணர்த லபாவமுன்பி
னிடையொருகா லத்துமிலை யென்ன, னற்றியவிம் மரத்
தினிற்பே யுண்டெனலை திக நாட்டுதலே சம்பவம்ப்ர
மாணமெட்டா நவிலும்.

(இ - ள்.) உற்று - (சத்தாதி விஷயங்களில்) பொருந்தி,
எதிரே - நேரே, காண்டல் - (அவற்றைக்) காணுதற்குக் காரண
மாயுள்ள சுரோத்திர முதலிய இந்திரியங்கள், பிரத்தியட்சம் -
பிரத்யட்சப் பிரமாணமாம், ஓங்குபுகை கண்டு - (ஒரு மலையின்
கண் தொடர்ச்சியாக) ஓங்கி யெழுகின்ற புகையைக்கண்டு,
நெருப்புண்டென - (இம்மலை) நெருப்புடையதென்று, உணர்தல் -
(அந்நெருப்பினை) உணர்தற்குக் காரணமான புகை ஞானம்,
அனுமானம் - அனுமானப் பிரமாணமாம், பசுப்போல் - ஆவைப்
போல (இருக்கின்றது), மரை - இவ்வாமா, எனல் - என்றுணர்வது



(ஆகிய ஆவொப்புமையோடுகூடிய பிண்டஞானம்), உவமை - உவ
மானப் பிரமாணமாம், பெரியோர் வாய்ச்சொல் - (உண்மை உரைக்
கும்) பெரியோரது வாயினின்றுண்டாகும் சொற்கள், சத்தம் - சப்
தப்பிரமாணமாம், அற்ற - (பகலில் உண்ணுதல்) அற்ற, உபவாசி -
உபவாசியினது, மதத்த உடலதனால் - பூரித்த உடம்பினாலே,
ஒளித்துண்பான் - (இவன் இரவில்) மறைந்துண்பான், என்
றுணர்தல் - என்று இராப்போஜனத்தைக் கற்பிக்கும் ஞானம்,
அருத்தாபத்தி - அருத்தாபத்திப் பிரமாணமாம், முன் இல்லை,
(கடம்) முன்னேயில்லை, பின் இல்லை - (கடம்) பின்னேயில்லை,
இடை இல்லை - (கடம்) நடுவேயில்லை, (கடம் படமன்று), ஒரு
காலத்துமில்லை - (கடம்) ஒருகாலத்துமில்லை, என்னல் - என்று
கடமில்லை யென்னும் நிச்சயத்தை யுண்டு பண்ணும் கடம்விளங்
காமை, அபாவம் - அநுபலப்திப் பிரமாணமாம், நற்றிய - விரும்
பத்தக்க, இம்மரத்தினில் - இவ்வாலமரத்தின்கண், பேயுண்
டெனல் - பேயிருக்கின்றதென்று உலக வார்த்தையால் வரும்
பேய் ஞானம், ஐதிகம் - ஐதிகப் பிரமாணமாம், நாட்டுதலே -
(ஆயிரம் என்னும் எண்ணில் நூறு என்னும் எண் உண்டு
என்னும்) நிச்சயஞானமே, சம்பவம் - சம்பவப் பிரமாணமாம்,
பிரமாணம் எட்டா நவிலும் - இங்ஙனம் பிரமாணங்கள் எட்டா
கச் சொல்லப்படுகின்றன, (எ - று).

"நத்திய" என்பது எதுகை நோக்கி "நற்றிய" எனத்
திரிந்து நின்றது. ஐதீகமென்பதன் பூர்வவடிவம் ஐதிகமாம்.

இலை யென்பது முன், பின், இடை யென்பவற்றோடுஞ் சென்றியைந்து நின்றது. போல் என்பது இருக்கின்றது என்பதை அவாவிநிற்றலின், அது வருவிக்கப்பட்டது. ஆமா-காட்டுப்பசு. காண்டல், உணர்தல் என்பன காரியவாகு பெயர்கள்.

## பிரமாண லட்சணம்.

ஒரு வஸ்துவினது சித்திக்குப் பிரமாணம் வேண்டுவதாம். பிரமேயங்களின் யதார்த்த ஞானத்திற்குக் காரணங்களான ஈசுவர - அதிருஷ்ட - கால - கர்த்திரு-காரணாதிகளோடு ஞானோற்பத்தி வியாபாராசிரயமான அசாதாரண ஹேதுவே பிரமாணமெனப்படுவதாம். அது பிரத்தியக்ஷம், அநுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அநுபலப்தி, சம்பவம், ஐதிகமென்றெட்டுவகையாம்; அவற்றுள்:—

1. கட முதலியவற்றைக் காண்டலாகிய சாக்ஷாத்காரத்திற்கு முக்கிய காரணங்களான நேத்திர முதலிய இந்திரியங்கள் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்;

2. அக்கினியினது ஞானத்தைச் சம்பாதிப்பதான தூமமுடைமை ஞானம் அநுமானப் பிரமாணமாம்;

அது பிரதிஞ்ஞை, ஏது, திருஷ்டாந்தமென்ற மூன்றவயவமுடையதாம்; அம்மூன்றனுள், பர்வதம் அக்கினியுடையதென்பது பிரதிஞ்ஞையாம்; புகையுடைமையால் என்பது ஏதுவாம்; மடைப்பள்ளிபோலென்பது திருஷ்டாந்தமாம்.



3. ஆவையொக்கும் ஆமாவென்னும் வாக்கியத்தைக் கேட்டவன், வனத்தை யடைந்து ஆமாவைக் கண்டகாலத்து உண்டாகும் ஆவொப்புமையோடு கூடிய பிண்டஞானம் உவமானப் பிரமாணமாம்;

4. பரமேசுவரன் கூறிய வேதங்களும், அவற்றை மூலமாக உடைய ஸ்மிருதி புராணேதிகாசங்களும், உலகத்தில் கண்டது கூறும் சற்புருஷர் தத்தம் ஆப்தர்களுக்குக் கூறுவனவும், ஆற்றங்கரையில் இரண்டு பழங்களுளவெனப் பரோட்ச அர்த்தங்களை யறிவிப்பனவுமாகிய சத்தங்கள் ஆகமப் பிரமாணமாம்;

5. (i) பகலுண்ணாத உபவாசியினது தேக பீனத்துவத்தை (உடற்பருமையைக்)கண்டு, அதனால் காணப்படும் பருமைக்குக் காரணமான இராத்திரி போஜனத்தைக் கற்பிப்பது திருஷ்டார்த்தாபத்தி (காட்சி அருத்தாபத்தி)ப் பிரமாணமாம்.

(ii) தேவதத்தன் கிருகத்திலில்லையென்பதைக் கேட்டவன், கேட்ட அவ்வசனத்திற்குப் பொருள் அவன் வேறிடத்திலிருப்பனென்று நிச்சயிப்பது சுருதார்த்தாபத்தி (கேள்வி அருத்தாபத்தி)ப் பிரமாணமாம்;

6. ஈண்டுக் கடமில்லையென்னும் நிச்சயத்தை யுண்டுபண்ணும் கடத்தினது விளங்காமை அநுபலப்திப் பிரமாணமாம்;

7. ஆயிரமென்னும் எண்ணில் நூறென்னும் எண் உண்டென்று உணர்தல் சம்பவப் பிரமாணமாம்;

8. இவ்வால விருட்சத்தின்கண் பேய் இருக்கின்றதென்ற உலக வார்த்தையால் வரும் பேய் ஞானம் ஐதிகப் பிரமாணமாம்.

இப் பிரமாணங்களுள்,

(1) சார்வாகர்க்குப் பிரத்தியட்சமொன்றே பிரமாணமாம்;

(2) பௌத்தர்க்கும் வைசேடிகர்க்கும் அவ்வொன்றோடு அனுமானமும் பிரமாணமாம்;

(3) சாங்கியர்க்கு அவ்விரண்டோடு ஆகமமும் பிரமாணமாம்;

(4) ஜைநர்க்கும் நியாய ஏகதேசிகளுக்கும் அம்மூன்றோடு உவமானமும் பிரமாணமாம்;

(5) பிரபாகரர்க்கு அந்நான்கோடு அர்த்தாபத்தியும் பிரமாணமாம்;

(6) பாட்டர்க்கும் வேதாந்திகளுக்கும் அவ்வைந்தோடு அநுபலத்தியும் பிரமாணமாம்;

(7) பௌராணிகர்க்கு அவ்வாறோடு சம்பவமும் ஐதிகமும் பிரமாணமாமென்பது இங்குணரற்பாலதாம்.

### அபாவ சதுஷ்டம்.

முன்னிலை-பிராகபாவமாம்; பின்னிலை-பிரத்துவம்ஸாபாவமாம்; இடையிலை - அந்நியோந்நியாபாவமாம்; ஒருகாலத்துமிலை - அத்தியந்தாபாவமாம்; அவற்றுள்,



(1) மிருத்திகை (மண்) முதலியவற்றில் கடாதிகள் முன்னில்லாமை பிராகபாவமாம்:

(2) உண்டாய கடாதிகள் பின்னில்லாமை பிரத்துவம்சாபாவமாம்;

(3) கடம் படம்அன்று, படம் கடம்அன்று என்பன அந்நியோந்நியாபாவமாம்;

(4) ஆகாயத்தாமரை, மலடிமைந்தன், முயற்கொம்பு முதலியன (முக்காலத்துமின்மையின்) அத்தியந்தாபாவமாம்.

1. பிராகபாவம் - உற்பத்திக்குமுன் இல்லாமை;
2. பிரத்துவம்சாபாவம் - அழிவிற்குப்பின் இல்லாமை;
3. அந்நியோந்நியாபாவம் - ஒன்று மற்றொன்றன்று எனல்;
4. அத்தியந்தாபாவம் - முற்றுமின்மை; (அஃதாவது எத்தேசத்தும் எக்காலத்து மில்லாமை).

இந்நான்கன்றி ஒரு சமயத்திருந்து மற்றொரு சமயத்தில் இல்லாமையாகிய சாமயிகாபாவமு முண்டு. இது கூறிய அபாவங்களில் அந்தியந்தாபாவத்தி லடங்குவதாம்.

வேதாந்திகள் அங்கீகரித்துள்ள பிரத்தியட்ச முதல் அநுபலத்தி யீறாக வுள்ளஆறு பிரமாணங்களின் நிரூபணமும், அவை இவ்வாற்றால் பிரஹ்மத்தை யறிதற்குச் சாதனமாயிருக்கின்றனவென்பதும் கைவல்யநவநீத வசன வினாவிடையில் (சந்தே

கந் தெளிதற் படலத்தில்) சுருங்கச் சொல்லலும் விளங்க வைத்தலுமாக எழுதப்பட்டிருக்கின்றன; அவற்றை இவ்வுரையோடு சேர்த்தோதினால், இவ்வுரையின் பொருள் விரிவாக விளங்குவதாம்.

பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களினியல்புகள் மிகு விரிவாகத் தர்க்க பரிபாஷை, நியாயப் பிரகாசம், விருத்திப் பிரபாகர முதலிய நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றன; அவற்றை ஆண்டுக் காண்க. 16

### ஜீவ சப்தாவஸ்தை.

17. மன்னியதோ ரஞ்ஞானந் தன்னையறியா ததும
றைப்பா வரண மாகும், பன்னியவிட் சேபமென தென
லாப்த வாக்கியமே பரோட்ச ஞானந், தன்னிலைதா னா
துவே யபரோட்சங் கண்டதொரு சந்தோ டத்தி, னந்
நிலையே துக்கமும்போ யானந்த மடைவதுமே மூவத்
தைப் பேராம்.

(இ - ள்.) தன்னை-(சம்சாரப்பற்றுள்ளவனான சீவன் சுருதி விசாரத்திற்குமுன் சுயம்பிரகாச பிரத்யகாத்மப்பிரஹ்மமாயுள்ள) தனது நிஜசொரூபத்தை, அறியாதது-(யான்அறியேனென்னும் வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பது, மன்னியது - (நான் பிரஹ்மமென்னும் தத்துவஞான முண்டாகுமளவும்) நிலைத்திருப்பதாகிய, ஓர் அஞ்ஞானம் - ஒப்பற்ற அஞ்ஞானமாம், மறைப்பு-(பின்னர் அவன் ஒருசமயம் சிதாத்மப் பிரசங்கம் கேட்க நேரிட்டவிடத்துப் பிரத்யக்ஆத்மப் பிரஹ்ம சொரூபமில்லை; இருந்தால் அப்பிரத்யக்காத்மப்பிரஹ்மசொரூபம் தோன்றாதா என்னும் இவ்விருவகையான)மறைப்பே, ஆவரணமாகும்-(அவ்வஞ்ஞானகாரியமான) ஆவரணமாம், எனதெனல் - (அப்பால் அவன் யானே கர்மத்தைச் செய்பவன், அதன்பலத்தை யனுபவிப்பவன் யானேயென்று கருதி அதனால் தேகாபிமானத்தோடு காணி மனை முதலியவற்றை) எனதென்று அபிமானிப்பது, பன்னிய - (வெளிப்படையாகத் துக்க சாதனமாமென்று) சொல்லப்படுகின்ற, விட்சேபம் - விட்சேபமாம், ஆப்தவாக்கியமே - (பிறகவன் பிரத்யக்காத்மப்பிரஹ்மசொரூபத்தின் இருப்பைச் சொல்லும்) ஆப்தனாகிய குருவாக்கிய விசுவாசத்தினால் பிரத்யக்காத்மப்பிரஹ்ம சொரூபம் உண்டென்று தெளிவதே, பரோட்சஞானம்-(பிரத்யக்காத்மப் பிரஹ்மசொரூபமில்லை என்னும் முதல் ஆவரணத்தைக் கெடுக்கும்) பரோட்சஞானமாம், தன்னிலை - (அதன் பின் அவன் தத்துவமசி மகாவாக்கியார்த்த விசாரத்தின் பெருக்கினால்) தனது நிலைத்த பிரத்யக்ஆத்மப் பிரஹ்மசொரூபத்தை (யானென்று அறிந்து), தானானதுவே - (வேற்றுமையின் விளக்கமின்றித்) தன்மயமாக விளங்குவதே, அபரோட்சஞானம் - (இருந்தால் அப்பிரத்யக்ஆத்மப் பிரஹ்மசொரூபம் தோன்றாதாவென்னும் இரண்டாவதாகிய ஆவரணத்தைக் கெடுக்கும்) அப

ரோட்சஞானமாம், கண்டது - (அதன்மேல் அவன் பிரத்யக் ஆத்மப்பிரஹ்ம சொரூபம் நானென்று) அறிந்தமையாலுண்டாகிய, ஒரு சந்தோடத்தின் - ஒப்பற்ற மகிழ்ச்சியினாலே, அந்நிலையே - அப்போதே, (அஞ்ஞானமும் ஆவரணமுமேயன்றி), துக்கமும் - (யானே கர்மத்தைச் செய்பவன், அதன்பலத்தை அநுபவிப்பவன் யானே யென்னும் விபரீதத்தினால் உண்டாகிய) துக்கங்களும், போய் - ஒழிய, ஆனந்தமடைவது - (தன்னைச் செய்யுஞ் செய்கை முடிந்தவனென்றுணர்ந்து இயல்பாக) ஆநந்தசொரூபமாக விளங்குவதே (தடையற்ற ஆநந்தமாம்), எழவத்தைப்பேராம் - (இவையே சீவ)சப்தாவஸ்தையின் நாமங்களாம், (எ - று).

அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்சஞானம், அபரோட்சஞானம், துக்கநிவிர்த்தி, தடையற்ற ஆநந்தமென்னும் சீவாவஸ்தை எழனுள், ஆவரணம் அஞ்ஞானத்தின் காரியமாம்; விட்சேபம் ஆவரணத்தின் காரியமாம்; பரோட்சஞானம் பிரத்யக்ஆத்மப் பிரஹ்மசொரூபமில்லையென்னும் ஆவரணத்திற்கு விரோதியாம்; அபரோட்சஞானம் இருந்தால் பிரத்யக்ஆத்மப் பிரஹ்மசொரூபம் தோன்றாதாவென்னும் ஆவரணத்திற்கு விரோதியாம்; துக்கநிவிர்த்தியும் தடையற்ற ஆநந்தமும் அபரோட்சஞானத்தின் பலமாம் என்பதிங் குணர்தற்பாலதாம்.

“போக” என்பது ‘போய்’ எனத்திரிந்து நின்றது. இச்செய்யுளில் சாஸ்திரார்த்தம் நோக்கி வேண்டும் சொற்கள் வரு



விக்கப்பட்டன. இவ்வாறு வேண்டும் சொற்கள் செய்யுளில் குறைந்திருக்குமிடத்து அவை இசையெச்சமெனப்படும்.

சொல்லெச்சம் - ஒருசொல் குறைந்திருப்பது. இசையெச்சம் - பலசொல் குறைந்திருப்பது. துக்கமும் என்னும் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாம். அடைவதும் என்னும் உம்மை சாரியையாம். ஞானம் என்பது அபரோட்சமென்பதனோடுஞ்சென்றியைந்து நின்றது.

“ஆபாசனது ஸப்தாவஸ்தைகளின் பெயர்களை ஸ்ரீ குரு கூறுகின்றார்:—சிஷ்யனே! இப்போது ஆபாசனது ஸப்தாவஸ்தைகளை நான் சொல்லுகின்றேன்; அதனை நீ கேட்பாயாக. அந்த எழவஸ்தைகளில் எதுவும் சேதநமாகிய கூடஸ்தனுக்கு இல்லை. ‘நான் பிரஹ்மம்’ என்னும் ஞானமும் அவ்வேழவஸ்தையினுள்ளேயே இருக்கின்றது.

ஸப்தாவஸ்தைகளின் பெயர்:—அஞ்ஞானம், ஆவரணம், பிராந்தி (விட்சேபம்), இருவிதஞானம், சோகநாசம், ஹர்ஷம் என்பவற்றினைச் ஸப்தாவஸ்தையென நிச்சயிப்பாய்.

அஞ்ஞான ஆவரணங்களின் ஸ்வரூபவர்ணநம்:-சிஷ்யனே! ‘நான் பிரஹ்மத்தினை யறியேன்’ என்று புருஷர் கூறும் வியவகாரத்திற்கு ஹேது அஞ்ஞானமாம். ‘பிரஹ்ம மில்லை, பாநமாக (விளங்க)வில்லை’ என்னும் வியவகாரத்திற்கு ஹேது ஆவரணமாம். ஆவரணத்தால் இவ்வியவகாரமுண்டாகின்றது. எதனு

லெனின், அஞ்ஞானத்தின் சக்தி இரண்டு பிரகாரமாயுள ; அவற்றுள், ஒன்று அஸத்துவாபாதகமாம்; மற்றொன்று அபாநா பாதகமாம். இவ்விரண்டனையும் ஆவரணமென்பர்.

'வஸ்து வில்லை' என்னும் பிரதீதியைச் செய்வதாயுள்ள சக்தி அஸத்துவாபாதகமெனப்படும். 'வஸ்து பாநமாகவில்லை' என்னும் பிரதீதியைச் செய்வதாயுள்ள அஞ்ஞானத்தின் சக்தி அபாநாபாதகமெனப்படும். (பிரதீதி - தோற்றம்.)

இந்த ரீதியால் 'பிரஹ்ம மில்லை' என்னும் வியவகாரத்திற்கு ஹேது அஞ்ஞானத்தின் அஸத்துவாபாதக சக்தியாம்; 'பிரஹ்மம் பாநமாகவில்லை' என்னும் வியவகாரத்திற்கு ஹேது அஞ்ஞானத்தின் அபாநாபாதக சக்தியாம். இவ்விரண்டிற்கும் ஆவரணமென்று பெயராம்.

பிராந்தியின் வர்ணநம்:—கூடஸ்தனிடத்தில் ஜந்மாதி சம்சாரப் பிரதீதி வேதத்தின்கண் பிராந்தியெனப்படும். இதனையே சோகமென்று சொல்வர்.

இருவித ஞான வர்ணநம் (பரோக்ஷம், அபரோக்ஷம்):— பரோக்ஷமென்றும், அபரோக்ஷமென்றும் ஞானம் இருவிதமாம். அவற்றுள், 'பிரஹ்ம முளது' என்பது பரோக்ஷ ஞாநமாம்; 'அஹம் பிரஹ்மம்' என்பது அபரோக்ஷ ஞானமாம். 'பிரஹ்ம மில்லை' என்னும் ஆவரண அம்சத்தினைப் பிரஹ்மம் உளது என்னும் பரோக்ஷ ஞாநம் நாசஞ்செய்கின்றது. எதனாலெனின்,



'சத்திய ஞாநாநந்த ரூபமாகப் பிரஹ்மம் இருக்கின்றது' என்னும் ஞானத்திற்குப் பரோக்ஷ ஞாந மென்று பெயராம். அது 'பிரஹ்மமில்லை' என்னும் பிரதீதிக்கு விரோதியாம்; வேறொன்றற்கும் விரோதி யன்று.

'நான் பிரஹ்மமா யிருக்கின்றேன்' என்னும் அபரோக்ஷ ஞாநம் சகல அவித்தியாஜால (ஸமூக)த்திற்கும் விரோதியாம். இந்தக் காரணத்தால் 'நான் பிரஹ்மத்தினை யறியேன்' என்பது அஞ்ஞானமாம்; 'பிரஹ்ம மில்லை, பாநமாக வில்லை' என்பது ஆவரணமாம்; 'நான் பிரஹ்ம மல்ல ; பின்னையோ, புண்ணிய பாபங்களின் கர்த்தாவும், சுகதுக்கங்களின் போக்தாவுமாகிய ஜீவன்' என்பது பிராந்தியாம். இவ்வளவு அவித்தியா ஜாலத்தினை அபரோக்ஷ ஞானம் நாசஞ்செய்யாநிற்கும்.

பிராந்தி நாச வர்ணநம்:—'என்னிடத்தில் ஜந்ம மரண மில்லை; சுகதுக்கங்கள் அற்பமு மில்லை; ஒரு சம்சார தர்மமு மென்னிடத்தி லில்லை. பின்னையோ, ஜந்மரகிதமாகிய கூடஸ்தன் யான்' என்று சிஷ்யனே! இவ்விதமாக ஸர்வ அநர்த்தங்களையும் நிஷேதித்தல் பிராந்தி நாசத்தின் ஸ்வரூபமாம். ஈண்டுக் கூடஸ்தனிடத்தில் ஜந்மநிஷேதஞ் செய்தமையால், ஸர்வ அநர்த்தத்தின் நிஷேதத்தினையும் அறிக. எதனாலெனின், ஜந்மப் பிரதீதியின் பின்னர், மற்றைய அநர்த்தங்கள் பிரதீதி யாகின்றன. ஆதலால், ஜந்மத்தினை நிஷேதிப்பதால் ஸர்வ அநர்த்

தங்களும் நிஷேதிக்கப்படுகின்றன. இந்தப் பிராந்தி நாசத்தினையே சோகநாச மென்றுங் கூறுவர்.

ஹர்ஷ ஸ்வரூப வர்ணநம்:—சிஷ்யனே! தனது ஸ்வரூப ஞானம் 'நான் அத்வைதப் பிரஹ்மரூபன்' என்று ஸம்சய ரகிதமா யுனக்கு எப்போதுண்டாகின்றதோ, அப்போது உனக்கு ஆநந்தமுண்டாகும். அதனை ஹர்ஷமென்று நீ அறி.

சிஷ்யனே! ஸப்தாவஸ்தைகளை உனக்கு யான் கூறினேன். அவை முழுதும் ஆபாஸனுக்கேயாம். அவனிடத்திலேயே ஞாநமுளது. சிஷ்யனே! 'ஞாநம் யார்க்குண்டாகின்றது' என்று நீ வினாவியதற்கு விடை கூறினேன்" என்று விசாரசாகரம் கூறுவது இங்குணர் தற்பாலதாம்.

அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்ச ஞானம், அபரோட்சஞானம், துக்கநிவிர்த்தி, தடையற்ற ஆநந்தமென்னும் சீவ சப்தாவஸ்தையில் இச்செய்யுளின்படி (I) தனையறியாதது - அஞ்ஞானமாம்; (2) மறைப்பு - ஆவரணமாம்; எனதெனல் - விட்சேபமாம்; (4) ஆப்தவாக்கியம் - பரோட்ச ஞானமாம்; (5) தன்னிலை தானானது - அபரோட்சஞானமாம்; (6) துக்கம் போதல் - துக்க நிவிர்த்தியாம்; (7) ஆநந்தமடைவது - தடையற்ற ஆநந்தமாம்.

இச் சிவசப்தாவஸ்தைகளைச் சிவசொரூபமாந் தேசிகர் வாயிலாக விசாரித்தறிகின்றவன் இவ்வவஸ்தைகள் எனது நிஜவடிவப்



பிரத்தியகாத்மப் பிரஹ்மசொரூபத்தின்கண் நீரின்கண் புழுதி நிச்சயமா யில்லாமைபோல நிச்சயமாயில்லை யென்னு முணர்ச்சி யுடையவனாய், சீவன்முத்த னாதற்குரியவனாவனென்பது இச் செய்யுளின் தாற்பரியமாம்.

இச் சீவசப்தாவஸ்தை கைவல்லியநவநீதவசன வினாவிடை
யில் (தத்துவவிளக்கப்படலத்தில்) விரிவாக வெழுதப்பட்டிருக் 17
கின்றது; அதனை விருப்புடையார் ஆண்டுக் காண்க.

### தூலசரீரமுதல் பிரஹ்மம்வரைக்கும் திருஷ்டாந்தம்.

18. கடவடிவு தூலவுடல் கடசலமே காரணங் கடசல
த்தி லழுக்கவித்தை கடசலவான் சீவன், கடவெளிமேல்
வெளிசாட்சி சத்தாமிவ் விரண்டுங் கடசலம்போற் றனு
காரணங் கலங்கினுந்தான் கலங்கா, கடசலம்வற்
றுநிழல்போ லாசையினா லவித்தை கலந்துநின்ற திரவி
யெதிர் கடசலம்போ லிலதாங், கடவெளிமேல் வெளி
போற்சற் குருவருளா னன்குங் கரந்துசட சாட்சிசத்
தாய்க் காண்பதத்து விதமே.

(இ - ள்.) தூலவுடல் கடவடிவு - (ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியாய் இருக்கின்ற) ஸ்தூலசரீரம் கடவடிவம் போல்வதாம், காரணம் - (ஸ்தூலசரீரத்திலுள்ள)

அந்தக்கரணம், கடசலம் - கடத்திலுள்ள சலம்போல்வதாம், அவித்தை - (அவ்வந்தக்கரணத்திலுள்ள) அவித்தை, கடசலத்திலழுக்கு - கடசலத்திலுள்ள அழுக்குப்போல்வதாம், சீவன் - (அவித்தையுடைய அந்தக்கரணத்தில் சேதனத்தின் பிரதிபிம்பமாயுள்ள) சீவன், கடசலவான் - (அழுக்கோடுகூடிய) கடசலத்தில் ஆகாசம் பிரதிபிம்பித்திருத்தல் போல்பவனாவன், சாட்சி - (அந்தக்கரணமுற்றுமுள்ள) சீவசாட்சியாகிய கூடஸ்தசேதனம், கடவெளி - கடவடிவமுற்றுமுள்ள ஆகாசம் போல்வதாம், [சாட்சி - (அந்தக்கரணத்திற்கு வெளியேயுள்ள) ஈசுவரசாட்சியாகிய பிரஹ்மசேதனம்,] மேல்வெளி - (கடத்திற்கு) வெளியேயுள்ள ஆகாசம்போல்வதாம், இவ்விரண்டும் - (சீவ சாட்சியாகிய கூடஸ்த சேதனமும் ஈசுவரசாட்சியாகிய பிரஹ்மசேதனமுமாகிய) இவ்விரண்டும், சத்தாம் - (கடாகாசத்திற்கும் மகாகாசத்திற்கும் எப்போதும் பேதமில்லாமைபோலப் பேதமில்லாது ஏகமாய்ப்) பொன்றாப்பொருளாயிருப்பதாம், தனுகரணம் - ஸ்தூல சரீரத்துள்ள அந்தக்கரணம், கடசலம்போல் - கடத்திலுள்ள சலம் (காற்றால் கலங்குதல்)போல, கலங்கினும் - (அவித்தை - காம - கர்மங்களால்) கலங்கினாலும், தான் - (சீவ சாட்சியாகிய) கூடஸ்த சேதனம், கலங்காது - (கடாகாசம் காற்றால் கலங்காமைபோல அவித்தை - காம - கர்மங்களால்) கலங்காது நிர்விகாரமாயிருப்பதாம், அவித்தை கலங்குகின்றது - (ஸ்தூலசரீரத்தில்) அவித்தையோடு பொருந்தி (சேதனத்தின்



பிரதிபிம்பத்துடன்) இருக்கின்ற அந்தக்கரணம், ஆசையினால் - (சீவனது யான் எனது என்னும் அபிமானவடிவ) ஆசையினால், கடசலம் - கடத்திலுள்ள சலம், நிழல் - நிழலால், வற்றாமைபோல் - வற்றிக்கெடாமைபோல (சுருங்கிக் கெடாமலிருப்பதாம்), இரவியெதிர் - ஆதித்தனது சந்நிதானத்தினாலே, கடசலம்போல் (அழுக்கோடு கூடிய) கடசலம் (வற்றிக்கெடுவது) போல, இலதாம் - (அகம் பிரஹ்மாஸ்மி யென்னும் தத்துவஞானத்தினாலே அவ்வந்தக்கரணம்) சுருங்கிக் கெடுவதாம், சற்குருவருளால் - சற்குருவினது (கிருபையோடு கூடிய "தத்துவமசி" மகாவாக்கியார்த்த) உபதேசத்தினாலே, நான்கும் - (ஸ்தூல சரீரம், அதிலுள்ள அந்தக்கரணம், அதிலுள்ள அவித்தை, அவித்தையோடு கூடிய அந்தக்கரணத்தில் சேதனத்தின் பிரதி பிம்பமாயுள்ள சீவன் என்னும்) நான்கும், கரந்து - மித்தையாயொழிய, கடவெளி மேல் வெளிபோல் - கடாகாசத்தை அதற்கு வெளியேயுள்ள மகாகாசமாகக் காண்பதுபோல, சடசாட்சி - சடசாட்சியென்னும் (சீவசாட்சியாகிய) கூடஸ்தனை, சத்தாய் - (ஈசுவர சாட்சியாகிய) பிரஹ்மமாக, காண்பது - (உள்ளவாறு) அறிவது, அத்துவிதமாம் - (அதிகாரி புருஷனுக்கு) அத்துவித ஞானமாம், (எ-று).

I. ஸ்தூலசரீரம் கடம்போல்வதாம்; 2. அதிலுள்ள அந்தக்கரணம் கடசலம் போல்வதாம்; 3. அவ்வந்தக்கரணத்திலுள்ள அவித்தை கடசலத்திலுள்ள அழுக்குப்போல்வதாம்; 4. அவித்-

தையோடு கூடிய அந்தக்கரணத்தில் பிரஹ்ம சேதனத்தின் பிரதிபிம்பமாயுள்ள ஜீவன் அவ்வழுக்கோடு கூடிய கடசலத்தில் ஆகாசம் பிரதிபிம்பித்திருத்தல் போல்பவனாவன்; 5. ஜீவ சாட்சியாகிய ஆத்மா கடாகாசம் போல்வதாம்; 6. ஈசுவர சாட்சியாகிய பிரஹ்மம் (கடத்திற்கு வெளியிலுள்ள) மகாகாசம் போல்வதாம்; 7. அவ்விரண்டும் ஏகமாம்; பொன்றுப்பொருளாம்; 8 அந்தக்கரணம் (தன்னிடத்துள்ள சேதனத்தின் பிரதிபிம்பமாகிய ஜீவனோடு) அவித்தை - காம - கருமங்களால் கலங்குதல் காற்றால் கடசலம் கலங்குதல் போல்வதாம்; 9 கடசல அசைவினால் கடாகாசம் அசையாமைபோல, அந்தக்கரணத்தின் அசைவினால் ஜீவசாட்சி அசைவதில்லையாம்; 10 நிழலாலே கடசலம் வற்றிக் கெடாமை போல ஆசையாலே அந்தக்கரணம் சுருங்கிக் கெடாதிருப்பதாம்; 11 அழுக்கோடு கூடிய கடசலம் சூரியனது சந்நிதானத்தால் வற்றிக்கெடுவதுபோல அவித்தையோடு கூடிய அந்தக்கரணம் தத்துவஞானத்தால் மித்தையாய்க் கெடுவதாம்; அதனால், ஜீவ சேதனமாய் விளங்கிய கூடஸ்த சேதனம் கடாகாசமும் மகாகாசமும் பேதமின்றி ஏகமாய் விளங்குவது போலப் பிரஹ்மசேதனமாய் விளங்குவதாம் என்பதைச் சற்குருவருளால் உணர்ந்தவன் ஸ்தூல சரீரம், அந்தக்கரணம், அவித்தை, ஜீவன் என்னும் இந்த நான்கையும் மித்தையாக உணர்ந்து பிரஹ்ம சேதனமாகவே விளங்குவன்; இவ்வாறு அவன் விளங்குவதே அத்துவிதானுபவமாம் என்பது இதன் திரண்டபொருளாம்.



மாயையில் பிரஹ்மத்தின் பிரதிபிம்பமாயுள்ள ஈசுவரன் இயல்பாகவே தன் சொரூபத்தில் மறைப்பில்லாதவனா யிருத்தலின், அவனுக்குப் பிரஹ்ம விசாரமின்றென்பதை உணர்த்த ஈசுவர சேதனத்தைப்பற்றி இச்செய்யுள் ஒன்றும் கூறவில்லையென்க. கடசலத்தில் அழுக்கிருப்பதுபோல அந்தக்கரணத்தில் அவித்தை யிருக்குமென்றாராயினும், இனம்பற்றிக் காமங்களும் கர்ம வாசனைகளும் இருக்குமென்று கொள்ளல்வேண்டும். அவித்தை - காம - கர்மங்களோடு கூடிய அந்தக்கரணமே ஜீவனுக்குச் ஜனன மரண காரணமாம். கடாகாசமும் மகாகாசமும் என்றும் ஏகமாகவே யிருத்தல்போல, தனது நிஜ சொரூபமாகிய ஆத்மாவும் பிரஹ்மமும் என்றும் ஏகமாகவே யிருக்கின்றனவென்பதுணர்ந்து ஸ்தூல சரீர முதலிய திருசியங்களில் சத்திய புத்தியின்றி, உணர்ந்தவாறே யிருப்பவனுக்கு ஜன்மம் இல்லையாமென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம்.

அந்தக்கரணத்தில் அவித்தை யிருப்பது மண் தன் காரிய வடிவக்கடத்தில் இருத்தல் போல்வதாம்.

அத்துவிதமென்பதன் பொருள் இரண்டாவதில்லாததென்பதாம். "ஏக மேவாத்விதீயம் பிரஹ்மம்" என்னும் வேத வாக்கியம் 'ஏகம்' என்னும் பதத்தால் சுவகதபேதமும், 'ஏவ' வென்னும் பதத்தால் சஜாதீய பேதமும், 'அத்விதீயம்' என்னும் பதத்தால் விஜாதீய பேதமும் பிரஹ்மத்திற்கில்லை யென்பதை விளக்குவதாமென்பதிங்குணர்தல் வேண்டும்.

ஒரு விருட்சத்திற்கு (அதன்) கிளை முதலியன வேறாயிருத்தல் சுவகதபேதமாம்; அதுபோன்ற விருட்சம் வேறாயிருத்தல் சஜாதீயபேதமாம்; அவ்விருட்சத்தினும் விலட்சணமான கல் முதலியன வேறாயிருத்தல் விஜாதீய பேதமாம்.

பிரஹ்மம் அவயவமற்றிருத்தலின், சுவகத பேதமில்லாததாம்; அதுபோன்ற பிரஹ்மமொன்றில்லாமையின், சஜாதீய பேதமில்லாததாம்; அதற்கு விலட்சணமான மாயாப்பிரபஞ்சம் சத்தியமாகவில்லாமையின், விஜாதிய பேதமில்லாததாம்.

கயிற்றில் கற்பிதமாயுள்ள பாம்பு அதற்கு உண்மையில் வேறாகவில்லாமைபோல, பிரஹ்மத்தில் கற்பிதமாயுள்ள மாயாப் பிரபஞ்சம் அதற்கு உண்மையில் வேறாகவில்லையா மென்பதிங் குணர்தற்பாற்றாம்.

சுவகதபேதம், சஜாதீயபேதம், விஜாதீயபேதமில்லாத பிரஹ்ம சொரூபமாகச் சற்குருவருளால் விளங்குகின்றவனே அத்வைத அநுபவியாவனென்பதாம்.

ஆறுதத்துவமாவன :—(1) சர்மம் (தோல்), (2) உதிரம் (இரத்தம்), (3) மாமிசம் (சதை - இறைச்சி), (4) சநாயு (நரம்பு), (5) அத்தி (எலும்பு), (6) மச்சை (கொழுப்பு) என்பனவாம்.

நால்வகைப் பிறப்பாவன :—(1) சராயுஜம், (2) அண்டஜம், (3) சுவேதஜம், (4) உற்பிஜ்ஜம் என்பனவாம். (1) சராயுஜம் - கருப்பையிற் பிறப்பது; மான், ஆடு, யானை, மனிதன் முதலி



யனவாம். (2) அண்டஜம் - முட்டையிற் பிறப்பது; பட்சி, பாம்பு முதலியனவாம். (3) சுவேதஜம் - வியர்வையிற் பிறப்பது; பேன், கொசுகு, புழு முதலியனவாம். (4) உற்பிஜ்ஜம் - நிலத்திற்பிறப்பது; மரம், செடி, புல், பூண்டு முதலியனவாம். (வித்தினின்றும் பூமியைப் பிளந்து கொண்டு வெளிப்படும் தாவர பேதம் உத்பிஜ்ஜமாம்).

இவையன்றி மானஸம் என்பதொன்று முண்டு. மனச் சங்கற்பத்தா லுண்டான தேவர் முதலியோர் மானஸராவர்; பிருகு-புலஸ்தியர் முதலியோரும் மானஸராவர்.

மூவகைச் சாதியாவன:—(1) உத்தம சாதி, (2) மத்திம சாதி, (3) அதம சாதி என்பனவாம். பலவற்றைத் தொடர்ந்து ஒன்றாகத் தோன்றுந்தன்மை சாதியாம். சாதி-தன்மை - துவம் என்பன ஒருபொருட்கிளவிகளாம்.

(1) இகலோக பரலோக புத்தியுடைய மானிட சரீரமும் சூர்யாதி சரீரமும் உத்தமஜாதி யுடையனவாம்; (2) இகலோக புத்திமாத்திரமுடைய பசு பட்சி முதலிய சரீரமும், காமதேனு முதலிய சரீரமும் மத்திமஜாதி யுடையனவாம்; (3) இவ்விருலோக புத்தியு மின்றிய மரங் கொடி முதலிய சரீரமும், கற்பக விருட்ச முதலிய சரீரமும் அதமஜாதி யுடையனவாம். இவற்றின் விரிவை நாநா ஜீவவாதக்கட்டளைக் குறிப்புரையிற் காண்க.

கலங்காது என்பதும் வற்றாமை யென்பதும் செய்யுள் விகாரத்தால் 'கலங்கா' 'வற்றா' என ஈறு தொக்குநின்றன. கரக்க என்பது கரந்தெனத் திரிந்து நின்றது.

'கடவெளி' 'மேல்வெளி' என்றமையின், அதற்கேற்ப மற்றொரு சாட்சி வருவிக்க வேண்டியதாயிற்று. கடவெளி போல்வது சீவ சாட்சியாம்; மேல் வெளிபோல்வது ஈசுவர சாட்சியாம். பொன்றாப்பொருள் - அழியாதபொருள்.

இச்செய்யுளின் பொருளை யூன்றியுணர்வார்க்குச் சீவசாட்சி யாகிய ஆத்மாவும் ஈசுவர சாட்சியாகிய பிரஹ்மமும் ஒன்றே யென்னு முணர்ச்சியோடு, மாயாப் பிரபஞ்சத்தை மித்தையாகக் கண்டு, ஜீவேசபேத புத்தியின்றி அறிவானந்த வடிவமாக விளங்கு கின்றவனே அத்துவித ஞான முடையவனாவன்; அவனுக் குப் பேதப்பிரதீதி உண்மையாக வின்றாம்; அதனால், அவன் சுக துக்க முதலிய துவந்துவங்களுக் கடிமையாவ தில்லையா மென் பது நன்கு விளங்குவதாம்.

"கடத்தில் நிரம்பிய ஜலத்திலுள்ள மகாகாசத்தின் பிரதி பிம்பம்போலப் புத்தியில் அல்லது அதன் காரணமாகிய அவித் தையிலுள்ள பிரஹ்மத்தின் ஆபாசம் (பிரதிபிம்பம்) எதுவோ அஃது அவிவேக திருஷ்டியால் தனது அதிஷ்டானமாகிய கூடஸ்தசேதனத்தோடு கூடியதாய் (கூடஸ்தசேதனத்தோடு தாதாத்மியமுடையதாய்)த் தோற்றுகின்றது. அதனைச் சீவ



னென்பர். ஸ்தூலதேக வடிவக் கடத்தில் புத்திவடிவ அல்லது அவித்தைவடிவ ஜலம் நிரம்பியிருக்கின்றது; அதிலுள்ள பிரஹ்மத்தின் ஆபாசத்தை மித்தையென்றறி ந்து விடுதலால், எஞ்சி நிற்பதாகிய அவற்றின் அதிஷ் டானமான சிதாபாசவடிவக் கூடஸ்தசேதனம் எதுவோ அது மகாகாசத்தைப்போலப் பிரஹ்மமாம் (பரிபூரண சேதனவடிவ மாம்); அதுவே தானே தானாகிய சுவரூபமாம்; அஃதாவது கடஜலத்திலுள்ள ஆகாயத்தினது பிரதிபிம்பத்தின் நிஜவடிவ மகாகாசத்தைப்போலச் சிதாபாசவடிவ ஜீவனது நிஜரூபமாம்." என்று பாலபோதம் நான்காவது உபதேசத்திற் கூறுவதும்,

"கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றாமெய் போதம்
இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெய் போது மேகம்
திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்தி டாயே"

என்று கைவல்லியநவநீதங் கூறுவதும் இங்குணர்தற்பாலனவாம்.

## துவம்பத தத்பதாநுபவம்.

19. தொம்பதத்தி னுபாதிகெடச் சொரூபமதா மதுவே தொன்மையதாந் தற்பதசோ தனைசெயவும் வேண்டுந், தம்பவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முத லாச் சாற்றுதன்மாத் திரைப்பகுதி தானுமிருப் பதனை, னம்பரிபூ ரணமறைந்து ஞானமின்றி முனம்போ னடு

முயி ராதலினு ளுதனருட் படியே, யிம்பருபா தியும் போய்நி ருபாதிகமா மதனு லெப்பொருளப் பொருளாகி யிருப்பதுதன் னியல்பே.

(இ - ள்.) தொம்பதத்தினுபாதி - (உபதேச மகாவாக்கிய மென்னும் தத்துவமசி மகாவாக்கியத்தின்) துவம்பதத்தின் லட்சியார்த்தமாகிய கூடஸ்தனது உபாதியாகிய அவித்தை, கெட - (அதிகாரி புருஷனே! உனக்குத் தேகத்திரய விலட்சணமாய் அவஸ்தாத்திரய சாட்சியாயுள்ள நான் அறியும் பொருளுமன்று; அறியாப்பொருளுமன்று; ஆனுல், அறிவாகிய பொருளாமென் றுண்டாகும் ஆத்ம ஞானத்தால்) கெடுமாயின், சொரூபமதாம் - (நீ) கூடஸ்த னென்னும் ஆத்மாவாகவே விளங்குதல் உண்டாவதாம், அதுவே தொன்மையதாம் - அவ்வாத்மாவே நித்தியமாயிருப்பதாம், தம்பவுடல் மூன்றினுக்கும் - (உனக்கு ஆத்மசொரூபமாகவே விளங்குதல் உண்டாமாயினும்) தம்பம்போலுள்ள ஸ்தூல-சூட்சும—காரண மென்னும் சரீர மூன்றனது இருப்பிற்கும், சீவனுக்கும் - சீவனது இருப்பிற்கும், (ஈசுவரனது இருப்பிற்கும்), முதலாக - காரணமாக, சாற்று - சொல்லப்படுகின்ற, தன்மாத்திரைதானும் - (பஞ்சீகிருத பூதமென்னும் ஸ்தூல பூதங்களுடன் அபஞ்சீகிருதபூதமென்னும்) சூக்கும பூதங்களும், பகுதிதானும்-(சீவ[illegible] சரீரமாகிய) அவித்தையும்(சூக்கும பூதங்களுக்குக் கிரணமான[illegible]வர்க்கு காரண சரீரமாகிய மாயையும்),



இருப்பதனுல் - (கெடாமல்) இருப்பதனுல், (மாயாப் பிரபஞ்சம் சத்தியமாகத் தோன்றுவதாம்; அதனுல்), நம்பரிபூரணமறைந்து - உனது பரிபூரண சொரூபமாகிய பிரஹ்மம் விளங்காது மறைந்து (விடுவதாம்; அதனுல்), ஞானமின்றி - (ஆத்ம) ஞானமில்லாமல், முனம்போல் - முன்போல, உயிர் - (உனது) உயிர், விரும்பி யறிவநாடும் - (மாயாப் பிரபஞ்சத்தைச் சத்தியமாக) விரும்பி யறிவதாம், ஆதலினுல் - ஆதலினுலே, (நீ), நாதனருட்படியே - சற்குருவினது உபதேச நெறியே, தற்பத சோதனையும் செய்ய வேண்டும் - (அம்மகா வாக்கியத்தின்) தத்பதத்தின் லட்சியார்த்தமாகிய பிரஹ்ம விசாரமும் செய்தல் வேண்டும், (துவம்பதத்தின் லட்சியார்த்த விசாரமும் தத்பதத்தின் லட்சியார்த்த விசாரமும் செவ்வையாகச் செய்வாயாயின்), இம்பர் - இவ்வுலகத்தில், உபாதியும் - (சமஷ்டி வியஷ்டிப் பிரபஞ்சமேயன்றி அவற்றின் காரணமாகிய) மாயோபாதியும் அவித்யோபாதியும், போய் - (மித்தையா யொழிவனவாம்; அவை மித்தையாய்) ஒழியவே, (உனக்கு), நிருபாதிகமாம் - கூடஸ்தப் பிரஹ்மம் உபாதியின்றி ஏகமாக விருத்தல் விளங்குவதாம், அதனுல் - (அவை) அவ்வாறு விளங்குவதனுல், எப்பொருள் - எந்தப்பொருள் பிரஹ்மமோ, அப்பொருளாகி - அந்தப் பிரஹ்மப் பொருளாகி, இருப்பது - இருத்தலே, தன்னியல்பு-ஆத்மானுபவமாம், (எ - று).

துவம்பதார்த்த விசாரத்தால் அ[illegible] உண்டாயினும், மாயாப் பிரபஞ்சம் சத்திய[illegible]ன்றும்;

220138

அச் சத்திய புத்தி நீங்குவதன் பொருட்டுத் தத்பதார்த்த விசாரமும் செய்தல்வேண்டும்; இவ்விசாரத்தை முறையாகச் செய்தவிடத்து மாயாப் பிரபஞ்சம் மித்தையா யொழிவதாம்; அது மித்தையா யொழியவே, ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானம் உண்டாவதாம்; ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞான முண்டாயபோது ஆத்மா பிரஹ்ம சொரூபமாகவே யிருத்தல் பிறழாது விளங்குவதாம்; இவ்விளக்கம் மாறாது அறிவானந்த வடிவமாக விருத்தலே பிரஹ்மானுபவமாமென்பது இதன் திரண்ட பொருளாம்.

தத்துவமசியென்பது (சாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தினது ஆறாவது பிரபாடகத்தில்) சுவேதகேதுவென்னும் புத்திரனுக்கு அவனது பிதாவாகிய உத்தாலக முனிவர் ஒன்பதுமுறை யுபதேசித்த மகாவாக்கியமாம். ஜீவேசுவர பேத நிவிர்த்தி பூர்வகமாகிய அர்த்தங்களை யுணர்த்தும் வாக்கியம் ஈண்டு மகாவாக்கியமாம்.

தத்துவமசிமகாவாக்கியத்தில் சர்வஞ்ஞத்துவாதி தர்மமுடைய மாயையோடுகூடிய பிரஹ்மசேதனவடிவ ஈசுவரன் தத்பதத்தின் வாச்சியார்த்தமாம்; கிஞ்சிஞ்ஞத்துவாதி தர்மமுடைய அவித்தை அல்லது புத்தியோடுகூடிய கூடஸ்தசேதனவடிவ ஜீவன் துவம்பதத்தின் வாச்சியார்த்தமாம். இங்குச் சர்வஞ்ஞத்துவாதி தர்மமுடைய மாயைக்கும் கிஞ்சிஞ்ஞத்துவாதி தர்மமுடைய அவித்தை அல்லது புத்திக்கும் பரஸ்பரம் விரோதமிருத்தலின், அவற்றைவிட்டு விரோதமில்லாத (பிரஹ்மகூட



ஸ்த) சேதனங்களை விடாது அபேதமாக அம்மகாவாக்கிய முணர்த்துவதாம். மகாவாக்கியத்தினால் ஜிஞ்ஞாசுகளுக்கு அகண்டப் பிரஹ்மத்தின் ஞான முண்டாகுகவென்பது ஈசுவரனது அநாதி தாற்பரியமாம். இலட்சியார்த்தமான கூடஸ்தப் பிரஹ்மங்களுக்கு ஐக்கியமேயன்றி, வாச்சியார்த்தமான ஜீவேசுவரர்களுக் கைக்கியமின்றாமென்பதிங் குணர்தற்பாலதாம்.

“ ஈசனுடன் மூன்றனைப் பார்த்திடி லிவனுக்குட லேது, ஈசனெனி லிவனிலை ” என்று இதற்கடுத்துள்ள செய்யுள் கூறுவதால், இச்செய்யுளின்கண் அதற்கேற்ப உரை யெழுதப் பட்டது. தம்பம் - தூண்.

‘துவம்’ என்பது ‘தொம்’ எனத் திரிந்து நின்றது. தொன்மை - பழைமை; அஃதிங்கு நித்தியமென்னும் பொருளுணர்த்தற்கண் வந்தது. அழியாதது - நித்தியமாம். நம் என்பது இங்கு உன் என்னும் பொருட்கண் வந்தது. இவ்வாறு வருவது இடவழுவமைதியும் பால்வழுவமைதியுமாம். தானுமென்பது தன்மாத்திரை யென்பதனோடுஞ் சென்றியைந்து நின்றது. பிரகிருதியென்பது பகுதியெனத் திரிந்து நின்றது. சந்தவின்பநோக்கி ‘மாத்திரைப் பகுதிதானும்’ எனப் பகரவொற்று மிக்கு நின்றது. தான் - அசைச்சொல்.

ஸ்தூல பூதங்களுடன் சூக்கும பூதங்களும், அவித்தையுடன் மாயையும் உள்ளவளவும் சரீர வியவகாரமும் ஜீவ ஈச

வியவகாரமும் நீங்குவனவன்றும்; அதனால், சரீராதிகளி னிருப்பிற்குப் பூதாதிகள் காரணமாம்; அவை ஆத்மாவை யுணர்வதால்மாத்திரம் மித்தையாக விளங்குவதில்லையாம்; ஆனால், ஆத்மாவே பிரஹ்மமாம்; பிரஹ்மத்தைத் தவிர மாயாப்பிரபஞ்சம் உண்மையிலில்லையாமென்னும் ஞானத்தாலே யே மித்தையாக விளங்குவனவாம் என்பதைச் சற்குருவருளால் மகாவாக்கியார்த்த விசாரஞ் செய்வது வாயிவாக உள்ளவாறறிந்து, உணர்ந்தவாறு பிரஹ்மாநந்தவடிவமாக விருப்பவனே தத்துவஞானியாவனென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம். 19

## பஞ்சைக்யம்.

20. ஈசனுக்குத் தூலவுடல் பூதபௌ திகமே யீச
னுக்குச் சூக்கவுட லிருவகைச்சூக் குமமே, யீசனுக்குக்
காரணமா முடன்மாயை யவனே யீசனவன் சாட்சியே
பிரமமிவை யைந்தா, மீசனுக்குஞ் சீவனுக்கு மைக்ய
மெவ்வா றென்னி லீசனுடன் மூன்றனைப்பார்த் திடிலிவ
னுக் குடலே, தீசனெனி லிவனில்லையீ சுரசாட்சி யென்றா
லிவன்சாட்சி வேறோமற் றிதுவேபஞ் சைக்யம்.

(இ - ள்.) ஈசனுக்கு - ஈசுவரனுக்கு, தூலவுடல்-ஸ்தூல சரீரமாவது, பூதபௌதிகமே - ஸ்தூலபஞ்சபூத சமஷ்டியும் (அவற்றின் காரியமாகிய)ஸ்தூலபௌதிக சமஷ்டியுமாம், ஈசனு



க்கு - அவ்வீசுவரனுக்கு, சூக்கவுடல் - சூக்குமசரீரமாவது,
இருவகை சூக்குமமே - சூட்சுமபஞ்சபூத சமஷ்டியும் (அவற்
றின் காரியமாகிய) சூட்சுமபௌதிக சமஷ்டியுமாம், ஈசனுக்கு-
அவ்வீசுவரனுக்கு, காரணமாம் உடல் மாயை - காரணசரீரமா
வது மாயையாம், அவனே - (இம்மூன்று சரீரத்தையுமுடைய)
அவனே, ஈசன் - (தத்பதவாச்சியார்த்தமாகிய) ஈசுவரனாவன்,
அவன் சாட்சியே - அந்த ஈசுவரனது சாட்சியே, பிரமம் -
(தத்பத லட்சியார்த்தமாகிய) பிரஹ்மமாம், இவை ஐந்தாம் -
(இங்ஙனம்) இவை ஐந்தாயிருப்பனவாம், (அங்ஙனமாயின்), ஈசனுக்
கும் - (தத்பதவாச்சியார்த்தமான) ஈசுவரனுக்கும், சீவனுக்கும்-
(துவம்பதவாச்சியார்த்தமான) ஜீவனுக்கும், ஐக்ய மெவ்வா
றென்னில் - ஐக்கிய மெங்ஙனம் பொருந்துமென்று வினவின்,
ஈசனுடல் மூன்றனையும்-ஈசுவரனது சரீரம் மூன்றனையும், பார்த்
திடில் - ஆராய்ந்து நோக்குமிடத்து, இவனுக்கு - இச்சீவனு
க்கு, உடலேது - ஸ்தூல-சூட்சும-காரண மென்னும் மூன்றுட
ம்பும் இல்லையாம், ஈசனெனில் - ஈசுவரனுடைய சொரூபத்தை
ஆராய்ந்து நோக்குமிடத்து, இவனில்லை - இந்தச் சீவனது
சொரூபமில்லையாம், ஈசுரசாட்சி யென்றால் - ஈசுவரசாட்சி
யின் சொரூபத்தை ஆராய்ந்து நோக்குமிடத்து, இவன் சாட்சி
வேறோ - இந்தச் சீவனது சாட்சி வேறாக இருப்பதோ, (இல்லை
யாம்), இதுவே - [(1) ஈசுவரனது ஸ்தூலசரீரத்தில் ஜீவனது
ஸ்தூலசரீரமும், (2) அவனது சூட்சுமசரீரத்தில் இவனது சூட்

சுமசரீரமும், (3) அவனது காரணசரீரத்தில் இவனது காரண சரீரமும், (4) அவனது சொரூபத்தில் இவனது சொரூபமும், (5) அவனது சாட்சிசொரூபத்தில் இவனது சாட்சி சொரூபமும் வேறாகாது விளங்கும்] இந்நிலையே, பஞ்சைக்யம் - பஞ்ச ஐக்கியமென்று சொல்லப்படுவதாம், (எ - று).

ஈசனது ஸ்தூலசரீரம் விராட்டென்று சொல்லப்படும்; சூட்சுமசரீரம் இரண்யகர்ப்பமென்று சொல்லப்படும்; காரண சரீரம் (மாயை) அவ்வியாகிருதமென்று சொல்லப்படும்.

ஈசுவரனது காரணசரீரத்தின் ஏகதேசபாகமும், சூட்சும சரீரத்தின் ஏகதேசபாகமும், ஸ்தூலசரீரத்தின் ஏகதேசபாகமும் முறையே ஜீவனது காரணசரீரமும், சூட்சுமசரீரமும், தூல சரீரமுமாம்; ஈசுவரனது ஸ்தூலசரீரத்திற்கு வேறாகச் சீவனது ஸ்தூலசரீரமில்லையாம்; அவனது சூட்சுமசரீரத்திற்கு வேறாக இவனது சூட்சுமசரீரமில்லையாம்; அவனது காரணசரீரத்திற்கு வேறாக இவனது காரணசரீரமில்லையாம்; அவனது சொரூபத்திற்கு வேறாக இவனது சொரூபமில்லையாம்; அவனது சாட்சி சொரூபத்திற்கு வேறாக இவனது சாட்சிசொரூபமில்லையாம் என்று பஞ்சஐக்கியத்தையும் உணர்ந்தவிடத்துத் தத்துவமசி மகாவாக்கியத்தின் உண்மைப்பொருள் செவ்வையாக விளங்குவதாமென்பது இதன் திரண்டபொருளாம்.

ஈசுவரனது ஸ்தூலசரீர முதலியன ஒரு தோப்புப்போல்வனாம்; ஜீவனது ஸ்தூலசரீர முதலியன அதிலுள்ள ஒவ்வொரு



மரம் போல்வனவாம். தோப்பும் மரமும் ஏகமாக விளங்குதல் போல, ஈசுவரனது ஸ்தூலசரீர முதலியனவும் ஜீவனது ஸ்தூல சரீர முதலியனவும் ஏகமாக விளங்குவனவாமென்பதிங்கு உணர்தற்பாலதாம்.

தோப்புப்போல்வது சமஷ்டியாம்; ஒரு மரம் போல்வது வியட்டியாம். சமஷ்டி - பொதுமையாம்; வியட்டி-தனிமையாம். பௌதிகம் - பூதகாரியமாம்.

ஈசனது ஸ்தூலசரீரமாகிய விராட்டில் ஜீவனது ஸ்தூல சரீரம் அந்தர்க்கதமாம்; ஈசனது சூக்குமசரீரமாகிய இரணிய கர்ப்பத்தில் ஜீவனது சூக்குமசரீரம் அந்தர்க்கதமாம்; ஈசனது காரணசரீரமாகிய அவ்வியாகிருதத்தில் ஜீவனது காரணசரீரம் அந்தர்க்கதமாம்; ஈசுவரனில் ஜீவன் அந்தர்க்கதமாம்; ஈசுவர சாட்சியில் ஜீவசாட்சி அந்தர்க்கதமாம் என்பன விளங்குமாயின், ஜீவனது சரீரத்தில் நிகழும் சாக்கிர முதலிய அவஸ்தை மூன்றும் ஈசனது சரீரத்தில் அந்தர்க்கதமா மென்பது நன்கு விளங்குவதாம்.

(1) சாக்கிராவஸ்தை - ஸ்தூல சரீரத்தில் நிகழ்வதாம்;

(2) சொப்பனாவஸ்தை - சூட்சும சரீரத்தில் நிகழ்வதாம்;

(3) சுழுத்தியவஸ்தை - காரண சரீரத்தில் நிகழ்வதாம்.

ஏது என்னும் வினை இங்கு இல்லையென்னும் பொருட்கண் வந்தது.

பஞ்சைக்யம் - ஐவகையாய ஒருமையாம். ஏகத்தின் தன்மை - ஐக்யமாம்.

பஞ்சஐக்கியத்தினை யுள்ளவாறு சற்குரு வாயிலாக விசாரித் தறிந்தவன் ஜீவனுடல் ஈசுவரனுடலைத் தவிரவில்லை; ஜீவன் ஈசுவரனைத் தவிரவில்லை ; ஜீவசாட்சி ஈசுவர சாட்சியைத் தவிரவில்லை; உள்ளது ஈசுவர சாட்சியாகிய பிரஹ்ம சொரூபமே யென்பதுணர்ந்து, சர்வத்தையும் பிரஹ்மசொரூபமாகக் கண்டு பிரஹ்மசொரூபமாகவே விளங்குதற் குரியவனுவனென்பது இதன் தாற்பரியமாம்.

மூன்றனையும் என்னும் இனைத்தென் றறிபொருளின் கண் வந்த முற்றும்மை தொக்குநின்றது. சிவ—ஐக்யமென் னுந்தொடர் சிவைக்ய மெனப் புணர்ந்தாற்போல, பஞ்ச—ஐக்ய மென்னுந்தொடர் பஞ்சைக்யமெனப் புணர்ந்து நின்றது. இது விருத்திசந்தியாம். ஐக்யம் - ஐக்கியம் (ஒன்றாந்தன்மை). 20

### அத்துவித நிலை.

21. தேகமே தானெனல்சீ வத்தொய்த மது
போய்த் தெளிவுவரி லாகாயத் தின்வடிவே தானய்ப்,
போகமாந் தனுகரணம் வாயுவைப்போ லியங்கப்
பொருந்துமவ னேயீச னப்பொலிவு தன்னி, லேகமா
யண்டமெலாங் கடுகளவாய்த் தோன்று மவையகண்டா
காரமது வேயீசத் தொய்த, மாகமா மகண்டாகா ரமு
நீங்கிக் கடுகா வண்டமுந்தோன் றுதவிடத் தத்துவித
நிலையே.



(இ - ள்.) தேகம் - (அவித்தையில் சேதனத்தின் பிரதி பிம்பமாயுள்ள ஜீவன் அஞ்ஞானத்தின் பெருக்கத்தால் ஸ்தூலம், சூட்சுமம், காரணமென்னும் சரீரத்திரயத்துள் யாதாவதொரு சரீரத்தை, தானெனலே - தானென்பதன் பொருளாக நிச்சயித் திருப்பதே, சீவத்தொய்தம் - ஜீவத்தொய்தமாம், தெளிவுவரில் - (அவ்வாறுள்ள அவனுக்குச் சிவசொரூபமாங்தேசிகரது அனுக் கிரகத்தால் உண்டாகும் தத்துவவிசாரத்தினால் சரீரத்திரயத்துள் எதுவும் தானென்பதன் பொருளல்லவென்னும்)தெளிவுஉண்டா மாயின், (ஜீவத்தொய்தம் ஒழிவதாம்), அதுபோகவே-அச்சீவத் தொய்தம் ஒழியவே, ஆகாயத்தின் வடிவுபோல - ஆகாசத்தின் சொரூபம் (வியாபகமாய்ச் சூக்குமமாய் அசங்கமா யிருப்பது) போல, தானய் - தான் வியாபகமாய்ச் சூக்குமமாய் அசங்கமாய், போகமாம் - சுகதுக்க வடிவமாயுள்ள போகத்தை யனுபவித்தற் கிடமாயுள்ள, தனு-ஸ்தூலசரீரமும், கரணம்-(ஞானேந்திரியபஞ்ச கம்-கர்மேந்திரியபஞ்சகம்-பிராணாதிபஞ்சகமென்னுமிவற்றோடு) அந்தக்கரண சதுஷ்டயமும், வாயுவைப்போல் - (ஆகாயத்தில் வியாப்பியமாய் இயங்கும்) வாயுவைப் போல, இயங்க - (தன் சொரூப வியாபகத்தில் வியாப்பியமாய்) இயங்க, பொருந்தும் - அமைந்திருப்பன், அவனே - அவனுபசாந்தமுடையவனாய்)

(அவ்வாறு அமைந்திருக்கும்) அவனே, ஈசன் - ஈசுவரனென்று சொல்லுதற்குரியவனாவன், அப்பொலிவு தன்னில் - (அவனுக்கு அந்நிலையில்) அவ்வீசுவர வியாபகத்திலே, அண்டமெல்லாம் - அண்டகோடியனைத்தும், ஏகமாய் - ஒருவடிவமாய், கடுகுஅளவாய்த்தோன்றும்-(ஒருபெருங் கொப்பரையில் ஒரு சிறு கடுகு அற்பமாய்த் தோன்றுவதுபோல) ஒருகடுகு பிரமாணமாகத் தோன்றுவனவாம், அவை - அவ்வாறு தோன்றும் அண்டகோடி யனைத்தும், அகண்டாகாரமாம் - (ஈசுவரனது) அகண்ட வடிவமாம், அதுவே-அவ்வகண்ட வடிவமே, ஈசத்தொய்தம்- ஈசுவரத்தொய்தமாம், ஆகமாம்-(ஈசுவரனது) சரீரமாகிய, அகண்டாகாரமும் நீங்கி-அகண்டவடிவஅண்டகோடி யனைத்தும் (மித்தையாய்) நீங்கி (ஒழிய), கடுகு ஆக - ஒரு கடுகு பிரமாணமாக வேணும், அண்டமும் - (அண்டகோடிகளுள் ஓர்) அண்டமும், தோன்றாதவிடத்து-விளங்காதவிடத்து, (விளங்குவது எதுவோ அதுவே), அத்துவிதநிலை - அத்துவிதநிலையாம், (எ - று).

சீவாத்துவிதம், ஈஸ்வராத்துவிதம் என்பன செய்யுள் இன்ப நோக்கி "சீவத்தொய்தம்", "ஈசத்தொய்தம்" எனத்திரிந்து நின்றன. 'போக' என்பது "போய்" எனத் திரிந்து நின்றது. 'தேகமே' 'வடிவே' என்னும் ஏகாரங்கள் பிரித்துக்கூட்டப்பட்டன. வடிவுபோல என்னும் உவம உருவு தொக்கு நின்றது. தனுகரணம் - உம்மைத்தொகை.



(1) ஜீவன் தேகத்தின் வேறாக ஆத்மா இல்லை; தேகமே ஆத்மாவென்னும் பாவனையோடு தேகாத்ம புத்தி நீங்காதிருத்தல் ஜீவத்தொய்தமாம்; (2) அவன் உலக காரணமான ஈசனுண்டு; அவன் பிரபஞ்ச வடிவமாக விருக்கின்றானென்னும் பாவனையோடு ஈசனே சர்வப் பிரபஞ்சமுமா மென்னும் புத்தி நீங்காதிருத்தல் ஈசத்தொய்தமாம்; (3) அவன் ஜீவனது வியட்டி சரீரம் ஈசுவரனது சமஷ்டி சரீரத்தினும் வேறாகவில்லை; அச்சமஷ்டி சரீரம் பிரத்யக் ஆத்ம அபின்ன பிரஹ்ம சொரூபத்தில் கயிற்றில் பாம்புபோலக் கற்பிதமாயிருக்கின்றதென்பதை உள்ளவாறு உணர்ந்து தன் நிஜ சொரூப நோக்கமுடையவனாய் மாயாப் பிரபஞ்ச நோக்க மின்றிப் பிரத்யக் ஆத்ம அபின்ன பிரஹ்ம சொரூபமாகவே யிருத்தல் அத்துவிதமாம். இம்மூன்றனுள், முன்னுள்ளன அசுத்தமாம்; பின்னுள்ளது சுத்தமாம். தத்துவமசி மகாவாக்கியத்தின் துவம்பத வாச்சியார்த்தம் ஜீவத்தொய்தமாம்; தத்பதவாச்சியார்த்தம் ஈசத்தொய்தமாம்; அவ்விருபதங்களின் லட்சியார்த்தமாகிய ஜீவப்பிரஹ்மங்களின் ஐக்கியம் அத்துவிதமாம்.

ஜீவன் தேகாத்ம புத்தியினால் யான் தாசனென்னும் பாவனையுடையவனா யிருக்கின்றான்; ஜீவபுத்தியினால் வாயு ஆகாயத்தில் ஏகதேசமாக இருப்பதுபோல, தனுகரணங்கள் ஈசனது பிரபஞ்ச சொரூபத்தில் ஏகதேசமா யிருக்கின்றன; அதனால், நான் ஈசுவரனது அம்சமாயிருக்கின்றேனென் றிருக்கின்றான்; ஆத்ம

புத்தியினால் நான் பிரஹ்மமாகவே யிருக்கின்றே னென்றிருக்கின்றானென்பதிங் குணர்தற்பாலதாம்.

“தேவனே! தேக புத்தியினாலோ யான் தமது தாசன்; ஜீவ புத்தியினாலோ தமது அம்சன்; ஆத்மபுத்தியினாலோ தாமே யான் என்பது எனது நிச்சலமான மதி” “சம்புவே! தேக திருஷ்டியினால் நான் உம்முடைய தாசன்; திரியம்பகரே (முக்கண்ணரே)! ஜீவ (உபாதியோடு கூடியசேதன) திருஷ்டியினால் நான் தங்களுடைய அம்சமாயிருக்கின்றேன்; எல்லாவற்றின் ஆத்மாவே! ஆத்ம திருஷ்டியினால் தாமே நான் என்னும் இத்தன்மைய எனது புத்தி சர்வ சாஸ்திரங்களாலும் நிச்சயத்தை யடைந்திருக்கின்றது.” என்று பாலபோதம் கூறுகின்றது.

நாஸ்திகம் ஆஸ்திகம் வேதாந்தம் என்னும் மூன்று கொள்கைகளுள், ஜீவத்தொய்தம்-நாஸ்திகமாம்; ஈசத்தொய்தம்-ஆஸ்திகமாம்; வேதாந்தம்-அத்துவிதமாம். ஜீவத்தொய்தம்-பந்த சாதனமாம்; ஈசத்தொய்தம் - முத்தி சாதனமாம்; அத்துவிதம் - முத்தி சொரூபமாம்.

தேகாத்ம புத்தியும் ஜீவேசபேத புத்தியும் திருசியம் சத்தியமென்னும் புத்தியும் இன்றித் திருக்குமாத்திரமாக விளங்குகின்றவனே அத்துவிதநிலை யுடையவனாவன்; துன்பமற்றிருத்தற்குரியவன் அவனேயாவனென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம்.



**ஜீவன் எதைத் தியானித்தாலும் அந்தமயமாவனெனல்.**

22. ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா
லதுவா மருவுருவைத் தியானித்தா லட்டமூர்த் தியு
மாம், பொய்யவிரண் டையுந்தவிர்ந்து தானாகி யிருந்தாற்
பூரணமாஞ் சிவனெதிற் பொருந்துமது வாமான், மைய
லுறு மனட்விடயத் தாசையுற்றே யதுவாய் மரணசன
னமும்விளைந்த வாறதென்றே யுணர்ந்து, மெய்யறிவே
தானாகப் பாவித்தா லதுவாய் விளங்குவர்யா வருஞ்செ
னியா வீட்டையுமெய் துவரே.

(இ-ள்.) ஐயமின்றி - (ஜீவன் சற்குருவின் உபதேச வாயிலாகச்) சந்தேக (விபரீத) மில்லாமல், தெய்வவுரு - (தட்சிணாமூர்த்தி-நடராஜர் - விநாயகர் - தண்டபாணி - கோபால கிருஷ்ணன் முதலிய தேவதைகளுள் யாதாவதொரு) தேவதையின் உருவை, தியானித்தால் - தியானஞ் செய்வானாயின் (அத்தியானத்தின் பெருக்கத்தால்), அதுவாம் - (தான் தியானஞ் செய்துவந்த) அத்தேவதையின் வடிவமாக விளங்குவன், அருவுருவை - சேதன வடிவத்தால் அருவமாயும் மாயாப் பிரபஞ்ச வடிவத்தால் உருவமாயுமுள்ள பரமேசுவரனை, தியானித்தால் - தியானஞ் செய்வானாயின், அஷ்டமூர்த்தியுமாம்- (அத்தியானத்தின் பெருக்கத்தால்) பிருதிவு - அப்பு - தேயு -

வாயு - ஆகாயம் - சூரியன் - சந்திரன்-ஜீவன் - என்னும் எட்டு வடிவமாயுள்ள பரமேசுவரனாகவும் விளங்குவன், பொய்ய-(மாயா காரியமா யிருத்தலால்) மித்தையாயுள்ள, இரண்டையுந் தவிர்ந்து - (தெய்வவுரு - அருவுரு என்னும்) இரண்டையும் தியானஞ் செய்வதொழிந்து, தானாகியிருந்தால் - (நான் பிரஹ்மமாயிருக்கின்றேனென்னும் அகம் பிரஹ்மாஸ்மியின் தியானத்தின் பெருக்கத்தால்) தானாக (சிதாத்மப் பிரஹ்மமாக) விளங்குவானாயின், பூரணமாம் - பரிபூரண பரப்பிரஹ்ம சொரூபமாக விளங்குவன், சீவன்-ஜீவனானவன், எதில் - (தெய்வவுரு - அருவுரு-பூரணவுரு வென்னுமிம் மூன்றனுள்) எந்த உருவத்தில் (சித்தத்தை நிறுத்தி), பொருந்தும்-தியானஞ் செய்கின்றானோ, அதுவாம் - அந்தவுருவமாக விளங்குவன் (என்பது சாஸ்திரங்களின் தீர்மானமாம்), ஆல் - ஆதலாலே, யாவரும் - (அதிகாரி புருஷர்) யாவரும், மையலுறுமனம் - (ஆசை-கோபம்-அகந்தை முதலியவற்றால்) மயக்கமுற்றுள்ள மனம், விடயத்து ஆசையுற்று - (காணி-மனை-கைப்பொருள் முதலிய வடிவமாயுள்ள) விஷயத்தில் ஆசைகொண்டு, அதுவாய் -(ஏரிநீர் மதகின் வழியாய் வாய்க்கால் வழியாகச் சென்று வயலாகாரமாவதுபோல இந்திரியங்களின் வழியாகச் சென்று) அவ்விஷயாகாரமாக (இருத்தலால்), சனனமும்மரணமும் விளைந்தன-(நமக்கு) ஜனனமும் மரணமும் உண்டாய் வருகின்றன, ஆறு- ஜனனமரணம் வருவதற்குரிய) வழி, அது என்று - அம்மனம் விஷயாகாரமாவ



தென்று, உணர்ந்து - (ஜனன மரண காரணத்தைச் செவ்வையாக) அறிந்து, மெய்யறிவே - சச்சிதாநந்த வடிவமாயுள்ள பிரஹ்மமே (யானென்று அதனை), தானாக-தமது யதார்த்த சொரூபமாக, பாவித்தால் - தியானிப்பாராயின் (அத்தியானத்தின் பெருக்கத்தால்), அதுவாய் விளங்குவர் - அச்சச்சிதாநந்த வடிவப் பிரஹ்மமாகவே விளங்குவர், (அச்சச்சிதாநந்தப் பிரஹ்ம வடிவமாகவே விளங்குவதன்றித் தேகாந்தத்தில்), செனியாத - (நாச) உற்பத்தி யில்லாத, வீட்டையும் எய்துவர் - (சர்வ துக்க நிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்திவடிவமாகவே விளங்குவதாகிய) விதேக மோட்சத்தையும் அடைவர், (எ - று).

தெய்வவுருத்தியானம் - சகளத்தியானமாம்; அருவுருவத்தியானம் - சகள நிஷ்களத் தியானமாம்; ஆத்மத்தியானம் - (அகம்பிரஹ்மாஸ்மி வடிவச்சிந்தனை) நிஷ்களத்தியானமாம்.

சகளவுரு - அவயவமுள்ள வடிவமாம்; அஷ்டமூர்த்தி - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிரென்னும் எட்டனுள் ஆகாயமும் உயிரும் நிஷ்களமாயும், மற்றைய ஆறும் சகளமாயுமிருத்தலின், சகளநிஷ்களவடிவமாம். சகளம்-அவயவமுடையது; நிஷ்களம்-அவயவமில்லாதது.

தத்துவஞானம் உண்டாவதற்குச் சகளத்தியானமும், சகளநிஷ்களத்தியானமும் பரம்பரா காரணமாம்; (தானாகும்) நிஷ்களத்தியானம் (தத்துவஞானத்தை நேரேயுண்டாக்குவதுபற்றிச்)

சாட்சாத் காரணமாம். மோட்சத்திற்குக் காரணம் தத்துவ ஞானமாம்; அதற்குக்காரணம் நிஷ்களத்தியானமாம், அதற்குக் காரணம் சகளநிஷ்களத்தியானமாம்; அதற்குக்காரணம் சகளத் தியானமாம்.

(1) அபயஹஸ்த ஆபரணாதி சகிதமாக ஈசுவரனைத் தியானித்தல் சகளத்தியானமாம்; (2) சிரசு சுவர்க்கமாகவும், சுரோத்திரம் திக்குகளாகவும், நேத்திரம் சூரிய சந்திரர்களாகவும், முகம் அக்கினியாகவும், நாபி ஆகாயமாகவும், பாதம் பூமியாகவும் பாவித்து ஈசுவரனைத் தியானித்தல் சகள நிஷ்களத்தியானமாம்.

(3) சர்வப் பிரபஞ்சத்தையும் ஈசுவரனது அவயவங்களாகப் பாவிப்பதைவிட்டு அவயவிமாத்திரமான சத்ரூபப் பிரஹ்மத்தை நானென்று தியானித்தல் நிஷ்களத்தியானமாம்.

தியானத்தின் கர்த்தா - தியாதாவாம் (தியானிக்கின்றவனும்); தியேய வடிவமாகிய சித்தவிருத்தியின் பிரவாகம் - தியானமாம்; தியான விஷயம் - தியேயமாம்.

தியாதா (தியானிக்கிறவன்) தியேயத்தின் வடிவமாகின்றானென்பது "குந்திபுத்ரா! எவன் மரணகாலத்தில் எந்தெந்த வடிவத்தை நினைக்கின்றவனாய்த் தேகத்தை விடுகின்றானோ அவன் எப்போதும் அக்தந்த வடிவத்தின் நினைப்புடையவனாய் அந்தந்த வடிவத்தையே யடைகிறான்" என்று பகவத்கீதை கூறுவதால் நன்கு விளங்குவதாம்.



'பொய்யவிரண் டையுந்தவிர்ந்து தானாகி யிருந்தாற் பூரணமாம்' என்பதன் பொருளைப் "பொய்ப தாமுபற் கொம்பினைப் பற்றவும் போக்கவு நினைப்பாரார், ஐய னேபர போதபூ ரணத்திலே யயலொன்று வருமாறென், பொய்ய தாகிய வநேகபா வனையினைப் பொருந்தல்புன் பிறப்பாகும், ஐய மின்றிய வேகபா வனையினி லழுந்துதல் பவந்தீர்தல்" என்று ஞானவாசிஷ்டம் கூறுவதாலுமறிக. இம் மூவகைத்தியானத்துள் முன்னையவை ஜன்ம நிவிர்த்திக்குக் காரணமன்றாம்; பின்னையது சன்ம நிவிர்த்திக்குக் காரணமாம்.

ஜனனமரணகாரணம் சித்தம் ஆசையினால் விஷயாகாரமாவதென்றுணர்ந்து, அதனையொழித்து, சகளத்தியானத்தையும் சகள நிஷ்களத்தியானத்தையும் முறையாகச்செய்து, அவற்றின் பரிபாகவசத்தால் நிஷ்களத்தியானம் செய்கின்றவனுக்கு ஆத்மா அனாத்மாவிசாரமுண்டாவது வாயிலாக அஹம்பிரஹ்மாஸ்மியென்னும் தத்துவஞான முண்டாவதாம்; அதனால், மோட்சமுண்டாவதாமென்பது இதன் திரண்டபொருளாம்.

"பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்றால், நாச ரீரமாங் குரவனே விசாரமேன் ஞானமேனென்னாதே, பரம பாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம், திரவி சாரமா ஞானமா முத்தியாந் தீர்வையீதறிவாயே" என்று கைவல்லியநவநீதம் கூறுவதின் குணர்தற்பாலதாம்.

ஆக, ஆக, ஆக என்பன ஆகி, ஆய், ஆய் எனத் திரிந்து நின்றன. விளைந்த என்பது அன்சாரியைபெறாத வினைமுற்று. வீட்டையும் என்னும்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை.

“ துப்புடை யாரை யடைவ தெல்லாஞ் சோர்விடத் துத் துணை யாவ ரென்றே, ஒப்பிலே னாகிலு நின்ன டைந்தே னானைக்கு நீயருள் செய்த மையால், எய்ப்பென்னை வந்து நலியும் போதங் கேதுநா னுன்னை நினைக்க மாட்டேன், அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தே னரங்கத் தரவணைப் பள்ளியானே ” என்று பெரியாழ்வார் திருவாய்மலர்ந்தருளியவாறு சகளத்தியானத்தை பிகுபிரியத்தோடு செய்து வருகின்றவர் சகள நிஷ்களத் தியானத்தையும் நிஷ்களத்தியானத்தையும் முறையே செய்தற்குரியவராவர்; நிஷ்களத்தியானத்தின் பெருக்கத்தால் சற்குருவருளிய தத்துவமசி மகாவாக்கியத்தின் பொருளைச் சந்தேகவிபரீதமில்லா துணர்ந்து, “ அகம்பிரஹ்மாஸ்மி ” என்னும் தத்துவஞானமுடையவராவர்; அதனால், அதுவாய் விளங்குதலாகிய சீவன் முத்தியையும், செனியா வீடாகிய விதேக முத்தியையும் பெறுதற்குரியவராவரென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம். 22

### இதற்கு இது விஷயமாமெனல்.

23. ஏற்றமுடை யிந்திரியத்தின் விடயமதே யுலக
மிந்திரியங்கள் கரணத்தின் விடயங்க ளாகுஞ், சாற்றுகர



ணங்களுமா பாசனுக்கே விடயஞ் சாட்சிக்கு விடய
மதாய்த் தயங்குவனா பாசன், போற்றுவிவே கஞ்ஞான
விடயமதாஞ் சாட்சி புகன்றவிவே கமும்பிரம பூர
ணத்தின் விடயந், தோற்றரிய பிரமமொன்றின் விடய
மன்று தலினச் சொரூபநிலை யுணர்ந்ததுவாய்த் துலங்கு
வர்ஞா னிகளே.

(இ-ள்.) உலகம் - (சப்தப்பரிசாதி வடிவமாயுள்ள) பிரபஞ்சம், ஏற்றமுடைய - (சப்த-பரிச-ரூப-ரச-கந்தங்களை யறிவதில்) தலைமையுடைய, இந்திரியத்தின் விடயமதே - (சுரோத்திரம்-துவக்கு-சட்சு-சிங்நுவை-கிராணம் என்னும் ஞான) இந்திரியங்களுக்கே விஷயமாம், இந்திரியங்கள் - (அந்தச் சுரோத்திராதி ஞான) இந்திரியங்கள், கரணத்தின் விடயங்களாகும் - (மனம் - புத்தி-சித்தம்- அகங்காரமென நான்கு வகையாயுள்ள) அந்தக்கரணங்களுக்கேவிஷயமாம், சாற்று-(இந்திரியங்களுக்காசாமென்று) சொல்லப்படுகின்ற, கரணங்களும் - (அந்த) அந்தக்கரணங்களும், ஆபாசனுக்கே விடயம் - சீவனுக்கே விஷயமாம், ஆபாசன்-(அந்தச்) சீவன், சாட்சிக்கு-ஜீவசாட்சிக்கே, விடயமதாய்த் தயங்குவன் - விஷயமாக விளங்குவன், சாட்சி - (அந்தச் சீவ) சாட்சி, போற்று - (யாவரும்) துதிக்கின்ற, விவேகஞான விடயமதாம் - (நித்தியாநித்திய வஸ்து) விவேக ஞானத்திற்கே விஷயமாம், புகன்ற - (உயர்வாகச்) சொல்லப்படுகின்ற, விவேகமும் -

(அந்த) விவேக ஞானமும், பிரமபூரணத்தின் விடயம்-பரிபூரண பரப்பிரஹ்மத்திற்கே விஷயமாம், தோற்றரிய (நாச)உற்பத்தியில்லாத, பிரமம் - பிரஹ்மம், ஒன்றின் - (இந்திரியம், கரணம், ஆபாசன், சாட்சி, விவேக ஞானம் என்பனவற்றுள் யாதாவது) ஒன்றற்கும், விடயமன்று - விஷயமாவதில்லையாம், ஆதலின் - ஆகையினாலே, ஞானிகள் - தத்துவஞான மடையவேண்டுமென்னும் விருப்பமுடைய அதிகாரி புருஷர்கள் ("குரவன் சொல் லுபதேசத்தாற் கூறுநா லொளியைக் கொண்டு"), அச்சொரூபநிலை யுணர்ந்து - அந்தப் பிரஹ்ம சொரூபத்தின் தன்மையை யுணர்ந்து, (அஃதெதற்கும் விஷயமாகாதென்னும் நிச்சயமுடையவராய், அகம் பிரஹ்மாஸ்மி பாவனையின் பெருக்கத்தால் உண்டாகும் தத்துவஞானத்தால்), அதுவாய்த்துலங்குவர் - அந்தப்பிரஹ்ம சொரூபமாகவே விளங்குவர், (எ - று).

'விடயமதே' என்பதன்கணுள்ள அது - பகுதிப்பொருள் விகுதியாம். ஏ-தேற்றம்.

பிரபஞ்சம் சத்தப்பரிசாதி வடிவமாயிருத்தலின், அஃது இந்திரியங்களுக்கு விஷயமாம்; அவ்விந்திரியங்கள் அந்தக்கரணங்களின் சம்பந்தமின்றிப் பிரபஞ்சத்தை யறிதற்குரியனவன்றாதலின், அவை கரணங்களுக்கு விஷயமாம்; அக்கரணங்களுள் ஒன்றாகிய புத்தியுள் சேதனத்தின் பிரதிபிம்பமாயுள்ள ஜீவனால் அந்தக்கரணங்கள் விளங்குவனவாயிருத்தலின், அவை ஜீவனுக்கு விஷயமாம்; அந்தச் சீவன் தன் யதார்த்த



சொரூபமாகிய சாட்சி சேதனத்தால் கண்ணாடியிலுள்ள பிரதிபிம்பவிளக்குப்பிம்பவிளக்கால்விளங்குவதுபோல விளங்குபவனாயிருத்தலின், அவன் ஜீவசாட்சிக்கு விஷயமாம்; ஜீவசாட்சி நித்தியாநித்தியவஸ்து விவேகஞானத்தால் தேகத்திரய விலட்சணமாய் அவஸ்தாத்திரய சாட்சியாய்ச் சச்சிதாநந்த வடிவமாய் இருக்கிறதென் றறியப்படுவதாயிருத்தலின், அது விவேகஞானத்திற்கு விஷயமாம்; விவேகஞான மென்னும் அந்தக்கரணவிருத்தி தன்னில் ஆரூடமான (ஏறிய) அகண்டசைதன்னியமென்னும் பிரஹ்மப் பிரகாசத்தால் விளங்குவதாயிருத்தலின், அது பரிபூரணபரப்பிரஹ்மத்திற்கு விஷயமாம்; அந்தப் பரிபூரண பரப்பிரஹ்மம் குணம், தொழில், சாதி முதலியவற்றுள் எதுவுமின்றி ஆத்ம சொரூபமாயிருத்தலின், அஃது இந்திரிய முதலியவற்றுள் எதற்கும் விஷயமன்றாம் என்பதைச் சற்குரு முன்னிலையிற் செய்யும் வேதாந்த சாஸ்திர விசாரவாயிலாகச் சந்தேகவிபரீதமின்றி யறிந்த அதிகாரி புருஷர் உலக வியாபாரமின்றி அகம்பிரஹ்மாஸ்மி பாவனையென்னும் தத்வாநு சந்தானத்தின் பெருக்கத்தால் அதனைத் தமது நிஜசொரூபமாக (ஆத்மசொரூபமாக) உணர்ந்து அதுவாகவே விளங்குவரென்பது இதன் திரண்ட பொருளாம்.

அறியும் பொருள் - விஷயியாம்; அதனால் அறியப்படும் பொருள் விஷயமாம். 'துலங்குவர்' என்று கூறினமையால்,

ஞானிகளென்பதற்கு அதிகாரிபுருஷர்களென்று பொருள் கூறப்பட்டது. பிரஹ்மசொரூப நிலையைத் தாயுமான சுவாமிகள்,

"குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமி லான்மைந்தர் மனைவியில் லானென வனவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே."

என்று கூறுவதாலுமறிக.

பிரபஞ்சம் இந்திரியத்திற்கும், அஃது அந்தக்கரணத்திற்கும், அது ஜீவனுக்கும், அவன் சாட்சிக்கும், அது விவேக ஞானத்திற்கும் விஷயமாயிருத்தலையும், சாட்சி சொரூபமாயுள்ள பிரஹ்மம் அவ்விந்திரிய முதலியவற்றுள் எதற்கும் விஷயமாகாதிருத்தலையும், அந்தப் பிரஹ்மம் தனது நிஜவடிவமாயிருத்தலையும் உள்ளவாறு சற்குருவருளாலறிந்து, துன்ப வடிவமாய் விளங்குதற்கேதுவாயுள்ள திருசிய நாட்டமின்றி, இன்ப வடிவமாய் விளங்குதற்கேதுவாயுள்ள திருக்நாட்ட முடையவனாய்ச், சமாதி யப்பியாசஞ்செய்து, அதனால் யானே பிரஹ்மமென்னும் தத்துவஞானத்தைத் தடையிலாதுற்று, தானறிவானந்த வடிவமாக விளங்குகின்றவனே ஜன்மத்தின் முடிவைக் காண்டற்குரியவனாவனென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம். 23



## தாதாத்மியத்திரயம்.

24. சகசமென்றும்பிராந்தியென்றுங்கன்மமென்று
மூன்றுந் தாதாத்மி யங்களிவை சாற்றிலகங் காரம்,
புகல்சீவ னொடுகலத்தல் சகசமதாம் பிரம பூரணத்திற்
கலப்பதுவே பிராந்திசரீ ரத்தோ, டகலாது கலப்ப
துவே கன்மநா னறிவேன் கர்த்தாநான் றேகமக மென்
பதுதா னிவைகள், பகர்செய்பிரா ரத்தத்தாற் றத்
துவஞா னத்தாற் பணிசுழுத்தி யாலகலப் படுமளவுந்
தொடரும்.

(இ - ள்.) சகசமென்றும் பிராந்தியென்றும் கன்மமென்று மூன்றும் தாதாத்மியங்கள் - தாதாத்மியங்கள்: சகஜ தாதாத்மியமென்றும், பிரமஜ தாதாத்மியமென்றும், கர்மஜ தாதாத்மியமென்றும் மூன்றுவகையாம், இவை சாற்றில் - இவற்றின் இலக்கணங்களைக் கூறுமிடத்து, புகல் - (துவம்பத வாச்சியார்த்தமென்று) சொல்லப்படுகின்ற, சீவனொடு - (சிதாபாசனாகிய) ஜீவனோடு (பிரியாது), அகங்காரம் கலத்தல் - அகங்காரம் கலப்புற்றிருத்தல், சகசமதாம் - சகஜ தாதாத்மியமாம், பிரம பூரணத்தில் - (பிரத்யக் ஆத்ம அபின்ன) பரிபூரணப் பிரஹ்மத்தோடு (பிரியாது), கலப்பது (அவ்வகங்காரம்) கலப்புற்றிருத்தல், பிராந்தி - பிரமஜ தாதாத்தியமாம், சரீரத்தோடு -

ஸ்தூல சரீரத்தோடு, அகலாது - பிரியாது, கலப்பது - (அவ்வகங்காரம்) கலப்புற்றிருத்தல், கன்மம் - கர்மஜ தாதாத்தியமாம், (இவற்றிற்கு அனுபவம் முறையே), நானறிவேனென்பதும் - நானறிவேனென்பதும், நான் கர்த்தாவென்பதும் - நான்கர்த்தா (நான் போக்தா) வென்பதும், தேகம் அகமென்பதும் - (தேகத்திற்கு வேறாக நானென்னும் பொருளில்லை; அதனால் அத்) தேகமே நானென்பதன்பொருளாமென்பதுமாம், இவைகள்-இம்மூன்று தாதாத்மியங்களும் (முறையே), பகர்செய் - (தன்பயனை யநுபவித்தாலன்றி யொழியாதென்று) சொல்லப்படுகின்ற, பிராரத்தத்தால் - பிராரத்த கர்ம நாசத்தாலும், தத்துவஞானத்தால் - (அகம்பிரஹ்மாஸ்மி யென்னும் பாவனையால் ஐயந்திரிபின்றி யுண்டாகும் நான் பிரஹ்மமென்னும்) தத்துவஞானத்தினாலும், பணி சுழுத்தியால் - (தேகாதிப் பிரபஞ்சமனைத்தும்) ஒடுங்கும் சுழுத்தியவஸ்தை யுண்டாவதாலும், அகலப்படும் - நீங்குவனவாம், அளவும் - (பிராரத்த கருமநாச முதலிய மூன்று முண்டாகாத) அளவும், தொடரும்-(ஜீவனை இத்தாதாத்மியங்கள்) தொடர்ந்து நிற்பனவாம், (எ - று).

சகஜம் - இயல்பா யுண்டாயிருப்பது; பிரமஜம் - பிராந்தியாலுண்டாயிருப்பது; கர்மஜம் - கர்மத்தாலுண்டா யிருப்பது. பிராந்தி, பிரமம், விபரீதபுத்தி, மயக்கமென்பன ஒருபொருட்சொற்களாம்.



தாதாத்மியமென்பதன் பொருள் இங்கு இரண்டு பொருள் ஒரு வடிவமாகத் தோன்றுதலாம். சகஜ தாதாத்மியம் பிராரத்த கர்ம நாசமுண்டாவதால் நீங்குவதாம்; பிரமஜ தாதாத்மியம் தத்துவஞான முண்டாவதால் நீங்குவதாம்; கர்மஜ தாதாத்மியம் சுழுத்தி யவஸ்தை யுண்டாவதால் நீங்குவதாம்.

ஏ இரண்டும் அசைநிலை. தான் என்பது சாரியை. இச்செய்யுள் நிரனிறையணியாம். தேகமகமென்னு மிடத்துள்ள என்பதென்னுஞ்சொல் அறிவேனென்பதனோடும் கர்த்தாவென்பதனோடும் சென்றியைந்து நின்றது. எண்ணும்மைகள் தொக்கு நின்றன.

தானல்லாதபொருளை யானென் றபிமானித்தல் வடிவ அந்தக்கரண விருத்தி அகங்காரமாம்.

ஜீவன் பிராரத்த கர்ம நாசமுண்டான காலத்திலே நானறிவேனென்னும் சகஜ தாதாத்மியமின்றி யிருத்தலின் பிராரத்த கர்ம நாசத்தால் சகஜதாதாத்மியம் கெடுமென்றும், தத்துவஞான முண்டான காலத்திலே அவன் நான் கர்த்தா நான் போக்தா வென்னும் புத்தியின்றிப் பிரஹ்ம சொரூபமாகவே விளங்கலின் தத்துவஞானத்தால் பிரமஜ தாதாத்மியம் நீங்குமென்றும், சுழுத்தி யவஸ்தை யுண்டான காலத்திலே அவன் சூக்கும சரீரத்தைவிட்டுப் பிரியாதுள்ள ஸ்தூல தேக சம்பந்த

மின்றி யிருத்தலின் சுழுத்தியவஸ்தை யுண்டாவதால் கர்மஜ தாதாத்மியம் நீங்குமென்றும் இங்குணர்தல் வேண்டும்.

அகங்காரம் ஜடமாயிருப்பினும் ஜீவனோடுகூடிய காலத்து நானறிவேனென்னும் வியவகாரம் உண்டாகின்றது; அது சாட்சியாகிய பிரத்யக் ஆத்மாவோடு கூடிய காலத்து நான் கர்த்தா, நான் போக்தாவென்னும் வியவகார முண்டாகின்றது; அது சூக்கும சரீரத்தைவிட்டுப் பிரியாதுள்ள ஸ்தூல சரீரத்தோடுகூடிய காலத்துத் தேகமகமென்னும் வியவகார முண்டாகின்றது. பிராரத்த கர்மநாச முண்டாவதால் சகஜ தாதாத்மியம் நீங்குவதும், சுழுத்தியவஸ்தை யுண்டாவதால் கர்மஜ தாதாத்மியம் நீங்குவதும் சம்சாரபந்தம் நீங்குவதற்குக் காரணமாவனவன்றாம்; தத்துவஞான முண்டாவதால் பிரமஜ தாதாத்மியம் நீங்குவதே சம்சாரபந்தம் நீங்குவதற்குக் காரணமாம்.

தாதாத்மியங்களின் விளக்கம் வருமாறு:—

1. தீபம் கண்ணாடியுள் பிரதிபிம்பிப்பது போலப் பிரத்யக் ஆத்மா அகங்காரத்துள் ஜீவரூபமாய்ப் பிரதிபிம்பிக்கின்றது; அந்தப் பிரதிபிம்பமும் அகங்காரமுங்கூடித் தப்தாய பிண்டம்போல (தீயிற்காய்ச்சிய இரும்புருண்டை போல) ஏகவடிவமாய் விளங்குகின்றன; அதனால், அகங்காரம் சித்துப்போலத் தோன்றுகின்றது; அந்தச் சித் பிரதிபிம்பத்துடன் கூடிப் பிரியாதுள்ள அகங்காரம் சகஜ தாதாத்மியமாம். சித்பிரதிபிம்பமும் அகங்



காரமும் தாமுண்டாகும்போதே கூடிப் பிறந்தபடியால் இவ்
விரண்டினுடைய தாதாத்மியம் (ஒருமைப்பாடு) சகஜ தாதாத்மிய
மென்று சொல்லப்படுகின்றது.

2. நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன்,
நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிருகஸ்தன், நான்
வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி யென்றற்றொடக்கத்துச் சித்த
விருத்தியுடன் கூடியுள்ள அகங்காரத்திற்கு அகம் சப்தார்த்த
மான (நானென்பதன் மெய்ப்பொருளான) சாட்சியோடுள்ள
தாதாத்மியம் பிரமஜ தாதாத்மியமாம். நானென்னும் சொல்
லின் உண்மைப்பொருள் பிரத்யகாத்மாவா மென்பதுணராத
வர்க்குத் தேகத்தில் நான் பிராமணன் நான் க்ஷத்திரியனென்
றற் றொடக்கத்துப்புத்தி பிராந்தியினாலுண்டாயபடியால் இது
பிரமஜ தாதாத்மிய மென்று சொல்லப்படுகின்றது.

3. சித்பிரதிபிம்பத்துடன் கூடிச் சித்துப்போல விளங்கும்
அகங்காரத்திற்கு ஸ்தூல சரீரத்தோடு கர்மத்தால் சம்பந்த
முண்டாதல் கர்மஜ தாதாத்மியமாம். சாக்ர சொப்பன போகப்
பிரதானமான கர்மம் உண்டாயபோது கர்மஜ தாதாத்மியம் உண்
டாகின்றது; அந்தக் கர்மம் நசித்தவிடத்தே அது நசித்து விடு
கின்றது; அதனால், சித்பிரதிபிம்பத்துடன் கூடியிருக்கின்ற அகங்
காரத்திற்கு ஸ்தூல சரீரத்தோடுள்ள தாதாத்மியம் கர்மஜ தாதாத்
மியமென்று சொல்லப்படுகின்றது. கர்ம முண்டானால் கர்மஜ தா
தாத்மியமுண்டு; கர்மமில்லாமற் போனால் கர்மஜ தாதாத்மிய

மில்லை யென்பது சகல கேவல அவஸ்தைகளில் நன்கு விளங்குவதாம்.

சாக்ரமும் சொப்பனமும் சகலாவஸ்தையாம்; சுழுத்தி கேவலாவஸ்தையாம்.

சகலாவஸ்தையில் போகப் பிரதானமான கர்ம முண்டாகின்றமையால் கர்மஜ தாதாத்மிய முண்டாகின்றது; கேவலாவஸ்தையில் போகப் பிரதானமான கர்ம முண்டாகாமையால் கர்மஜ தாதாத்மிய முண்டாவதில்லையா மென்பதை யிங்குணர்தல் வேண்டும். இந்தக் கர்மஜதாதாத்மியத்தாலே ஸ்தூல தேகமும் சேதனம்போலத் தோற்றுகின்றது.

சித்தின் பிரதிபிம்பத்தோடு கூடிய அகங்காரமுள்ளளவும் சகஜதாதாத்மியமும் பிரமஜ (பிராந்திஜ) தாதாத்மியமும் நீங்குவனவன்றாம்; ஆனால், விதேக கைவல்லியத்தில் இவை முற்றும் நீங்கிவிடுவனவாம்.

கர்மஜ தாத்மியம் ஒவ்வொருநாளும் போகப் பிரதானமான கர்மத்தால் உண்டாகின்றமையால் அதற்கு ஒவ்வொருநாளும் சுழுத்தியில் நாசமுண்டு; பிரமஜ தாதாத்மியமோ தத்துவ ஞானத்தினாலன்றிப் பிறிதொன்றால் கெடுவதில்லையாம். தத்துவ ஞானத்தால் பிரமஜ தாதாத்மியத்தைக் கெடுத்தவனுக்குச் சகஜ தாதாத்மியமும் கர்மஜ தாதாத்மியமும் கானல் ஜலம்போல



மித்தையாக விளங்குவனவாம்; அங்ஙனமிருக்கும் அவை தத்துவ ஞானிக்குப் பந்தசாதனமாவ தில்லையாம்.

சஞ்சித கர்மம், ஆகாமிய கர்மம், பிராரத்த கர்மமென்னும் மூன்றனுள், சஞ்சித கர்மம் அஞ்ஞானத்தின் ஆவரணசத்தியில் இருப்பதாம்; பிராரத்த கர்மம் அஞ்ஞானத்தின் விட்சேபசத்தியி லிருப்பதாம்; ஆகாமிய கர்மம் பிரமஜதாதாத்மியத்தி லிருப்பதாம்.

சஞ்சித கர்மம் தத்துவஞானத்தால் அஞ்ஞானத்தின் ஆவரணசத்தி நாசமானபோது நாசமாவதாம்; பிராரத்த கர்மம் தத்துவஞானத்தின் சம்ஸ்காரத்தால் விட்சேபசத்தி நாசமான போது நாசமாவதாம்; பிரமஜதாதாத்மியவடிவ இருதயக் கிரந்தி நாசமாகும்போது ஆகாமியகர்மம் தன்னை யுடையானைத் தாமரை இலையில் நீர் பற்றாமைபோலப் பற்றுவ தில்லையாம்.

(1) சென்ற சரீரங்களில் செய்யப்பட்டுப் பலனுக்கு வாராதுள்ள கர்மம் சஞ்சித கர்மம்; (2) எதிர்காலத்து (வர்த்தமான) சரீரத்தில் செய்யப்படும் கர்மம் ஆகாமிய கர்மமாம்; (3) சென்ற சரீரங்களிற் செய்யப்பட்டு வர்த்தமான சரீரத்திற்கேதுவாயுள்ள கர்மம் பிராரத்த கர்மமாம்.

ஞானியின் சஞ்சித கர்மமானது தத்துவஞானத்தால் நாசமாகின்றது; ஆகாமிய கர்ம் அவனுக்கு ஆத்மாவில் கர்த்திருத்துவ போக்திருத்துவப் பிராந்தியில்லாமையால் அவனோடு சம்

பந்தமுறுவ தில்லையாம்; பிராரத்த கர்மம் போகத்தால் நாசமாவதாமென்பதும், ஞானியினது சுபாசுப கர்மமாயுள்ள ஆகாமிய கர்மத்துள் சுபகர்மத்தை அவனைப் பூசிப்பவர் ஏற்றுக்கொள்ளுகின்றனர்; அசுபகர்மத்தைத் தூஷிப்பவர் ஏற்றுக்கொள்ளுகின்றன ரென்பதும் இங்குணர்தற்பாலனவாம்.

ஹிருதயக்கிரந்தி தானல்லாதவுடம்பைத் தானெனக் கருதுதலாம்; இதுவே அகங்காரக் கிரந்தியாம். இது காரணமாகத் தன்னோ டியைபில்லாதபொருள் தனதென் றபிமானிக்கப் படுகின்றது. கிரந்தி - முடிச்சு (கட்டு). அகங்காரக் கிரந்தி, அகங்காரத்தின் வசப்பட்டிருத்தலாம். கிரந்தி: இருதயக் கிரந்தி, சம்சயக் கிரந்தி கர்மக் கிரந்தியென மூவகையாமெனக் கூறலுமுண்டு. (1) புத்தியை ஆத்மாவாக அத்தியாசத்தால் நிச்சயித்திருத்தல் இருதயக் கிரந்தியாம்; (2) ஆத்மா ஏகமா? அநேகமா? சித்தா? ஜடமா? என்றற்றொடக்கத்தனவாக மயக்கங் கொண்டிருத்தல் சம்சயக் கிரந்தியாம்; (3) சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியமென்னும் கர்மங்களை ஆத்மாவுடையதாயிருக்கின்றதென் றுணர்தல்கர்மக் கிரந்தியாம்.

### பாலபோதம்.

"(1) பிரமஜதாதாத்மியம் (அகங்காரத்திற்குச் சாட்சியோடுள்ள தாதாத்மியம்), (2) சகஜதாதாத்மியம் (அகங்காரத்திற்குச் சிதாபாசனோடுள்ள தாதாத்மியம்), (3) கர்மஜதாதாத்மியம் (அகங்காரத்திற்கு ஸ்தூல தேகத்தோடுள்ள தாதாத்மியம்) என்னும் பேதத்தால் அகங்காரத்தின் தாதாத்மியம் மூன்று வகையாம்" என்று கூறுவதும்,



### விசாரசந்திரோதயம்.

(1) ஞானத்தினால் பிராந்தி (அவிவேகம்) நாசமாகப் பிரமஜ தாதாத்மியம் நிவிர்த்தியாகின்றது; (2) சகஜதாதாத்மியத்திற்கு ஞானத்தால் பாதமும் (பொய்யென்னும் நிச்சயமும்) ஞானியின் தேகம் விழுந்தபின் நாசமுமுண்டாகின்றன; (3) ஞானியின் கர்மஜ தாதாத்மியம் பிராரத்த கர்ம போகம் முடிவாகவே நிவிர்த்தியாகின்றது" என்று கூறுவதும் இங்குணர்தற் பாலனவாம்.

தாதாத்மியத்திரயங்களின் சொரூபத்தைச் சற்குருவின் முன்னிலையில் செய்யும் வேதாந்த சாஸ்திர விசாரத்தால் ஐயந்திரிபின்றி யுணர்ந்து, சம்சார காரணமாகிய பிரமஜதாதாத்மியத்தைத் தத்துவ ஞானத்தால் கெடுத்து, பிரத்யக் ஆத்ம அபின்ன பிரஹ்ம சொரூபமாகவேவிளங்குகின்றவன் சகஜதாதாத்மியத்தையும், கர்மஜதாதாத்மியத்தையும் கானல் நீர்போலத் தன்னிடத்துக் கற்பிதமாகக் கண்டு கலக்கமற்றிருப்பானென்பது இச் செய்யு 24
ளின் தாற்பரியமாம்.

### பஞ்சகோசதாதாத்மியம்.

25. அன்னமயம் பிராணமய மனோமயம்விஞ் ஞானமானந்த மயமைந்தி னன்னமய மாகும், பின்னுடல்கன்

மேந்திரியத்திற் பிராணனது கூடிற் பிராணமய மனங்
கூடிற் பிறங்குமனோ மயமா, நன்னிலைஞா னேந்திரியமும்
புத்தியுங்கூ டிடில்விஞ் ஞானமய மாமவித்தை யானந்த
மயமாஞ், சொன்னவைந்துந் தானெனறு தாத்மியமிவ்
வெல்லாந் தோய்வறநின் றெனதெனல்காண் சுத்தவனு
பவமே.

(இ - ள்.) அன்னமயம் பிராணமய மனோமயம்விஞ் ஞான மானந்த மயமைந்தின் - அன்னமயகோசம் - பிராணமயகோசம்- மனோமயகோசம் - விஞ்ஞானமயகோசம் - ஆனந்தமயகோச மென்னும் பஞ்சகோசத்துள், அன்னமயமாகும்-(மாதா பிதாக்களின் சுக்கிலசோணிதங்களாலாகிய ஸ்தூலசரீரமே) அன்னமய கோசமாம், பின்-(ஸ்தூல சரீரத்தின்)பின்,(எண்ணப்படுகின்ற), உடல் - (சூட்சும) சரீரத்தில், கன்மேந்திரியத்தில் - கர்மேந்திரியத்தோடு, பிராணனதுகூடின் - பிராணவாயுவானது கூடியவிடத்து (தம்முள் கூடியுள்ள அவ்விரண்டும்), பிராணமயம் - பிராணமய கோசமாம், மனங்கூடின் - (ஞானேந்திரியத்தோடு) மனங்கூடியவிடத்து (தம்முள்கூடியுள்ள அவ்விரண்டும்), பிறங்கும் - விளங்குகின்ற, மனோமயமாம் - மனோமய கோசமாம், நன்னிலை - (சப்த-பரிச-ரூப-ரச -'கந்தங்களை நேரேயறிதற்குச்) சிறந்த சாதனமாயுள்ள, ஞானேந்திரியமும் புத்தியும் - ஞானேந்திரியங்களும் புத்தியும், கூடிடில் - கூடியவிடத்து, (தம்முள்



கூடியுள்ள அவ்விரண்டும்), விஞ்ஞானமயமாம் - விஞ்ஞானமய கோசமாம், அவித்தை - (தூல-சூட்சும சரீரங்கள் உண்டாவதற்குக்காரணமாயுள்ள)அஞ்ஞானம்(பிரியம்-மோதம்-பிரமோதமென்னும் திரிவித சுகவிருத்தியோடு கூடியவிடத்துத் தம்முள் கூடியுள்ள அவை), ஆனந்தமயமாம்-ஆனந்தமயகோசமாம், சொன்னவைந்தும் - (இவ்வாறு வகுத்துக்) கூறிய இவ்வைந்து கோசங்களையும், தானெனல் - ஆத்மாவென்று கொள்ளுதல், தாதாத்மியம் - பஞ்சகோச தாதாத்மியமாம், இவ்வெல்லாம் - இப்பஞ்ச கோசமனைத்திலும், தோய்வறநின்று - (இவை நானென்னும்) அபிமானமொழிய (அறிவுவடிவமாகவே) நின்று, எனதெனல் - (இப்பஞ்ச கோசங்கள் என்னிடத்துக் கற்பிதமாயுள்ள மாயா காரியமாம்; அதனால், அவற்றுள் ஒவ்வொன்றும்) என்னுடையதென்று தீர்மானித்திருத்தல், சுத்தவனுபவம் - (சித்தும் சடமும் சிவத்தைவிட வேறில்லை; அந்தச் சிவமே நானென்று பிறழாதிருப்பதாகிய) சுத்தவனுபவமாம், (எ - று).

1. பிதா மாதாக்களின் சுக்கிலசோணிதத்தாலாகிய ஸ்தூல சரீரமே அந்நமயகோசமாம்;

2. சூட்சுமசரீரத்தில் பிராணவாயுவும் கர்மேந்திரியமுங் கூடிப் பிராணமய கோசமாம்;

3. மனமும் ஞானேந்திரியமும் கூடி மனோமயகோசமாம்;

4. பிரத்தியகாத்ம சைதந்நியச் சாயையுடனே லோகாந்த குந்தம்போலிருக்கும் புத்தியும் ஞானேந்திரியமும் கூடி விஞ்ஞானமய கோசமாம்.

5. காரணதேக ரூபமான அவித்தையும், சாக்கிரத்தில் வனிதாதி விஷயங்களைக் காண்டல் - அடைதல் - அனுபவித்த லென்பவற்றால் கிரமமாக வுண்டாகும் பிரியம் - மோதம் - பிரமோதமென்னுந் திரிவித சுகவிருத்தியுங்கூடி ஆனந்தமயகோசமாம்.

பஞ்சகோசங்கள் :—(1) தாய் தந்தையரால் உண்ணப்படும் அன்னத்தினின்றுண்டாகுந் தாயினுடைய இரத்தத்தினாலும் பிதாவினுடைய வீரியத்தினாலும் தாயினுடைய உதரத்தில் உற்பத்தியாகி, ஜனனத்திற்குப்பின் பால் முதலிய அன்னங்களால் வளர்க்கப்பட்டு மரணத்திற்குப் பின் அன்னரூபமான பிருதிவியில் லயமடைகிற தேகம் அன்னமயகோசமெனப்படும். (2)பிராணமயகோசம் கேவலம் ரஜோகுணத்தின் அவஸ்தையாம்; பிராணாதிவாயுக்கள் சரீரத்தில் பூரித்துச் சரீரத்திற்குப் பலத்தைக் கொடுத்து இந்திரியங்களை அவற்றின் காரியத்தில் பிரவர்த்திக்கும்படி செய்கின்றன. (3) கர்மேந்திரியங்களால் வியவகாரம் செய்வதனாலும் இச்சை முதலிய ரஜோகுண விருத்திகளுடன் கூடியிருப்பதாலும் மனோமயம் சத்துவ ரஜோ குணங்களின் அவஸ்தையாம்; (4) விஞ்ஞானமயம் கேவலம் சத்துவகுணத்தின் அவஸ்தையாம். இவ்விதமாக அவஸ்தா ரூபத்தால் ஓரே சூட்சும சரீரத்தில் மூன்று கோசங்கள் சொல்லப்படுகின்றன. (5) ஆத்மாவின் சொரூபம் ஆநந்தமாம். இதன் பிரதிபிம்பத்துடன் கூடியும் பிரியமோதப் பிரமோதங்க



ளாகிய விருத்திகளின் லயத்துக்கு ஸ்தானமாயுமிருப்பது அவித்தையாகிய காரணதேகமாம். அதுவே ஆநந்தமய கோசமாம்.

“தேகாகாரமாகப் பரிணமித்த நான்கு பூதங்களே துவம் பதார்த்தமென்பர் சார்வாகர்; சக்ஷுா முதலிய இந்திரியங்கள் தனித்தனியே துவம்பதார்த்தமென்பர் சார்வாகருள் ஏக தேசிகள்; சக்ஷுராதிகளின் சமுதாயமே துவம்பதார்த்தமென்பர் சிலர்; மனமென்பர் சிலர்; பிராணனென்பர் சிலர்; க்ஷணிகவிஞ் ஞானமென்பர் சுகதர் (யோகாசாரர்); சூன்யமென்பர் மாத்தியமிகர்; தேகேந்திரியங்களினும் வேறாகத் தேகபரிமாண முள்ளவனென்பர் திகம்பரர் (சமணர்); கர்த்தா போக்தா ஜடன் விபுவென்பர் வைசேஷிகர், தார்க்கிகர் (நையாயிகர்), பிரபாகரர்; போக்தாவும் ஜடன் போதசொரூபனென்பர் பாட்டர்; (கர்த்தாவல்ல) கேவல போதசொரூபனுமாமென்பர் சாங்கியர், யோகியர்; அவித்தையினால் கர்த்திருத்துவ முதலிய தர்மங்களுடன் கூடினவனும் பரமார்த்தத்தில் தர்மமற்றவனும் பரமாநந்த போத சொரூபனுமாமென்பர் வேதாந்திகள்” என்று சித்தாந்த பிந்து கூறுவதால் இப்பஞ்சகோசங்களுள் ஒவ்வொன்றை ஆத்மாவென்பவர் இன்னாரின்னாரென்பதும், ஆத்மா பஞ்ச கோசங்களுள் எவதும் அன்றென்பதும் யூகித்துநோக்குவோர்க்கு நன்கு விளங்குவனவாம்.

நான் பருத்தேன், நான் இளைத்தேனென்பது அன்னமய கோச தாதாத்மியமாம்; எனக்குப்பசியெடுக்கின்றது, எனக்குத்தாக

மெடுக்கின்றதென்பது பிராணமயகோச தாதாத்மியமாம்; நான் சங்கற்பித்தேன், நான் விகற்பித்தேனென்பது மனோமயகோச தாதாத்மியமாம்; நான் கர்த்தா, நான்போக்தாவென்பது விஞ்ஞானமய கோச தாதாத்மியமாம்; நானறியேனென்பது ஆநந்தமயகோச தாதாத்மியமாம். நான் பருத்தேன் நான் இளைத்தேன் என்னும் அன்னமயகோச வியவகாரமும், எனக்குப்பசியெடுக்கின்றது எனக்குத்தாகமெடுக்கின்றது என்னும் பிராணமயகோச வியவகாரமும், நான் சங்கற்பித்தேன் நான் விகற்பித்தேனென்னும் மனோமய கோச வியவகாரமும், நான் கர்த்தா நான் போக்தாவென்னும் விஞ்ஞானமயகோச வியவகாரமும், நான் அறியேனென்னும் ஆனந்தமயகோச வியவகாரமும், அப்பஞ்ச கோசங்களும், நானல்ல ; அவையென்னிடத்துக் கற்பிதமாயுள்ள மாயையின் காரியங்களாம்; அதனால், என்னுடையனவாம் என்பதைச் சற்குருவாயிலாக வேதாந்தசாஸ்திர விசாரம் செய்வதனாலுண்டாகும் தத்துவ ஞானத்தினாலுணர்ந்து சின்மாத்திர சிவசொரூபமாக விளங்குகின்ற அதிகாரி புருஷனே சுத்தானுபவ முடையனாவனென்பது இதன் திரண்டபொருளாம். இச்செய்யுளின் விரிவாயபொருளை வாசுதேவ மநநம் பஞ்சகோச விலட்சண நிருபகத்தில் காண்க. தாதாத்மியம்-ஒருமைப்பாடு.

கோசம், உறை, மூடியென்பன ஒருபொருட்கிளவிகளாம். கத்தியினுறை அதனை மறைத்திருத்தல்போல அன்னமய முதலியன ஆத்மாவை மறைத்திருத்தலின், அவை கோசங்களென்று



கூறப்படுகின்றன, 'ஞானேந்தியமும்' என்பது மனமென்பதனோடுஞ்சென்றியைந்து நின்றது. காண் - அசை.

சற்குரு சந்நிதானத்தில் பஞ்சகோசங்களையும் ஆத்மாவையும் வேதாந்த சாஸ்திர விசார வாயிலாகப் பகுத்தறிந்து, பஞ்சகோசங்கள் கயிற்றரவுபோல ஆத்மாவின்கண் கற்பிதமாம்; அதனால், அவை ஆத்மாவைத் தவிரவில்லை; உள்ளது ஆத்மாவேயாம்; அதுவே பிரஹ்மமாமென்னு முணர்ச்சியுடையவனாய், பஞ்சகோசத்துள் எதனிலும் யானென்னுமுணர்ச்சி மறந்துமில்லாது சச்சிதாநந்தசங்கரவடிவமாக விளங்குகின்றவனே கிருதகிருத்தியனாவனென்பது இச்செய்யுளின் தாற்பரியமாம்.

“வினா:—பஞ்சகோசங்கள்தாம் அனுபவத்தில் வருகின்றன; இவற்றிற்கு வேறாக ஓர் ஆத்மா அனுபவத்தில் வாராமையால், ஆத்மா பஞ்சகோசங்களுக்கு வேறாக விருக்கின்றதென்னும் நிச்சயம் எப்படியுண்டாம் ?

விடை:—பஞ்சகோசங்கள்தாம் அனுபவத்தில் வருகின்றன ; இவற்றிற்கு வேறாக ஓர் ஆத்மா அனுபவத்திற்கு வரவில்லையென்னும் வார்த்தை நிச்சயமாம்; ஆயினும், எந்த அனுபவத்தால்இந்தப்பஞ்சகோசங்களும்அனுபவிக்கப்படுகின்றனவோ அந்த அனுபவத்தை நிவிர்த்திக்கக் கூடியவன்யாவன்? ஒருவனுமில்லை ; ஆகையால், பஞ்சகோசங்களின் அனுபவரூபமாகிய சைதன்னியம் யாதோ, அது பஞ்சகோசத்திற்கு வேறாகிய ஆத்மாவாம்” என்று விசார சந்திரோதயம் கூறுவதும்,

“ சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாட்சி யேகம்
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ திந்த
பொத்தொடு சடஞ்துக் காதி பொருந்தபே தங்க ளான
குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய் ”

என்று கைவல்லியநவநீதங் கூறுவதும் இங்குணர்தற்பாலன வாம். 25

**சாட்சி சரீரத்திரயவிலக்ஷணமெனல்.**

26. மொய்த்தாருஞ் சாட்சிக்குஞ் சரீர மான மூன்
றினுக்கு மன்னியமு முடிவுங் கூறிற், கர்த்தாவாஞ்
சாட்சிக்கு ஞானத் தாலே காரணமாந் தேகமந்தக்
கணத்தி னாசந், தொத்தாய காரணதே கந்தா னென்று
தொலைவதன்முன் சூக்குமதே கங்கள் கோடி, யொத்
தாய பிரளயத்தி லொடுங்குஞ் சூக்க மொன்றொடுங்கு
முனமனந்த மொடுக்குந் தூலம்.

(இ - ள்.) மொய்த்து ஆரும் - (கடத்தில் மண்போலும் ஆடையில் நூல்போலும் மாயாப் பிரபஞ்சமனைத்திலும்) நிறைந்து வியாபித்திருக்கின்ற, சாட்சிக்கும் - சாட்சி சேதனத்திற்கும், சரீரமான - சரீரமாயுள்ள, மூன்றினுக்கும் - (ஸ்தூல-சூட்சும-காரணமென்னும்) மூன்றினுக்கும், (உள்ள), அன்னியமும் - பேதநிலையினையும், முடிவும் - (அச்சரீரங்களுக்கு) நாசத்தையும், கூறின் - சொல்லுமிடத்து, கர்த்தாவாம் - (சர்வப்பிர



பஞ்சத்திற்குங் காரண) கர்த்தாவாயுள்ள, சாட்சிக்கு - சாட்சி சேதனத்தை, ஞானத்தாலே - (அதிகாரி புருஷன் எனது நிஜ சொரூபமென்று உள்ளவாறு) உணர்வதாலே, காரணமாம் தேகம் - (ஆநந்தமயகோசமென்னும்) காரண சரீரம், அந்தக் கணத்தில் - (உணர்ந்த) அந்த க்ஷணத்திலேயே, நாசம் - (விளக்கின் முன் இருள் கெடுவதுபோலக்) கெடுவதாம், தொத்தாய-(பிரியம்-மோதம்-பிரமோதமென்னும் திரிவித சுகவிருத்தியோடு) கூடியிருக்கின்ற, காரணதேகந்தானென்று-ஒருகாரண சரீரம், தொலைவதன் முன் - (அகம் பிரஹ்மாஸ்மியென்னுந் தத்துவ ஞானத்தாலே) நாசமாவதற்கு முன்னே, சூக்கும தேகங்கள் - (பிராணமயகோசம் - மனோமயகோசம் - விஞ்ஞானமயகோசமென்று மூன்று பகுப்பினவாயுள்ள) சூட்சும சரீரங்கள், கோடி - கோடியாம் (கோடிகோடி யளவினவாகச் சிருஷ்டிதோறும் தோன்றுவனவாம்; அவ்வாறு தோன்றும் அவை), ஒத்தாய - (திணை - பால் - இடமென்னும்) வேறுபாடின்றியதாய, பிரளயத்தில் - பிரளயந்தோறும், ஒடுங்கும் - (தமது காரண மான மாயையில் கடம் தன்காரணமான மண்ணில் ஒடுங்குவதுபோல) ஒடுங்குவனவாம், சூக்கமொன்று - ஒரு சூக்குமசரீரம், ஒடுங்குமுனம் - (சிருஷ்டியிற்றோன்றிப் பிரளயத்தில்) ஒடுங்குவதற்கு முன்னே, அனந்ததூலம் ஒடுங்கும் - அளவிறந்த ஸ்தூல சரீரங்கள் (மண்ணில் கடங்கள் தோன்றியொடுங்குதல் போல ஸ்தூல பஞ்சபூதத்துள் தோன்றி) ஒடுங்குவனவாம், (எ - று).

ஸ்தூலம் சூட்சுமம் காரணமென்னும் சரீரம் மூன்றனுள் 1. சர்மம் (தோல்), உதிரம் (இரத்தம்), மாம்சம் (இறைச்சி), சநாயு (நரம்பு), அத்தி (எலும்பு), மச்சை (கொழுப்பு) என்னு மிவற்றால் ஆக்கப்பட்டது ஸ்தூல சரீரமாம்; 2. ஸ்தூல சரீரத் தைப்போன்று ஸ்தூலமாய்த் தோன்றாது சூட்சும பூதத்தினின் றுமுண்டாயது சூட்சும சரீரமாம்; இது அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், பிராணாதி பஞ்சகம், கர்மேந்திரிய பஞ் சகம் என்னுமிவற்றின் சமுதாயமாயிருப்பதாம்.

லிங்கசரீரம், நுண்ணுடம்பு, அருவுடம்பு, சூட்சும சரீ மென்பன ஒருபொருட்கிளவியாம்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்பன அந்தக்கரண சதுஷ்டயமாம்;

சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, கிராணம் என்பன ஞானேந்திரிய பஞ்சகமாம்;

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என் பன பிராணாதி பஞ்சகமாம்.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தமென்பன கர்மேந்திரிய பஞ்சகமாம்.

சூக்குமசரீரமும் ஸ்தூலசரீரமும் உண்டாவதற்குக் காரண மாயுள்ள அவித்தை காரண சரீரமாம்; இது பிரியம்-மோதம்-பிர



மோதமென்னும் திரிவித சுகவிருத்தியுடன் கூடியபோது
ஆநந்தமயகோசமென்று சொல்லப்படுகின்றது.
பஞ்சகோசத்துள், அன்னமயகோசம் ஸ்தூலசரீரமாம்; பிராண
மயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம் மென்னும்
மூன்றுகோசமும் சூக்குமசரீரமாம்.
பிரத்யக்ஆத்மவடிவப் பிரஹ்மசேதனத்தில்வானமைபோலக்
கற்பிதமாயுள்ள அஞ்ஞானமென்னும் காரண சரீரம் அநாதியா
யிருப்பதாம்; தத்துவஞானத்தாலே நாசமாவதாம். அந்தக்
காரண சரீரம் தத்துவ ஞானத்தாலே நாசமாவதன் முன்னர்ச்
சிருஷ்டிதோறும் ஜீவனுக்கு ஈசுவரனால் சூட்சுமசரீரம் படைத்
துக் கொடுக்கப்படுகின்றது; அது பிரளயபரியந்த மிருப்பதாம்;
பிரளய முண்டாயபோது அது நாசமாவதாம். சூட்சுமசரீரம்
பெற்றவர்க்கே ஸ்தூல சரீரம் ஈசுவரனால் படைத்துக்கொடுக்
கப்படுகின்றது. அந்தச் சூட்சுமசரீரம் நாசமாவதற்குள் ஸ்தூல
சரீரம் கோடிகோடி யளவினதாகத் தோன்றி மறைவதாம்;
காரண சரீரம் தத்துவஞானத்தால் கெட்டவிடத்துச் சூக்கும
சரீரமும் ஸ்தூல சரீரமும் நாசமாய் விடுவனவாம். இவை நாச
மாகுமுறையை,

“ அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ ரூகும்
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமங் கேர
மூரியசூக் குமச ரீர மூலையிரும் புண்ட நீர்போற்
றுரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே.”

என்று கைவல்லிய நவநீதம் கூறுவதாலுமறிக.

சாட்சி சர்வப்பிரபஞ்சத்திற்குங்கர்த்தாவாக இருப்பதன்றிக் காரணமாகவு மிருப்பதாம்.

காரணம் - முதற்காரணம்; கர்த்தா - நிமித்த காரணம் சிலந்திப்பூச்சி தன்னிடத்துத் தோன்றும்நூலுக்குத் தானே முதற்காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருத்தல்போல, சாட்சி (அவித்தையோடு கூடிய) சேதனமும் தன்னிடத்துத் தோன்றும் பிரபஞ்சத்திற்குத் தானே முதற்காரணமாகவும் நிமித்தகாரணமாகவு மிருப்பதாம்.

கயிற்றிற் கற்பிதமாயுள்ள பாம்பு கயிற்றை அறிந்த காலத்து நிவிர்த்தியாதல்போல, சாட்சியிற் கற்பிதமாயுள்ள அவித்தையும் சாட்சியை யறிந்தகாலத்து நிவிர்த்தியாய் விடுவதாமென்பதை உணர்த்த 'கர்த்தாவாஞ் சாட்சிக்கு ஞானத் தாலே காரணமாந் தேகமந்தக் கணத்தி னசம்' என்று கூறப்பட்டது.

சாட்சிக்கு - உருபுமயக்கம்.

இருட்டு ஒன்றாய் எவ்விடத்துமிருப்பினும் எவ்விடத்தில் விளக்குதயமாகின்றதோ அவ்விடத்தில் மாத்திரம் நாசமாவது போல, அஞ்ஞானமும் ஒன்றாய் எவ்விடத்துமிருப்பினும் எவ்விடத்தில் (எவ்வந்தக் கரணத்தில்) தத்துவஞான முதயமாகின்றதோ அவ்விடத்தில் (அவ்வந்தக் கரணத்தில்) மாத்திரம் நாசமாவதாம். இவ்வாறு அது நாசமாதல்பற்றி 'காரணதே கந்தானொன்று' என்று கூறப்பட்டது. ஒன்று என்பதற்குப் பொருள் ஒருபாகமென்பதாம்.



அஞ்ஞானமாகிய காரணசரீரமும் அதன் காரியமாகிய ஸ்தூல சூக்குமசரீரங்களும் சாட்சி சேதனத்திற்கு அந்நியமாயும் முடிவுடையனவாயு மிருப்பனவாம்; அதனால், அவை சாட்சி சேதனமன்றாம் என்பதும், சாட்சி ஞானத்தாலே காரணசரீரம் நாசமாயபோது காரிய சரீரங்கள் மீண்டும் வருவதில்லையாமென்பதும், பிறப்பில்லாதிருக்க விரும்புகின்றவன் சாட்சி ஞானத்தாலே காரணசரீரத்தைக்கெடுக்க முயலல்வேண்டுமென்பதும் இதன் திரண்டபொருளாம். இச்செய்யுளின் விரிவாய பொருளை வாசுதேவ மநநம் சரீரத்திரய விலட்சண நிரூபகத்திற்காண்க.

சற்குருவி னனுக்கிரகத்தால் தன்னைச் சரீரத்திரயத்திற்கு
விலட்சணமாகவும் (வேறாகவும்) சாட்சியாகவும் அறிந்து, அச்
சரீரத்திரயத்துள் எதனுகாரமுமாகாது, சின்மாத்திர சிவசொருப
மாக விளங்குகின்றவனுக்குச் சோகமும் மோகமுமில்லையாமென் 26
பது இச்செய்யுளின் தாற்பரியமாம்.

### வஸ்துவை அணுவுக்கணுவெனல்.

27. ஆய்ந்தசுத்தத் தவியக்த மதிலவ்வியா கிருத
மதனிவிர ணியகருப்ப மதனில்விராட் டடக்கம், வாய்ந்த
விராட் டினில்வானம் வானில்வளி வளியின் வன்னி
வன்னி யதில்வனமவ் வனத்தின்மண்டா னடக்கந், தோய்
ந்த மண்ணிற் றூலவுட லடக்கமதிற் சூக்கஞ் சூக்குமத்தி
லவித்தையதிற் றேய்சீவ னடக்கம், போந்தடங்கு

மதனையணு வென்பரிதி லடங்கும் பொருளையணு வுக்
கணுவாப் புகன்றிடுநான் மறையே.

(இ - ள்.) ஆய்ந்த - (தத்துவமசி முதலிய மகாவாக்கி யார்த்த விசாரத்தினால்) ஆராய்ந்து அறியத்தக்க, சுத்தத்து - சுத்தப்பிரஹ்மத்திலே, அவ்வியக்தம் (அடக்கம்) - அவ்வியக்தம் அடக்கமாம், அதில் - அந்த அவ்வியக்தத்திலே, அவ்வியாகிருதம் (அடக்கம்) - அவ்வியாகிருதம் அடக்கமாம், அதனில் - அந்த அவ்வியாகிருதத்திலே, இரணிய கருப்பம் (அடக்கம்) - இரணிய கருப்பம் அடக்கமாம், அதனில் - அந்த இரணியகருப்பத்திலே, விராட்டு அடக்கம் - விராட்டு அடக்கமாம், வாய்ந்த - பொருந்திய, விராட்டினில் - அந்த விராட்டிலே, வானம் (அடக்கம்) - ஆகாசம் அடக்கமாம், வானில் - அந்த ஆகாசத்திலே, வளி (அடக்கம்) - வாயு அடக்கமாம், வளியின் - அந்த வாயுவிலே, வன்னி (அடக்கம்) - தேயு அடக்கமாம், வன்னியதில் - அந்தத்தேயுவிலே, வனம் (அடக்கம்) - அப்பு அடக்கமாம், அவ்வனத்தில் - அந்த அப்புவிலே, மண்தான் அடக்கம் - பிருதிவி அடக்கமாம், தோய்ந்தமண்ணில் - பொருந்திய அந்தப் பிருதிவியிலே, தூல உடல் அடக்கம் - ஸ்தூலசரீரம் அடக்கமாம், அதில் - அந்த ஸ்தூலசரீரத்திலே, சூக்குமம் (அடக்கம்) - சூக்கும சரீரம் அடக்கமாம், சூக்குமத்தில் - அந்தச்சூக்கும சரீரத்திலே, அவித்தை (அடக்கம்) - அவித்தை அடக்கமாம்,



அதில் - அந்த அவித்தையிலே, தோய் சீவனடக்கம் - அவித்தியாப் பிரதிபிம்பனான சீவன் அடக்கமாம், போந்தடங்கும் அதனை-(இவ்வாறு) சென்று அடங்கும் அந்தச் சீவசேதனத்தை, அணுவென்பர் - (அறிதற்கருமையால் அறிஞர்) அணுவென்று கூறுவர், இதில்அடங்கும் பொருளை - இந்தச் சீவசேதனத்திலே அடங்கியுள்ள (பிரத்யக் ஆத்ம அபின்ன) பிரஹ்ம சேதனத்தை, அணுவுக்கு அணுவாக - அணுவினும் அணுவாக (அதி நுண்ணியதாக), நான்மறை புகன்றிடும் - நான்கு வேதங்களும் கூறுகிற்கும், (எ - று).

(1) ஏகமாயும், அகண்டமாயும், அசங்கமாயும்,உற்பத்தி நாசரகிதமாயும், அதிருசியமாயும், நாமரூபங்களற்றதாயும், தன்னையொன்றும் வியாபித்திருத்தலில்லாததாயு மிருப்பது சுத்தப் பிரஹ்மமாம்; இதில் சிந்திக்கக்கூடாத சக்தியுள்ளதாயும் யுக்தியுள் அடங்காததாயும் வாஸ்தவத்தில் இல்லாததாயும் உள்ளமாயை சிருஷ்டிக்கு முன் அவ்வியக்தமாயிருத்தலின் (வெளிப்படாதிருத்தலின்), அம்மாயை அவ்வியக்தமென்று சொல்லப்படுகின்றது. அதுபற்றி 'ஆய்ந்தசுத்தத் தவியக்தம் (அடக்கம்)' என்றும்,

(2) சுத்தப்பிரஹ்மமா யிருக்கின்ற சர்வ சாட்சியினிடத்து அக்கினியில் தாக சக்தி அடங்கியிருத்தல்போல அடங்கியிருந்த மாயை ஜீவர்களின் கர்மத்தை முன்னிட்டு வெளிப்பட்டு அந்தப் பிரஹ்மத்தை வியாபித்து அக்கினியிற் சூடு அதற்கு வேறுகா

திருத்தல்போல அதற்கு (அந்தச் சுத்தப்பிரஹ்மத்திற்கு) வேறா காது அவ்வியக்தத்தின் காரியமாயிருத்தலின் 'அதிலவ்வியாகிருதம் (அடக்கம்) என்றும், கூறப்பட்டன.

அவ்வியக்தம் - காரணம் ; வியக்தம்-காரியம். வியாகிருதம்- பிரிக்கப்பட்டது ; அவ்வியாகிருதம் - பிரிக்கப்படாதது.

அவ்வியக்தம், அவ்வியாகிருதம், அஜையென்றற்றொடக்கத்தன மாயைக்கு ஒவ்வொரு நிமித்தம்பற்றி வந்த பெயர்களாம். அம்மாயை சுத்தப்பிரஹ்மத்தடங்கியிருந்து வெளிப்படாதிருந்த நிலைமை அது வெளிப்பட்டு அவ்வியாகிருதமா யிருந்த நிலைமைக்குக் காரணமாம். இஃது ஒருவன் தனது நடத்தற்றொழிலுக்குத் தானே காரணமாயிருத்தல் போல்வதாம். இந்த அவ்வியாகிருத மாயை, ஈசனது சூக்கும சரீரத்திற்கும் ஸ்தூல சரீரத்திற்கும் காரணமாயிருப்பதுபற்றி ஈசுவரகாரண சரீரமென்று சொல்லப் படுகின்றது.

(3) சூக்குமபூதமைந்தும் அவற்றின் காரியமாயுள்ள சூக்கும சரீரங்களும் இரணியகருப்பமாம். இஃது ஈசுவரனது சூட்சும சரீரமாம். இஃது அவ்வியாகிருதமாயையின் காரியமாயிருத்தலின் 'அதனிலிரணியகருப்பம் (அடக்கம்)' என்றும்,

(4) ஸ்தூல பஞ்சபூதங்களும் அவற்றின் காரியமாயுள்ள ஸ்தூல சரீரங்களும் விராட்டாம். இஃது ஈசுவரனது ஸ்தூல சரீரமாம். இஃது இரணியகருப்பத்தின் காரியமாயிருத்தலின் அதனில் விராட்டடக்கம்' என்றும்,



(5) இவ்விராட்டினில் ஆகாசம் அடங்கி யிருத்தலின் 'விராட்டினில் வானம் (அடக்கம்)' என்றும்,

(6) இவ்வாகாசத்தில் வாயு அடங்கியிருத்தலின் 'வானில் வளி (அடக்கம்)' என்றும்,

(7) இவ்வாயுவில் வன்னி (அக்கினி) அடங்கியிருத்தலின் 'வளியின் வன்னி (அடக்கம்)' என்றும்,

(8) இவ்வன்னியில் அப்பு அடங்கியிருத்தலின் 'வன்னியதில் வனம் (அடக்கம்)' என்றும்,

(9) இவ்வப்புவில் பிருதிவி அடங்கியிருத்தலின் 'அவ்வனத்தின் மண்டானடக்கம்' என்றும் கூறப்பட்டன.

சூட்சுமபூதத்தின் காரியமாயுள்ள ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் ஸ்தூலபூதம் ஐந்தனுள் ஆகாசத்தில் பத்தில் ஒரு பங்காய் வாயுவும், வாயுவில் பத்திலொரு பங்காய் அக்கினியும், அக்கினியில் பத்திலொருபங்காய் அப்புவும், அப்புவில் பத்திலொருபங்காய்ப் பிருதிவியும் குறைந்து அடங்கியிருக்குமென்பதிங்குணர்தல் வேண்டும்.

(10) ஆறுதத்துவமாய் நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதியாயிருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் பெரும்பான்மையும் பிருதிவியின் காரியமாய் அதில் அடங்கியிருத்தலின் 'மண்ணிற்றூலவுடலடக்கம்' என்றும்,

(11) ஸ்தூல சரீரத்தில் சூட்சுமசரீரம் தோன்றாதடங்கி யிருத்தலின் 'அதில் சூக்கம் (அடக்கம்)' என்றும்,

(12) சூட்சுமசரீரத்தில் அவித்தை தோன்றாதடங்கியிருத்தலின் 'சூக்குமத்திலவித்தை (அடக்கம்)' என்றும்,

(13) அவ்வவித்தையில் சேதனத்தின் பிரதிபிம்பமாகிய ஜீவன் தோன்றாதடங்கியிருத்தலின் 'அதிற் றோய் சிவனடக்கம்' என்றும்,

(14) இந்தப் பிரதிபிம்ப ஜீவ சேதனத்தில் பிம்பசேதனமாகிய சுத்தப்பிரஹ்மம் தோன்றாதடங்கியிருத்தலின் 'இதிலடங்கும் பொருளை யணுவுக்கணுவாய் புகன்றிடு நான்மறையே' என்றும் கூறப்பட்டன.

அடக்கமென்பது இயைபுநோக்கி ஏனையவிடத்தும் கூட்டப்பட்டது.

அடக்கம், வியாப்பியம் என்பன ஒரு பொருட்கிளவிகளாம்.

சேதனம் சர்வாதிஷ்டானமா யிருத்தலின் எதனுலும் வியாப்பியமாகாது எல்லாவற்றினும் வியாபகமா யிருக்கின்றதென்பதும், அது தன்னில் கற்பிதமாயுள்ள எல்லாவற்றிலும் தோன்றாதிருத்தலின், அணுவுக்கணுவா யிருக்கின்றதென்பதும், அதுவே ஜீவனது யதார்த்த சொரூபமாமென்பதும் இதனது திரண்டபொருளாம்.



இங்குக் கூறிய பிரஹ்ம வியாபகம் நிராபேட்சிக வியாபகமாம்; ஏனைய அவ்வியக்த முதலியவற்றின் வியாபகம் ஆபேட்சிக வியாபகமாம்.

ஒன்றன் அபேட்சையால் வியாபகமாயும் மற்றொன்றன் அபேட்சையால் பரிச்சின்னமாயும் (வியாப்பியமாயும்) இருப்பது ஆபேட்சிக வியாபகமாம்; அங்ஙனமாகாத வியாபகம் நிராபேட்சிக வியாபகமாம்.

"விபுவாய் நிறைந்த மேன்மையே தென்னிற்
சிதமறு விசிட்டனில் விபுசூக்க தேகம்
இதனினுந் தூல மிதனினும் பிருதிவி
இதனினு நீர்கன லிதனினும் வளியாம்
இதனினு காய மிடந்தரு விபுவாம்
இரணிய கருப்ப னவ்வியா கிருதன்
அவ்வியக்த னிவனிற் சுத்தமே விபுவாம்
இவைக்கெலா மட்டற மியல்பதாய் நிறைந்த
அஸ்திபாதிப் பிரிய வாத்மா வான
எமைத்தளைந் தறிய விபுவே றின்மையால்
யாமே மகத்தாம் விபுவென லாமே."

"தூல ரூபியான் சூக்கனு வென்பதென்
கவாட்சத் துற்ற கதிரணு சர்வ
கதமா யிருப்பினுங் கட்புல னறியாக்

ககனம் போலக் கருதொரு வடிவிலா
அதிசூக்க மான்மா வாதலி னிந்தியம்
ஆதிய தத்துவத் தறிவினிர்ச் சரீரன்
ஆதலி னணுவுக் கணுவென வுணர்வாய். ''

என்று சொரூபலட்சணவிருத்தி கூறுவதும்,

''. அவ்வஞ்ஞானம் மூலகாரண மாகலானும்,சத்துவ-ரஜஸ்-தமோகுண 'சாம்யாவஸ்தா ரூபமாகலானும், மூலப்பிரகிருதி என்றும் பிரதானமென்றும் கூறப்படுகின்றது; அது சர்வப் பிரபஞ்சத்தினது லயத்திற்கும் ஆதாரமாயிருத்தலின், பிரளயமென்று கூறப்படுகின்றது; இந்திரியங்களுக்கு அவிஷயமாகலின், அவ்யக்தமென்று கூறப்படுகின்றது; ஆகிருதியினது அபாவத்தினுல் அவ்வியாகிருதமென்று கூறப்படுகின்றது; சர்வசுழுத்திகளுக்கும் ஆதாரமாயிருத்தலின், மகா சுழுத்தியென்று கூறப்படுகின்றது; கூடம்போன்று நிர்விகாரப்பிரஹ்மத்தில் கற்பித தாதாத்மிய சம்பந்தத்தினுல் நிலைத்திருத்தலின், கூடஸ்தமெனப்படுகின்றது; உபநிஷத் பிரமாணஜந்நிய பிரமா(யதார்த்த) ஞானமின்றி நாசமின்மையின் அட்சரமெனப்படுகின்றது.''
(அவயவங்களின் சையோகம் ஆகிருதியெனப்படும்.)

என்று வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா கூறுவதும், இங்குணர்தற்பாலனவாம்.





**வஸ்துவை மகத்துக்கு மகத்தெனல்.**

28. அரிதான சீவனுக்குப் பஞ்ச கோச மைங்குகையா மதின்குகையா மைம்பூ தந்தா, மிரியாத விராட்டிதுமற் றிதற்கு மேலா மிரணியக ருப்பமதா மிதற்கு மேலாம், பெரிதாமவ் வியாகிருத மிதற்கு மேலாம் பேசருமவ் வியக்தமிதிற் பெரிதாஞ் சுத்த, முரியார்க ளிதனை மகத் தென்பர் மேலா மொளியைமகத் தின்மகத்தென் றுரைப்பர் மேலோர்.

(இ - ள்.) அரிதான சீவனுக்கு - (பஞ்சகோசங்களினும் வேருகவிருப்பவனென்றறிவதற்கு) அருமையாயுள்ள சீவனுக்கு, பஞ்சகோசம் - (அந்நமயம் - பிராணமயம் - மனோமயம் - விஞ்ஞாநமயம் - ஆநந்தமயமென்னும்) கோசமைந்தும், ஐங்குகையாம் - ஐந்து குகைகளாம் (ஐந்துவகையாலும் சீவனிலும் வியாபகமாயிருப்பனவாம்), அதின் - அப்பஞ்சகோசங்களுக்கு, ஐம்பூதம் குகையாம் - பஞ்சபூதங்களும் குகையாம் (பஞ்சகோசங்களிலும் பஞ்சபூதங்கள் வியாபகமாயிருப்பனவாம்), இதற்கு - இப்பஞ்சபூதங்களுக்கு, இரியாத - (தத்துவஞானத்தாலன்றிப் பிறிதொன்ருல் பொய்யாய்க்) கெடுதலில்லாத, விராட்டிது - விராட்டானது, மேலாம் - வியாபகமாயிருப்பதாம், இதற்கு - இவ்விராட்டிற்கு, இரணியகருப்பம்மேலாம் - இரணிய கருப்பம் வியாபகமாயிருப்பதாம், இதற்கு - இவ்விரணிய கருப்பத்திற்கு,

அவ்வியாகிருதம் பெரிதாம் - அவ்வியாகிருதம் வியாபகமாயிருப்பதாம், (இதற்கு - இவ்வவ்வியா கிருதத்திற்கு), பேசரும் - (சத்தென்றாவது அசத்தென்றாவது குறிப்பிட்டுச்) சொல்வதற்கரிய, அவ்வியக்தம் - அவ்வியக்தமானது, மேலாம் - வியாபகமாயிருப்பதாம், இதில் - இவ்வவ்வியக்தத்திற்கு, சுத்தம் பெரிதாம் - சுத்தப்பிரஹ்மம் வியாபகமாயிருப்பதாம், உரியார்கள் (தத்துவ விசாரம் செய்தற்கு) உரிமையுள்ள பெரியோர், இதனை - இச்சுத்தப் பிரஹ்மத்தை, மகத்தென்பர் - சர்வ வியாபகமாயிருப்பதென்று கூறுவர், மேலோர் - அநுபவ ஞானிகள், மேலாம் - (கடத்தில் மண் நிறைந்திருப்பதுபோலப் பஞ்சகோசம் பஞ்சபூத முதலிய பொருள்கள் எல்லாவற்றினும் நிறைந்து அவற்றிற்கு) மேலாக விளங்குகிற, ஒளியை - சின்மாத்திரமாயுள்ள சுத்தப் பிரஹ்மத்தை, மகத்தின் மகத்தென்று - வியாபகத்தினும் வியாபகமா யிருக்கின்றதென்று, உரைப்பர் - கூறுவர், (எ - று).

அதின் என்பதன்கணுள்ள அது என்பது தொகை பொருமைப்பெயராம். விராட்டிது என்பதன்கணுள்ள இது என்பது பகுதிப்பொருள் விகுதியாம்.

"இரணியகருப்பமதாம்" என்பதன்கணுள்ள அது என்பதும் பகுதிப்பொருள் விகுதியாம். 'தாம்', 'ஆம்' என்பன அசைச்சொற்களாம்.



அதின், இதில் என்பன உருபுமயக்கங்களாம். இதற்கு என்பது பின்னும் கூட்டப்பட்டது. குகையென்பதன் பொருள் இங்கு வியாபகமாம்.

1. அவித்தையில் சேதனத்தின் பிரதிபிம்பமாயுள்ள ஜீவன் அதில் தோன்றுது வியாப்பியமாயிருத்தலின், அவனினும் பஞ்சகோசத்துள் முதலாவதாகிய பிரியம் - மோதம்-பிரமோதம் என்னும் திரிவித சுகவிருத்திபோடு,கூடியுள்ள அஞ்ஞான வடிவ ஆனந்தமயகோசம் வியாபகமாம் ;

இரண்டாவதாகிய புத்தியும் ஞானேந்திரியமும் கூடியுள்ள விஞ்ஞானமயகோசத்தில் அவ்வானந்தமயகோசம் தோன்றுது வியாப்பியமாயிருத்தலின், அவ்வானந்தமயகோசத்திலும் விஞ்ஞானமயகோசம் வியாபகமாம் ;

மூன்றாவதாகிய மனமும் ஞானேந்திரியமும் கூடியுள்ள மனோமயகோசத்தில் அவ்விஞ்ஞான மயகோசம் தோன்றுது வியாப்பியமாயிருத்தலின், அவ்விஞ்ஞானமயகோசத்திலும் மனோமயகோசம் வியாபகமாம்;

நான்காவதாகிய பிராணவாயுவும் கர்மேந்திரியமும் கூடியுள்ள பிராணமயகோசத்தில் அம்மனோமயகோசம் தோன்றுது வியாப்பியமாயிருத்தலின், அம்மனோமயகோசத்திலும் பிராணமயகோசம் வியாபகமாம் ;

ஐந்தாவதாகிய ஆறு தத்துவமாய் நால்வகைப் பிறப்பாய் எழுவகைச் சாதியாயுள்ள ஸ்தூல சரீரவடிவ அந்நமயகோசத்தில் அப்பிராணமயகோசம் தோன்றாது வியாப்பியமாயிருத்தலின், அப்பிராணமயகோசத்திலும் அந்நமயகோசம் வியாபகமாம். இவ்வகையால் ஜீவனிலும் பஞ்சகோசங்கள் வியாபகமாம்.

2. பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாயமென்னும் பஞ்சபூதங்களில் கோசமைந்தும் தோன்றாது வியாப்பியமாயிருத்தலின், அக்கோசங்களிலும் பஞ்சபூதங்கள் வியாபகமாம்;

3. (ஸ்தூல பஞ்சபூதங்களும் அவற்றிற் றோன்றியுள்ள ஸ்தூல சரீரங்களுமாயுள்ள) விராட்டில் பஞ்சபூதங்கள் வியாப்பியமா யிருத்தலின், அப்பஞ்சபூதங்களிலும் விராட்டு வியாபகமாம்;

4. (சூக்கும பூதங்களும் அவற்றிற் றோன்றியுள்ள சூக்கும சரீரங்களுமாயுள்ள) இரணியகருப்பத்தில் அவ்விராட்டு வியாப்பியமாயிருத்தலின், அவ்விராட்டிலும் இரணியகருப்பம் வியாபகமாம் ;

5. அவ்வியாகிருத வடிவ மாயையில் அவ்விரணிய கருப்பம் வியாப்பியமா யிருத்தலின், அவ்விரணிய கருப்பத்திலும் அவ்வியாகிருதம் வியாபகமாம்;



6. அவ்வியக்தவடிவமாயையில் அவ்வவ்வியாகிருத வடிவ மாயை வியாப்பியமாயிருத்தலின், அவ்வவ்வியாகிருத வடிவ மாயையிலும் அவ்வியக்த வடிவ மாயை வியாபகமாம்;

7. கயிற்றில் பாம்பாதற்குரிய சக்தி அதில் வியாப்பியமா யிருத்தல்போல அவ்வவ்வியக்த வடிவ மாயை சுத்தப்பிரஹ்மத்தில் வியாப்பியமாயிருத்தலின், அவ்வவ்வியக்த வடிவ மாயையிலும் சுத்தப்பிரஹ்மம் வியாபகமாம் ;

8. சுத்தப்பிரஹ்மத்திலும் வியாபகமா யிருப்பதொன்றில்லாமையின், அச் சுத்தப் பிரஹ்மமே எல்லாவற்றிலும் வியாபகமாமென்பது இச்செய்யுளின் திரண்டபொருளாம்.

இச் சுத்தப் பிரஹ்மமே தனது யதார்த்த வடிவமாமென்பதைச் சற்குருவருளா லுள்ளவாறு உணர்ந்து, உணர்ந்தவாறே இருப்பவன் மாயாப்பிரபஞ்சமனைத்தும் கயிற்றிற் பாம்புபோலத் தனது சொரூபத்தில் கற்பிதமாமென்பதையும், நடத்தல் கேட்டல் முதலிய சர்வ வியவகாரங்களும் அந்நமயகோச முதலிய பஞ்சகோசங்களின் தர்மமாமென்பதையும் பிறழாது அறிந்து, சின்மாத்திர சிவசொரூபமாகவே விளங்குவன் என்பது இச்செய்யுளின் தாற்பரியமாம். இது :—

“ சித்துரு னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன

*நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனவே போல*
*அத்தனை யும்பொய் தானே யானந்த வடிவு நானே ”*

என்று கைவல்லிய நவநீதம் கூறுவதாலும் நன்கு விளங்கும்.

“எலும்பு நரம்பு முதலிய வடிவமாகிய இச்சரீரம் தேகிகளுக்குத் தோற்றுகின்றது; யாதொரு இவ்வந்நமயமாகிய ஆத்மா சர்வ சரீரிகளுக்கும் தோற்றுகின்றதோ அதனினும் பிராணமய ஆத்மா வேறாயும் உள்ளாயுமிருக்கின்றது; அதனினும் மனோமய ஆத்மா வேறாயும் உள்ளாயுமிருக்கின்றது; அதனினும் விஞ்ஞானமய ஆத்மா வேறாயும் உள்ளாயுமிருக்கின்றது; ஆநந்தமய ஆத்மாவோ அதனினும் வேறாயும் உள்ளாயுமிருக்கின்றது; யாதொரு இந்த அந்நமயமுண்டோ அது பிராணமயனால் பூரணமாயிருக்கின்றது; பிராணமயனோ அப்படியே மனோமயனால் சுபாவமாகப் பூரணமாயிருக்கின்றது; அப்படியே மனோமய ஆத்மாவும் விஞ்ஞானமயனால் பூரணமாயிருக்கின்றது; விஞ்ஞானமயம் ஆநந்தமயனால் எப்போதும் சுகமே பூரணமாயிருக்கின்றது; அப்படியே ஆநந்தமயமும் தனக்கு வேறான பிரஹ்மமாகிய சாட்சியினால் பூரணமாயிருக்கின்றது; எல்லாவற்றினும் உள்ளாயிருத்தலால் பூரணமாயிருக்கும் பிரஹ்மம் வேறொன்றினால் பூரணமாகிறதில்லை. யாதொரு இந்தப் பிரஹ்மபுச்சமென்னும் பெயருடையதும், சத்தியஞானாத்வய வடிவினதும், பழைமையானதுமாகிய சாரமான இரஸத்தினையே சாட்சாத்தாக அடைந்து



தேகி எங்கும் சுகியாகின்றான். வேறுவகையால் சுகத்தன்மை ஏது? இல்லை. ” என்று யஜுர் வேதத்தின் கடோபநிஷத்துக் கூறுவதிங் குணர்தற் பாலதாம்.

(1) ஜீவனினும் பஞ்சகோசங்கள் வியாபகமாம்; (2) பஞ்சகோசங்களினும் பஞ்சபூதங்கள் வியாபகமாம்; (3) பஞ்சபூதங்களினும் விராட்டு வியாபகமாம்; (4) விராட்டினும் இரணிய கருப்பம் வியாபகமாம்; (5) இரணியகருப்பத்தினும் அவ்வியாகிருதம் வியாபகமாம்; (6) அவ்வியாகிருதத்தினும் அவ்வியக்தம் வியாபகமாம்; (7) அவ்வியக்தத்தினும் சுத்தப்பிரஹ்மம் வியாபகமாம்; (8) சுத்தப்பிரஹ்மத்தினும் வியாபகமாயிருப்பதொன்றின்மையின், அதுவே முடிவாய வியாபகமாயிருப்பதாமென்பது இங்குக் கவனித்துணர்தற்பாலதாம்.

இச்செய்யுளும் முற்செய்யுளும் வஸ்துவை அணுவுக்கணுவெனவும் மகத்துக்கு மகத்தெனவும் கூறுதலின், இவ்விரண்டினது பொருளும் கருத்து வகையால் ஒருமுடிபுடையனவாம். 28

### ஸ்தூலதேகாதி நீக்கத்தில் சுவரூபம் பிரகாசமாமெனல்.

29. தோற்றுமசத் தறிந்தகலத் தொடர்பகலு
மேதெனிலித் தூல தேக, மாற்றுதொறுந் தொழிலகலு
மிந்திரியச் செயலகன்றால் வைய நீங்கு, மேற்றுமனோ

லயத்திலறும் விடயமவித் தையைநீக்கில் யாவு நீங்கும்,
போற்றுமந்தச் சீவவறி விழந்தவிடம் புகல்பரிபூ ரணம
தாமே.

(இ - ள்.) தோற்றும் - (அதிகாரி புருஷன் தனக்குத் திருசியமாகத்) தோற்றுகின்ற, அசத்து - அசத்து ரூபமாகிய சரீராதிப் பிரபஞ்சத்தை, அறிந்து - (இச்சரீராதிப் பிரபஞ்சத்துள் எதுவும் யானு மன்று, எனது மன்று என்பதை அவஸ்தாத்திரயவியவகாரத்தால்) அறிந்து, அகல - (அச்சரீராதிப் பிரபஞ்சத்தினது சம்பந்தத்தினின்றும்) நீங்குவானாயின், தொடர்பு அகலும் - (அவனோடு அவை) சம்பந்த முறுதல் நீங்குவதாம், எதெனில் - (அஃது) எங்ஙனமாமெனின், (அவன்), இத்தூல தேகம் - இந்த ஸ்தூல சரீரத்தை, மாற்று தோறும் - (இது யானு மன்று, எனது மன்று என்று உணர்ந்து) நீக்குந்தோறும், (அவனுக்கு), தொழிலகலும் - (அச்சரீரத்தின்) வியவகாரம் நீங்குவதாம், (அதனால், அவன் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுள் எதுவும் யானுமன்று, எனதுமன்று என்றும் உணர்ந்து அவற்றை நீக்குவதற்குரியவனாவான்; அவற்றை நீக்குந்தோறும் இந்திரியங்களின் வியவகாரம் அவனுக்கு நீங்குவதாம்), இந்திரியச் செயலகன்றால் - அவ்விந்திரியங்களின் வியவகாரம் நீங்குமாயின், வையம் நீங்கும் - (அவனுக்கு) உலக வியவகாரம் நீங்குவதாம், (உலக வியவகாரம் நீங்குமாயின், அவனுக்கு



மனோலயம் உண்டாவதாம்), எற்றும் - துதிக்கத்தக்க, மனோலயத்தில் - மனோலயமுண்டானபோது, விடயம் அறும் - (அவனுக்குத் தேகவாசனை, சாஸ்திர வாசனையோடு கூடியுள்ள) விஷய வாசனை நீங்குவதாம், அவித்தையை - (தன்னை மறைத்த பந்தமென்னும்) அஞ்ஞானத்தை, நீக்கில் - (ஐயந்திரி பின்றிய அகம் பிரஹ்மாஸ்மி என்னும் தத்துவஞானத்தினால் அவன்) நீக்குவானாயின், யாவும் நீங்கும்-(அவனுக்குச் சரீர வியவகாரம், இந்திரிய வியவகாரம், மனோவியவகாரமென்னும்) சர்வ வியவகாரங்களும் ஒழிவனவாம், போற்றும் - (சரீர இந்திரிய முதலியவற்றை யான் எனதென்று) அபிமானிக்கும், அந்தச் சீவவறிவு - அந்த ஜீவபோதம், இழந்தவிடம் - (சமாதி அப்பியாசத்தின் பெருக்கத்தால் அவனுக்கு) நீங்கியவிடத்து, புகல் - (வேதாந்தங்களாலே) சொல்லப்படுகின்ற, பரிபூரணமதாம் - பரிபூரண பரப்பிரஹ்மமாக விளங்கும் நிலை உண்டாவதாம், (எ - று).

ஸ்தூலசரீரம்'நானுமன்று, எனதுமன்று என உணர்ந்தவிடத்து அதன் வியவகாரம் நீங்குவதாம்; அதனால், இந்திரியங்கள் நானுமன்று, எனதுமன்று என்னும் உணர்வுண்டாவதாம்; அதனால், அவ்விந்திரியங்களின் வியவகாரம் நீங்குவதாம்; அதனால், உலகவியவகாரம் நீங்குவதாம்; அதனால், மனோலயமுண்டாவதாம்; அதனால், விஷயவாசனை நீங்குவதாம்; அதனால், தத்துவஞானம் உண்டாவது வாயிலாக அஞ்ஞானம் நீங்குவதாம்; அத

ளால் சரீர வியவகாரம் முதலியவனைத்தும் நீங்குவனவாம்; அதனால், ஜீவபோதம் நீங்குவதாம்; அதனால், பரிபூரணபரப்பிரஹ்மமாக விளங்கு நிலை யுண்டாவதாமென்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

(1) என்னையெவரும் நிந்தித்தல்கூடாது; யாவரும் என்னையே துதித்தல் வேண்டும் என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் உலக வாசனையாம்;

(2) ஸ்தூல சூக்கும தேகங்களின் ரோகாதிரூப அல்லது பாவரூப மலங்களை ஔஷத முதலியவற்றாலாவது தீர்த்தயாத்திரையாலாவது முற்றும் நீக்குவேன்; அன்றியும், அவற்றின் கண் புஷ்டி அழகு முதலிய வடிவக்குணங்களை அல்லது புண்ணிய வடிவக்குணங்களைச் சம்பாதிப்பேன் என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் தேகவாசனையாம்;

(3) சகல சாஸ்திரங்களையும் படித்தல்வேண்டும்; அவற்றினர்த்தங்களையெல்லாம் அறிதல்வேண்டும்; அவை கூறும் ஒழுக்கத்தைத் தவறாது மேற்கொள்ளல் வேண்டுமென்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் சாஸ்திர வாசனையாம்.

தேகம், இந்திரியம், உலகம், அந்தக்கரணம், அவித்தையென்னும் ஐந்தையும் சற்குரு வாயிலாகச் செய்யும் வேதாந்த சாஸ்திர விசாரத்தாலுண்டாகும் ஞானத்தாலே இவை யானுமன்று, எனது மன்று என்று முறையே நீக்கிய அதிகாரி புருஷனுக்கு அவை கானல்நீர் போல (அவனிடத்து) மித்தையாகத் தோன்றுவனவாம்; அதனால், அவனுக்கு அவற்றின் வியவகாரம் உண்டாவதில்லையாம்; அதனால், அவனிடத்து யான் கர்த்தா போக்தா வென்னுந் தற்போதஞ்சிறிதும்எழுவதில்லையாம்; எழாதாகவே, அவன் பரிபூரண பரப்பிரஹ்மமாகிய தனது யதார்த்த சொரூபமாகவே விளங்குதற் குரியவனாவன்; பிறப்பில்லையென்பது அவனுக்கேயா மென்பது இங் குணர்தற்பாலதாம். சீவபோதம் தற்போதம் சீவவறிவு என்பன ஒருபொருட் கிள 29
விகளாம்.



## அஞ்ஞானம் நீங்குமுறை.

30. மாறாத வஞ்ஞான முழுதுமகல் வதுகூறின்
வையந் தன்னின், வேறானாற் காலகலு முடன்மூன்றுஞ்
சீவனுக்கு வேற தானா, னீறாகும் பாதிதற்சாட் சியைக்
காணின் முக்காலு நீங்குந் தானாய்ப், பேறான சொரூப
பரி பூரணமா னான்முழுதும் பேசொணாதே.

(இ - ள்.) மாறாத - (தத்துவஞானம் சந்தேக விபரீதமின்றி யுண்டாகுமளவும்) கெடுதலில்லாத, அஞ்ஞானம் - அஞ்ஞானமானது, முழுதும் - முற்றும், சீவனுக்கு - (அதிகாரி புருஷனாகிய) ஜீவனுக்கு, அகல்வதுகூறின் - ஒழியும் உபாயத்தைக் கூறுமிடத்து, (அவன்), வையம்தன்னின் - உலகவியவகாரத்தினின்றும், வேறானால் - நீங்குவானாயின், காலகலும் - (அவ்வஞ்ஞானத்தின்) காற்பாகம் ஒழிவதாம், உடல்மூன்றும் -

(ஸ்தூலம்-சூட்சுமம்-காரணமென்னும்)சரீரம் மூன்றனது வியவகாரத்தினின்றும், வேறதானால் - நீங்குவானாயின், பாதிநீருகும்- (அவ்வஞ்ஞானத்தின் முன் நீங்கிய காற்பாகத்தோடு மற்றொரு காற்பாகமுமாக) அரைப்பாகம் ஒழிவதாம், தற்சாட்சியை - (தத்துவமசி மகாவாக்கியத்தின் துவம்பதார்த்த விசாரத்தினாலே துவம்பதலட்சியார்த்தமாகிய) தனது சீவ சாட்சியை, காணின் - (தனது யதார்த்த சொரூபமாக உள்ளவாறு) அறிவானாயின், முக்காலும் நீங்கும்-(முன் நீங்கிய அரைப்பாகத்தோடு மற்றொருகாற்பாகமுமாக)முக்காற்பாகம் ஒழிவதாம், தானாய்-தனது ஜீவசாட்சி சொரூபமாய், பேறான - (துவம்பதார்த்த விசாரத்தின்) பயனான, (தத்பதார்த்த விசாரத்தால்), சொரூபபரிபூரணமானால் - பரிபூரண பரப்பிரஹ்ம சொரூபமாக விளங்குவானாயின், (யானே பிரஹ்மம்; பிரஹ்மமே யான் எனப்பிரஹ்மசொரூபத்தை யுள்ளவாறுணர்ந்து உணர்ந்தவாறிருப்பானாயின்), முழுதும் (அகலும்)- (முன்நீங்கிய அம்முக்காற்பாகத்தோடு மற்றொரு காற்பாகமுமாக) முழுப்பாகமும் ஒழிவதாம், பேசொணாது - (இவ்வாறு அஞ்ஞானம் முற்றும் நீங்கப் பரிபூரண பரப்பிரஹ்ம சொரூபமாக விளங்குகின்றவனது நிலையை முன்னிலைச் சுட்டாக இத்தன்மையதென்று அறிந்து நினைத்துச்சொல்லுதற் கரிதாயிருத்தலின், அதனை எவ்வாற்றானும்) சொல்லுதல் முடியாது, (எ-று).

1. அதிகாரி புருஷன் உலக வியவகாரத்தினின்றும் நீங்குவானாயின், அவனது அஞ்ஞானத்தின் ஆவரணசக்தியில் காற்



பாகம் கெடுவதாம்; 2. தேகத்திரய வியவகாரத்தினின்றும் நீங்குவானாயின், அச்சக்தியில் மற்றொரு காற்பாகம் கெடுவதாம்; 3. ஜீவசாட்சியை (தனது நிஜவடிவத்தை)த் தரிசிப்பானாயின், அச்சக்தியில் மற்றொரு காற்பாகம் கெடுவதாம்; 4. தனது நிஜ வடிவத்திற்கு வேறாகாத பரிபூரண பரப்பிரஹ்மத்தை நானே பிரஹ்மம் பிரஹ்மமே நான் என்றுள்ளவாறுணருவானாயின், அச்சக்தியில் மற்றொரு காற்பாகம் கெடுவதாம்.

இவ்வாறு அஞ்ஞானத்தின் ஆவரணசத்தி முற்றுங்கெட, தேகேந்திரிய முதலியவற்றினது வியவகாரங்களின் சம்பந்தம் உண்மையிலின்றி, பிரத்யக் ஆத்ம அபின்ன பிரஹ்ம சொரூபயாக விளங்குகின்றவனே ஜீவன் முத்தனாவன் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

ஜீவன் முத்தனது நிலைமை சொல்லுதற்கரிய மகா மகிமை யுடையதாயிருத்தலின், அதனைப் 'பேசொணாதே' என்று கூறினார்.

"சரியையி லாணவங் கால்ச ரிந்திடுங்
கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடு
மருவுயோ கத்தின்முக் காண்ம டிந்திடும்
விரிசிவ ஞானத்தின் முற்றும் வீயுமே"

என்று சிவஞான வள்ளலார் பதிபசுபாச விளக்கத்தில் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

அஞ்ஞானம் ஆவரணம் விட்சேபமென்னும் இரண்டு சத்திகளையுடையதாம்; அவ்விரண்டு சத்திகளுள், ஆவரணசத்தி அதிகாரி புருஷனுக்கு மேற்கூறியவாறு கெட்டவிடத்து விட்சேபசத்தியென்னும் அவித்தியாலேசம் பிராரத்தகர்ம பலத்தால் வறுத்தவிதைபோல இருப்பதாம்; அவ்விட்சேபசத்தி அவனது பிராரத்த கர்மத்திற்கு நாசமுண்டாம் போது தத்துவஞானத்தின் சம்ஸ்காரத்தால் தானே கெட்டுப்போவதாம்; இவ்வாறு விட்சேபசத்தி கெட்டுப்போகத் தேகாதிப் பிரபஞ்சத் தோற்றமின்றிப் பிரஹ்ம சொரூபமாகவே அவ்வதிகாரி புருஷன் இருத்தல் அவனுக்கு விதேகமுத்தியாம்.

1. தேகாதிப்பிரபஞ்சம் தோற்றிக்கொண்டிருக்கப் பிரஹ்ம சொரூபமாக நிலைத்தல் ஜீவன் முத்தியாம்;

2. தேகாதிப் பிரபஞ்சத்தோற்றமின்றிப் பிரஹ்ம சொரூபமாக நிலைத்தல் விதேக முத்தியாம்.

1. அதிகாரி புருஷன் உலக வியவகாரத்தினின்றும் நீங்குதலாவது:—உலகம் ஸ்தூல பூதங்களின் காரியமாம்; அது யானும் அன்று, எனதும் அன்று; அதற்கும் எனக்கும் உண்மையில் எவ்வாற்றானும் சம்பந்தமில்லையாம்; நான் அசங்கன் என்னும் நிச்சயத்தோடு உலகத்திற் பற்றின்றி யிருத்தலாம். **இது ஞானத்திற் சரியை யெனப்படும்.**

2. அவ்வதிகாரி புருஷன் சரீரம் மூன்றனது வியவகாரத்தினின்றும் நீங்குவதலாவது:—(1) ஸ்தூல சரீரம் ஸ்தூல பூதங்களின் காரியமாம்; அது யானும் அன்று, எனதும் அன்று; (2) சூட்சும சரீரம் சூட்சும பூதங்களின் காரியமாம்; அது யானும் அன்று, எனதும் அன்று; (3) (இவ்விரண்டு சரீரங்களும் தோன்றுவதற்கேதுவாயுள்ள அஞ்ஞானமென்னும்) காரணசரீரம் என்னிடத்துக் கற்பிதமாயிருப்பதாம்; அது யானுமன்று, எனதுமன்று; அதற்கும் எனக்கும் உண்மையில் எவ்வாற்றானும் சம்பந்தமில்லையாம்; அதனால், என்னோடு ஸ்தூல சரீரத்திற்கும் சூட்சும சரீரத்திற்கும் எவ்வாற்றானும் உண்மையில் சம்பந்தமில்லையாம்; நான் அசங்கன் என்னும் நிச்சயத்தோடு சரீரத்திரயங்களில் பற்றின்றியிருத்தலாம். **இது ஞானத்திற் கிரியை யெனப்படும்.**

3. அவ்வதிகாரி புருஷன் தற்சாட்சியைக் காணுதலாவது:—நான் சரீரத்திரயங்களுள் எதுவுமன்று; நான் சச்சிதானந்த சொரூபன்; அவஸ்தாத்திரய சாட்சி; அதனால், அசங்கன் என்னும் தீர்மானத்தோடு சமாதி அப்பியாசஞ்செய்து, அதன் பெருக்கத்தினால் ஆநந்த வடிவமாயுள்ள தனது நிஜசொரூபமாகிய ஆத்மாவை உள்ளவாறு கண்டு, அதுவாகவே விளங்கலாம். **இது ஞானத்தில் யோக மெனப்படும்.**

4. அவ்வதிகாரி புருஷன் தானாய்ப் பேறான சொரூபபரிபூரணமாதலாவது:—அவன் சமாதியில் ஆநந்த சொரூபமாக விளங்கும் தனது நிஜவடிவ ஆத்மாவிற்கும் பரிபூரண பரப்பிரஹ்மத்திற்கும் உள்ளபேதம் கடாகாசத்திற்கும் மகாகாசத்திற்

கும் உள்ளபேதம் போல்வதாம்; உண்மையில் அவ்விரண்டிற்கும் பேதமில்லையாம்; அதனால், பரிபூரண பரப்பிரஹ்மமே நான்; நானே பரிபூரண பரப்பிரஹ்மம் என்னும் நிச்சயத்தோடு பரிபூரண பரப்பிரஹ்மமாகவே விளங்குதலாம். இது ஞானத்தில் ஞானமெனப்படும்.

இந்த நான்கும் தத்துவமசி மகாவாக்கியார்த்த விசாரமுடைய அதிகாரிபுருஷனுக்கே சித்திப்பனவாம். 30

### முத்தர்பெத்தரிலக்கணம்.

31. முத்தரையும் பெத்தரையு முகக்குறியா
னகக்குறியான் முழுதுந் தேரின், மெத்தெனவா கிய
மொழியு மானந்த பரவசத்தான் மிகுந்த சோர்வுஞ்,
சித்தநிலை திரியாத செல்வமுமா யிருப்பர்நல்லோர்
தீயோ ரெல்லா, மித்தகைமை யோர்களையு மிகழ்ந்து
புகழ்ந் தோர்க்குறவா யிருப்பர் தாமே.

(இ - ள்.) முத்தரையும் - (ஜீவன் முத்தர் எத்தன்மையரா யிருப்பாரென்று அச் சீவன்)முத்தரையும், பெத்தரையும்- (பெத்தர் எத்தன்மையரா யிருப்பாரென்று அப்)பெத்தரையும், முகக்குறியான் - (அவர்தம்) முகக்குறியினாலும், அகக்குறியான் - அகக்குறியினாலும், (உடற்குறியினாலும்), முழுதும் - முற்றும், தேரின் - ஆராய்ந்து அறியுமிடத்து, (அவ்விருவருள்), நல்



லோர் - (மைத்திரி - கருணை - முதிதை - உபேட்சை என்னும் நான்கு குணங்களையும் முற்றும் பெற்றுள்ள) நல்லோராகிய ஜீவன்முத்தர், (எஞ்ஞான்றும்), மெத்தெனவாகிய மொழியும்- மிருதுவாகிய வசகமும், ஆனந்தபரவசத்தால் - (தற்போதமிழந்து) சிதாநந்த வடிவமாய் விளங்குதலால், மிகுந்தசோர்வும் - (பிரபஞ்ச வியவகாரத்தில் மிகு பராமுகமுடையவராய்) அளவு கடந்த மெய்ம்முயற்சியில்லாமையும், சித்தநிலை - (பிராரத்த கர்மவசத்தினால் அஷ்டமாசித்திகள் வருமாயினும், சர்வம்மித்தை; சர்வம் பிரஹ்மம்; சர்வம் நானென்னும் நிச்சயவடிவ) மனோநிலை, திரியாத - வேறுபடுதலில்லாத, செல்வமும் - ஐசுவரியமும், (என்னுமிவற்றை), ஆய் - உடையவராய், இருப்பர்-இருப்பர், தீயோரெல்லாம் - (பிரபஞ்சம் நித்தியம்; பிரஹ்மமென்பதொன்றில்லை; தேகமே நானென்னும் விபரீதபுத்தியுடைய) தீயோராகிய பெத்தர் யாவரும், (எஞ்ஞான்றும்), இத்தகைமை யோர்களை - (மெத்தெனவாகிய மொழி, ஆநந்த பரவசத்தால் மிகுந்தசோர்வு, சித்தநிலை திரியாத செல்வமென்னும்) இக்குணங்களையுடைய ஜீவன் முத்தர்களை, இகழ்ந்தும்-அவமதித்தும், புகழ்ந்தோர்க்கு - (தம்மைப்) புகழுகின்றவர்க்கு, உறவாயும்-நட்பினராயும், (இகழுகின்றவர்க்குப் பகைவராயும்), இருப்பர் - இருப்பர், (எ - று).

இத்தகைமையோர்களையும் என்னும் உம்மை பிரித்து (இகழ்ந்தென்பதனோடும் உறவாயென்பதனோடும்) கூட்டப்பட்டது. தாம் - ஏ - அசை. மெய் - உடம்பு.

'முகக்குறி' 'அகக்குறி' என்றாராயினும், 'ஆனந்தபாவசத்தான் மிகுந்த சோர்வும்' என்றமையான், உடற்குறியும் கொள்க.

மெத்தெனவாகிய மொழி - முகக்குறியாம்; மிகுந்தசோர்வு - உடற்குறியாம்; சித்தநிலை திரியாத செல்வம் - அகக்குறியாம்.

மெத்தெனவாகிய மொழி - இதமாயும் மிதமாயும் வஞ்சனை கலவாததாயுமுள்ள சொல்லாம்;

மிகுந்தசோர்வு - பரபரப்பாக ஒருவேலையுஞ் செய்யாமையாம்;

சித்தநிலை திரியாத செல்வம் - சித்தம் காமம் வெகுளி மயக்கங்களின் வசமாகாதிருத்தலாம்.

அகம் - மனம்; குறி - அடையாளம்.

முகக்குறியும் உடற்குறியும் அகக்குறியை அறிதற்கு ஏதுக்களாம். இதனை :—

" வாக்குமுகங் கண்களான் மாறுபடா துயர்ந்தோர்தம் மறுவில் சித்தம், மேக்குயரு மிவற்றாலே யுண்ணினைவு மறியலாம் " என்று ஞானவாசிஷ்டம் கற்கடி கதையிற் கூறுவதாலுமறிக.

அஞ்ஞானத்தினது ஆவரண சத்தியின் வசமாகாதிருப்பவர் ஜீவன்முத்தராவர் ; அதன் வசமாயிருப்பவர் (அஞ்ஞானிகளென்னும்) பெத்தராவர். ஜீவன் முத்தர் பிரபஞ்சம் நித்தியம்; பிரஹ்மமென்பதொன்றில்லை; தேகமே நானென்னும் விபரீதபுத்தியின்றி (சற்புருஷ சிநேகமாகிய) மைத்திரி, (துக்கிகளிடத் துண்டாகும்



இரக்கமாகிய) கருணை, (புண்ணிய அதிகாரிகளிடத்து உண்டாகும் சந்தோஷமாகிய) முதிதை, (பாபிகளிடத்து இராகத்துவேஷமில்லாமையாகிய) உபேட்சை என்னும் நான்கு குணங்களையும் முற்றும் பெற்று, மெத்தென்வாகிய மொழியும், ஆநந்தபாவசத்தால் மிகுந்தசோர்வும், சித்தநிலை திரியாத செல்வமுமாயிருப்பரென்பதும், அஞ்ஞானிகள் மேற்கூறிய விபரீத புத்தியோடு மேற்கூறிய நான்கு குணமுமின்றி, ஜீவன் முத்தர்களை இகழ்ந்தும், தம்மைப் புகழுகின்றவர்க்கு நட்பினராயும், இகழுகின்றவர்க்குப் பகைவராயு மிருப்பரென்பதும் இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

ஜீவன்முத்தரை யறியும் குறி:—அவர் மெத்தெனவாகிய மொழியும், ஆநந்த பாவசத்தால் மிகுந்த சோர்வும், சித்தநிலை திரியாத செல்வமுமாயிருத்தலாம் ;

பெத்தரை யறியும் குறி:—அவர் ஜீவன் முத்தர்களை இகழ்ந்தும் தம்மைப் புகழுகின்றவர்க்கு நட்பினராயும் இகழுகின்றவர்க்குப் பகைவராயும் இருத்தலாம்.

ஜீவன் முத்தரை இகழ்ந்து தம்மைப் புகழுகின்றவர்க்கு நட்பாயிருப்பவர் தம்மை இகழுகின்றவர்க்குப் பகைவராயிருப்பரென்பது சொல்லாமலே பெறப்படுவதாம்.

முத்தர் - (அஞ்ஞானக் கட்டினின்றும்) விடப்பட்டவர் ;

பெத்தர் - (அஞ்ஞானத்தால்) கட்டுப்பட்டிருப்பவர்.

"பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே"

என்று பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதும்,

"மெத்தென்ற சொல்லும் விருப்பமற்ற நோக்குமெலாஞ்
சத்தென்ற நெஞ்சுந் தளர்நடையுஞ்—சித்தத்
தடங்கா மகிழ்வு மனவரதம் பெற்ற
திடந்தானே ஞானி செயல்."

என்று சொரூபசாரம் கூறுவதும் இங்குணர்தற்பாலனவாம். 31

அஞ்ஞானஞானங்களினிலக்கணம்.

32. ஏற்றபிர பஞ்சமதே நித்தமென்றும் பிரம மென்ப தில்லை யென்றுந், தோற்றுமுட லுமனென்றுந் துளங்குவதே யஞ்ஞான துக்க மாகுஞ், சாற்றுபிர பஞ்ச மெலா மநித்தமென்றும் பிரமமது தானே யென்றும், வேற்றுடல்வெற் றுடலென்றும் விரிந்துணரப் பெறு மதுவே தாந்த ஞானம்.

(இ - ள்.) ஏற்ற - (நாமரூபவடிவமாகப்) பொருந்திய, பிரபஞ்சமதே - உலகமே, நித்தமென்றும் - நித்தியப் பொருளென்றும், பிரமமென்பது - (பிரபஞ்சத்தின் அதிஷ்டானமாகப்) பிரஹ்மமென்பதொன்று, இல்லையென்றும் - (எவ்வாற்றானும்) இல்லையென்றும், தோற்றும் - (கை-கால் முதலிய அவயவங்களோடு கூடிப் பிரத்தியட்சமாக) விளங்குகின்ற, உடல் - உடம்பே, தானென்றும் - தானென்னும் சொல்லுக்குப்பொருளாயுள்ள ஆத்மாவென்றும், (அம்மூன்றையும் கருதி), துளங்குவதே - (சித்தம்) கலங்குதலையடைதற்குக் காரணமாயிருப்பதே, அஞ்ஞான துக்கமாகும் - அஞ்ஞானமாகிய துக்கமாம், சாற்று - (நித்தியாநித்திய வஸ்து விவேகமில்லாதவரால் நித்தியமென்று) கூறப்படுகின்ற, பிரபஞ்சமெல்லாம் - பிரபஞ்சமனைத்தும், அநித்தமென்றும் - அநித்தியப் பொருளென்றும், பிரமமதே - (பிரபஞ்சத்தின் அதிஷ்டானமாயுள்ள) பிரஹ்மசொரூபமே, தானென்றும் - (சரீரத்திரய விலட்சணமாய் அவஸ்தாத்திரய சாட்சியாய்ச் சச்சிதாநந்த வடிவமாய்த்) தானென்னுஞ் சொல்லுக்குப் பொருளாயுள்ள ஆத்மாவென்றும், வேற்றுடல் - தம்முன் வேறாயுள்ள சரீரம் மூன்றும், வெற்றுடலென்றும் - பொய்ப் பொருளென்றும், (இவ்வாறு அம்மூன்றையும்), விரிந்துணரப்பெறுமதுவே - விரிவாக அறிவதே, வேதாந்த ஞானம் - (சற்குருவாயிலாகச் செய்யும்) வேதாந்த சாஸ்திர விசாரத்தாலுண்டாகும் ஞானமாம், (எ - று).

பிரபஞ்சம்நித்தியம்; பிரஹ்மமென்பதொன்றில்லை; உடம்பே தானென்று அம்மூன்றையும் கருதும் விபரீத புத்தியையுண்டாக்குவது வாயிலாகச் சித்தத்தைக் கலங்கச்செய்து அதுகாரணமாகத் துக்கஹேதுவாயிருப்பதே அஞ்ஞானத்தினிலக்கணமாம்;

பிரபஞ்ச மனைத்தும் அநித்தியம்; பிரஹ்மமேதான் (ஆத்மா); வேற்றுடல் வெற்றுடல் (மித்தை) என்று அம்மூன்றையுஞ்செவ்வையாக அறிவதேஞானத்தினிலக்கணமாமென்பது இதன் திரண்ட பொருளாம்.

நித்தியம் - அழியாதது; அநித்தியம் - அழிவது. நித்தியம் - சத்தியமாம்; அநித்தியம் - மித்தையாம். பிரபஞ்சமது பிரமமது என்பதன்க ணுள்ள அது என்னுமிரண்டும் சுவார்த்தப் பிரத்தியயமென்னும் பகுதிப்பொருள் விகுதிகளாம். 'உணரப் பெறுமதுவே' என்னுந்தொடர் ஒருசொற் றன்மையதாய் நின்றது.

அஞ்ஞானிகள் பிரபஞ்சம் நித்தமென்றும், பிரமமென்பதொன்றில்லையென்றும், தோற்றமுடல் தானென்றும் கருதும் விபரீதபுத்தி யுடையவராயிருப்பர்; அவர்கள் அங்ஙனமிருப்பதே அவர்களின் இலக்கணமாம்.

ஞானிகள் பிரபஞ்சமெல்லாம் அநித்தமென்றும், பிரமமது தானேயென்றும், வேற்றுடல் வெற்றுடலென்றும் கருதும் யதார்த்த புத்தி யுடையவராயிருப்பர்; அவர்கள் அங்ஙனமிருப்பதே அவர்களின் இலக்கணமாம்.

ஜீவனுக்கு அஞ்ஞானத்தால் அவிவேகமும், அதனால் அபிமானமும், அதனால் இராகத்துவேஷாதிகளும், அவற்றால் கர்ம



மும், அதனால் சரீரமும், அதனால் துக்கமுமுண்டாகின்றமையால் 'அஞ்ஞான துக்கமாகும்' என்று கூறப்பட்டது.

அஞ்ஞானத்தால் வருந் துக்கத்தை 'அஞ்ஞான துக்கமாகும்' என்று கூறினமையின், இது காரணங் காரியமாய வுபசார வழக்கமாம்.

32

---

## தங்குருவைப் புகழ்தல்.

இருளகற்று நால்வேதத் துபநிடத மெண்ணான்கி
னெங்கோன் சொன்ன, பொருளதனை நெஞ்சகத்தே
சௌபாக்ய குருகூறும் பொருளி னோடு, மருளகற்றும்
படியமுத்தித் தமிழ்போலு மதனையொரு வழியெண்
ணான்கா, யருளகத்தி லிருந்துரைத்த ததிசயமே யதி
சயமற் றறிகி லேனே.

(இ - ள்.) அருள் அகத்திலிருந்து-(எனது உபாசனாமூர்த்தியின்) திருவருளானது (எனது) சித்தத்தின்கணிருந்து, இருள் - பொய்யிருளென்னும் அஞ்ஞானத்தை, அகற்றும் - (தம்பொருளைச் சிரத்தையோடு சற்குருவாயிலாக ஐயந்திரிபின்றியுணர்ந்து உணர்ந்தவாறு ஒழுகுகின்றவர்க்கு) நீக்குவதற்கேதுவாயுள்ள, நால்வேதத்து - (இருக்கு - யசுர்-சாமம்-அதர்வணமென்னும்) நான்கு வேதங்களிலுமுள்ள, உபநிடதமெண்ணான்கின் - முப்பத்திரண்டு உபநிஷத்துக்களினின்றும், (ஆராய்ந்து), எங்கோன்- எமது பாராசாரியராகிய வியாச முனிவர், சொன்ன - (பிரஹ்ம

ருத்திரத்தில்) திருவாய்மலர்ந்தருளியுள்ள, பொருளதனை - அர்த்தங்களை, சௌபாக்கிய குருகூறும் - (எனது சற்குருநாதனாகிய) சௌபாக்கிய குருமூர்த்தி திருவாய் மலர்ந்தருளிய, பொருளினோடு - உபதேசப்பொருளுடனே, நெஞ்சகத்தே - (என்) மனத்தினிடத்தே, அழுத்தி - பொருந்துமாறு செய்து, மருளகற்றும்படி - (எனது) விபரீத புத்தியை நீக்கும்படி, தமிழ் - தமிழ்ப் பாஷையில், அதனை - அப்பொருளை, ஒருவழி - ஒருவிதமாக, எண்ணான்காய் - முப்பத்திரண்டு செய்யுள் வடிவமாக, உரைத்தது - கூறியது, அதிசயமே அதிசயம் - (அவ்வருள் அவ்வாறு கூறியது மிக) அதிசயமானதாம்; அதிசயமானதாம், அறிகிலேன் - (அவ்வதிசயத்தின் மகிமையை இத்தன்மையதென்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு யான்) அறியாதவனா யிருக்கின்றேன், (எ - று).

மற்றும், ஏகாரங்களும் - அசைநிலைகளாம். போலும் என்பது ஒப்பில் போலியாம்.

அதிசயமே அதிசயமென்னும் அடுக்கு உவகைப்பொருளில் வந்தது.

அதிசயம் - அதிக மேம்பாடு.

இந்நூலாசிரியராகிய கருணாகர சுவாமிகள் எனது உபாசனாமூர்த்தியின் திருவருளால் வியாசமுனிவர் முப்பத்திரண்டு உபநிடதங்களையும் ஆராய்ந்து திருவாய்மலர்ந்தருளியுள்ள பிரஹ்ம



ஸூத்திரப்பொருளை எனது குருநாதன் கூறிய உபதேசப்பொருளோடு தமிழ்ப்பாஷையில் 32 செய்யுள்வடிவமாக முறையாகக் கூறினேனேயன்றி எனது கருத்தாக ஒன்றும் கூறவில்லை; ஆகையால், இந்நூற்பொருள் உபநிடதப் பொருள்களோடு எவ்வகையானும் மாறுபாடுடையதன்றாம்; இதனை உபதேச முறையுடன்கேட்டொழுகுவோர் தமது யதார்த்தசொரூபத்தையுள்ளவாறுணர்ந்து விபரீத புத்தி சிறிதுமின்றிப் பரமானந்த வடிவினராய் விளங்குவர் எனக்கூறினாரென்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

இவ்வுபநிடதப் பொருள் கூறுவதற்கரிய அதிசயமாயிருந்தமை பற்றி ‘அதிசயமே யதிசயமற் றறிகிலேனே’ என்றார்.

(1) கடவல்லி, (2) தைத்திரீயம், (3) பிரஹ்மம், (4) கைவல்லியம், (5) சுவேதாசுவதரம், (6) கருப்பம், (7) நாராயணம், (8) அமிர்தபிந்து, (9) அமிர்தநாதம், (10) காலாக்கினி ருத்திரம், (11) க்ஷுரிகா, (12) ஸர்வசாரம், (13) சுகரகஸ்யம், (14) தேஜோபிந்து, (15) தியானபிந்து, (16) பிரஹ்மவித்தியா, (17) யோகதத்துவம், (18) தக்ஷிணாமூர்த்தி, (19) ஸ்கந்தம், (20) ஸாரீரகம், (21) யோகசிகா, (22) ஏகாக்ஷரம், (23) அக்ஷி, (24) அவதூதம், (25) கடருத்திரம், (26) ஹிருதயம், (27) யோககுண்டலினீ, (28) பஞ்சப்பிரஹ்மம், (29) பிராணாக்கினிஹோத்திரம், (30) வராகம், (31) கலிஸந்தாரணம், (32) ஸரஸ்வதிரகஸ்யம் என்பன முப்பத்திரண்டு உபநிஷத்துக்களாம்.

இங்ஙனம் முத்திகோபநிஷத்துக் கூறுகின்றது.

"முமுட்சுகட்கு முத்தியின் பொருட்டு மாண்டூக்கிய உபநிஷத்தொன்றே போதும்; அப்படியும் ஞானம் சித்திக்காவிடின், தசோபநிஷத்தைப்படி; சீக்கிரம் ஞானத்தையடைந்து எனது ஸ்தானத்தையடைவாய்; அஞ்சனை குமாரா! அதனாலும் ஞானம் உறுதியாகாவிடின், முப்பத்திரண்டு உபநிஷத்துக்களை நன்றாக அப்பியாசஞ்செய்; (பந்தத்தினின்றும்) நிவிர்த்தியடைவாய்; விதேகமுத்தியிலிச்சை யுண்டாயின், நூற்றெட் டுபநிஷத்துக்களையும் பாராயணஞ்செய்" என்று முத்திகோபநிஷத்துக் கூறுவதிங் குணர்தற்பாற்றும்.

## உபநிடத மூலம் உரையுடன் முற்றுப் பெற்றது.

இந்நூலின் செய்யுளது மொத்தத்தொகை 36.

ஸ்ரீசாது - இரத்தின சற்குரு திருவடி வாழ்க.



220138 N.V.S